விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 07 வெள்ளிக்கிழமை (22.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 216

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P No :-0212225392




# ஐ.நாவின் செயற்பாட்டில் திருப்தியடைய முடியாது!

## ஹெலன் கிளார்க் குற்றச்சாட்டு

(ஜெனிவா) இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைப் பொறிமுறையில் ஐ.நாவின் செயற்பாடு குறித்து திருப்தியடைய முடியாது என தெரிவித்துள்ள ஐ.நா பொதுச் செயலாளர் பதவிக்காக போட்டியிடவுள்ள ஹெலன் கிளார்க், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்க படையினருக்கும் இடையிலான இறுதி யுத்தத்தின் போது ஐ.நா அமைப்பு வழங்கிய பங்களிப்பு போதுமானதல்ல எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஏனைய பல்கலைக்கழகங்களில் நடக்கும் மோதல்களையும் கவனத்தில் எடுங்கள்



### இரா.சம்பந்தன் பாராளுமன்றில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்) யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ்- சிங்கள மாணவர்களுக்கிடையிலான மோதல் சம்பவம் போன்று ஏனைய பல்கலைக் கழகங்களிலும் சில மோதல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அவற்றின் பின்னணியில் அரசியல் நோக்கம் இருக்குமாயின் அவற்று

23ஆம் பக்கம் பார்க்க....

## 274 கிலோ கொகேயின் மீட்பு

(கொழும்பு) பேலியகொட பகுதியில் கண்டெயினர் ஒன்றில் இருந்து 274 கிலோ கிராம் கொகேயின் போதைப் பொருள் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் மீட்கப்பட்ட அதிக தொகை கொகேயின் இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் ஒழிப்புப்

23ஆம் பக்கம் பார்க்க....


## சமல் ராஜபக்ஷ பதவி நீக்கம்

(கொழும்பு) அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும். நாடாளுமன்ற உறுப்பினருமான சமல் ராஜபக்ஷ நீக்கப்பட்டுள்ளார். இந்நிலையில்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பாரம்பரிய சிங்கள கிராமங்கள் என்று வடக்கில் எதுவும் இல்லை!

### மத்திய அரசு மீது சத்தியலிங்கம் சாடல்




(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாணத்தில் பாரம்பரிய சிங்கள கிராமங்கள் என்று எதுவும் இல்லை. இந்த நிலையில் தென்னிலங்கை அரசு என்ன காரணத்திற்காக சிங்கள மக்களை வடக்கில் குடியேற்றி அவற்றை பாரம்பரிய சிங்கள கிராமம் என அழைக்க முயல்கின்றது? நல்லிணக்கத்தை பேசிக் கொண்டு அதற்கு குந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## சிங்கள மயமாக்கலுக்கே மீள்குடியேற்ற செயலணி!

### வடக்கு முதலமைச்சர் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாணத்தின் மீள்குடியேற்றம் தொடர்பில் மத்திய அரசினால் வடக்கு மாகாண சபையை புறம்தள்ளி நியமிக்கப்பட்டுள்ள செயலணி வடக்கில் சிங்கள மயமாக்கலுக்கு ஆதரவாகவே செயற்பட போகின்றது என எச்சரித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்,

மத்திய அரசு தொடர்ந்தும் வடக்கு மாகாண சபையை புறம் தள்ளி தொடர்ந்தும் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து. மாகாண

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்-முஸ்லிம் உறவுகளை பிரிக்க சதி முயற்சி–ஜவாஹிர்

(யாழ்ப்பாணம்) தமிழ் மக்களை புறம்தள்ளி சிங்கள. முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்திற்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள செயலணி தமிழ் -முஸ்லிம் உறவுகளை பிரிக்கும் சதிமுயற்சியாகவே இருக்கும் என வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் ஜவாஹிர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது மேற்படி விடயம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும

23ஆம் பக்கம் பார்க்க....

### மாகாண சபையை புறந்தள்ளினால்

## மக்கள் போராட்டங்கள் அரசுக்கு எதிராக திரளும்

(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண சபையை புறம் தள்ளி மத்திய அரசு தொடர்ந்தும் செயற்படுமாயின் மக்களை திரட்டி போராட்டங்களை முன்னெடுப்போம் என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மத்திய அரசினால் நியமிக்கப்பட்டுள்ள வடக்கு மாகா

24ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
கணக்கீடு பகுதி-I, II



உள்ளே...

## பாடசாலை அருகே மிதிவெடி மீட்பு

(கரணவாய்) வடமராட்சி மந்திகைப் பகுதியில் புலோலி மெ.மி.த.க பாடசாலைக்கு முன்பாக மிதிவெடி ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட மிதிவெடி அவ்விடத்தில் இதுவரை காணப்படவில்லை என தெரியவந்ததுடன் புதிதாக

24ஆம் பக்கம் பார்க்க....

## யானைக்கால் நோயற்ற நாடாக இலங்கை பிரகடனப்படுத்தப்பட்டது



24ஆம் பக்கம் பார்க்க....

## வவு.நகை கொள்ளை; இளம் தம்பதி கைது

(வவுனியா) வவுனியாவில் தங்க நகை கொள்ளையில் ஈடுபட்டு வந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் இளம் தம்பதியினர் வவுனியா பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டனர். வீடொன்றில் நகைகளைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்ற போதே அவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரியவருகின்றது.

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஏல விற்பனை

எமது பாடசாலையின் பழுதடைந்த தளபாடமான B வகை உருக்கு மேசை - 01. B வகை கதிரை (மரம்) - 05. பழைய பாடத்திட்டம் புத்தகங்கள் -64. Computer Chair - 03. Window Vista Business with Each Pc - 05. SATA KNIGHT line I RVA ups - 03 என்பன 26.07.2016 அன்று காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளது. எனவே பெற விரும்புபவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அதிபர்
யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை

(5404)



## Darson இன நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு
021 222 1285

இல. 44, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(A-5261)


# சுங்க அதிகாரிகள் சங்கத்தினர் ஜனாதிபதியுடன் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

புதிய சுங்க சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் சுங்க அதிகாரிகள் சங்கத்தினருக்குமிடையே கலந்துரையாடல் ஒன்று நேற்று முற்பகல் ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

புதிய சுங்க சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பல விடயங்கள் வெளிநாடுகளின் சுங்க சட்டங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையினால் அவை இலங்கைக்கு பொருந்தாதவை என இதன்போது சுங்க அதிகாரிகள் சங்கத்தினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

தற்போது நடைமுறையிலுள்ள சுங்க சட்டத்தையும் முன்மொழியப்பட்டுள்ள புதிய சுங்க சட்டத்தையும் முறையாக ஆய்வு செய்து எதிர்வரும் மூன்று வாரங்களில் நிதி அமைச்சு மற்றும் சுங்கத்திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடி அடுத்த நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

(செ-11)


## சேவை முகவர்
### காணிகள், வீடு விற்பனைக்கு

பிறவுண் வீதி, மணிக்கூட்டு வீதி, B.M.C லேன், மணல்தறை லேன், 3 1/2, 2 1/2, 3 பரப்பு அளவுகளில் யாழ், நல்லூர் தொகுதிகளில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்

சுந்தரம் - 0774819801

(5248)


# உதவிக் கருத்தரங்கு

வரலாறு 2016 க.பொ.த. உயர்தரம்

காலம் : 2016.07.24 ஞாயிற்றுக்கிழமை -காலை 9 மணி முதல் 12 மணிவரை

இடம் : உதவும் கரங்கள், பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி.

வளவாளர் : திருமதி ராதா ஜெகதீஸ்வரன் (ஆசிரியர், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)


குறிப்பு: கடந்த கால வினாக்கள் மீட்டலும் விடையளிக்கும் முறையும் கலந்துரையாடப்படும். ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும்.

அனுசரணை: வெளிநாடு, உள்நாடு வாழ் திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவிலடி அன்புள்ளங்கள் ஆதரவில் இயங்கிவரும் திருநெல்வேலி பத்திரகாளி உதவும் கரங்கள்.

**முற்றிலும் இலவச வகுப்புக்கள் தரம் 9,10,11 க்கு கடந்த 03 வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்றது.**

(5401)

# கண்ணீர் அஞ்சலி



(5405)

அமரர்
**சுப்பிரமணியம் தண்டராசா**

எமது பாடசாலையின் பௌதிகவியல் ஆசிரியர் திரு.த.கிருபாகரன் அவர்களின் பாசமிகு தந்தையார் அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## தர்மலிங்கம் கோபிநாத்

### 22.07.2016



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தர்மலிங்கம் கோபிநாத் அவர்களின் ஓராண்டு நினைவு, அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெற்ற 4-ம் வட்டாரம் புதுக்குடியிருப்பில் இன்று (22.07.2016) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் இடம்பெறவுள்ளதால் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல் - மனைவி, மகள்
த.நீதன் (சகோதரன்) - 0773748704
த.இன்பன் (சகோதரன்) - 0044759558668

(C-5254)

# பொலிஸ் நிதிக்குற்ற மோசடி பிரிவிற்கு வீரர்களை அழைப்பதை அனுமதியேன்

## அமைச்சர் அர்ஜுன போர்க்கொடி



(கொழும்பு)


இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் உள்ளிட்ட வீரர்கள் பலரை பொலிஸ் நிதிக் குற்றப் பிரிவிற்கு அழைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப் போவதில்லை என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

விளையாட்டு சட்டமூலம் தொடர்பாக நேற்று முன்தினம நாடாளுமன்றில் உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் போட்டிகளுக்கு முன்பதாக வீரர்களை விசாரணைக்கு உட்படுத்துவதானது அவர்களை மனரீதியான தாக்கங்களுக்கு உட்படுத்தும் செயலெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயல்களால் சர்வதேச ஊடகங்கள் முன்னால் எமது வீரர்களுக்கு அபகீர்த்தி ஏற்படும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை நிதி மோசடி விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் உள்ளிட்ட முக்கிய வீரர்களிடம் விசாரணைகளை மேற்கொள்ளவிருப்பதாக அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)




# ஜெனிவா பிரேரணையின் அமுலாக்க நிலை என்ன?

## இலங்கை - ஐரோ. கூட்டத்தில் ஆராய்வு

(கொழும்பு)

**இலங்கையின் இணை அனுசரணையுடன் கடந்த வருடம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவித்தல் அல்லது சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் பிரஸல்ஸில் நடைபெற்ற இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக் குழுக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.**



பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல், வடக்கில் பொது மக்களின் காணிகளை விடுவித்தல், வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிசெய்தல், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறையினை உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கைக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான கூட்டு ஆணைக் குழுவின் 20ஆவது அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை பெல்ஜியத்தின் பிரஸல்ஸ் நகரில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சித்ராங்கனி வாகிஸ்வர மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார செயற்பாட்டு சேவையின் ஆசிய பசுபிக்கின் முகாமைத்துவ பணிப்பாளர் குன்னர் வீகான்ட் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த அமர்வானது மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருந்தது.

இக் கூட்டத்தின்போது கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பாக விரிவ்ாக ஆராயப்பட்டுள்ளது.

இதனிடையே புதிய அரசியலமைப்பு வரைபினை தயாரிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்து வரும்வேலைத் திட்டங்கள் குறித்தும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமிடையிலான கூட்டு ஆணைக்குழுவின் 21 ஆவது அமர்வு எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இரட்டைச் சம்பளம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் தில்ருக்ஸி டயஸ் விக்கிரமசிங்கவின் மாதாந்த வேதனத்தை அதிகரிப்பதற்கான யோசனையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கியுள்ளார்.

மேலும் சிறப்பு சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்கான மாதாந்த வேதனத்தைப் போலவே இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளருக்கும் வேதனம் வழங்கப்படுவதுடன், தொலைபேசிகட்டணம், எரிபொருள், அவர் வசிக்கும் வீட்டிற்கான வாடகை என்பவற்றை அரசாங்கமே செலுத்த வேண்டும் போன்ற குறிப்புகள் பிரதமரின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சரவையில் இந்த முன்மொழிவுக்கான அனுமதி வழங்கப்பட்ட பின்னரே நேற்று முன்தினம் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நளின் பெர்னாண்டோ கைது!

சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நளின் பெர்னாண்டோ நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.கடந்த அரசாங்கத்தின் காலத்தில் லக்சதொச என்ற பெயரில் இயங்கிய சதொச நிறுவனத்தின் தலைவராக நளின் பெர்னாண்டோ செயற்பட்டிருந்தார்.

இந்நிலையில் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது சதொச நிறுவனத்தின் வாகனங்களை முறைகேடான வகையில் தேர்தல் பணிகளுக்காக பயன்படுத்தியதாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்த கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவின் பொலிஸார் நேற்றுக் காலை நளின்பெர்னாண்டோவைக் கைது செய்துள்ளனர். (இ-10)

# சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட 25வீதமான பெண்களுக்கு வாய்ப்பு

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் 25 வீதமான பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன் இம்முறை தேர்தலுக்காக பல புதுமுகங்கள் களமிறங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## நிதிமோசடி பிரிவு அதிகாரிகளுக்கு

# கொலை மிரட்டல் விடுத்த அமைச்சரின் பதவி பறிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அணியில் செயற்பட்ட தென்மாகாண சபை அமைச்சர் டி.வி. உபுல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.


அவருக்குப் பதிலாக தென் மாகாண சபையின் மீன்பிடி, தரநிர்ணய, அபிவருத்தி அமைச்சராக ஹேவா வெல்லாலகே குணசேன நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.

இதற்கான நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவு அதிகாரிகளை கற்களால் அடித்து கொலை செய்வதாக பகிரங்க மேடையொன்றில் வைத்து கடந்த வருடம் முன்னாள் அமைச்சர் டி.வி. உபுல் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து அவர் மீது பொலிஸார் விசாரணை நடத்திவந்த நிலையிலேயே அவர் தமது பதவியையும் இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# தென்மாகாண சபையின் மின்சக்தி அமைச்சராக குணசேன நியமிப்பு




(கொழும்பு)

தென் மாகாண கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல் அலுவல்கள், கிராமிய கைத்தொழில், மின்சக்தி மற்றும் கிராமிய தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சராக் தென் மாகாண சபை உறுப்பினர் ஹேவா வெல்லாலகே குணசேன நியமிக்கப்பட்டார்.

அவருக்கான நியமனக் கடிதம் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் தென் மாகாண சபையின் ஆளுநர் ஹேமகுமார நாணயக்காரவால் வழங்கி வைக்கப்பட்டது. (இ-5)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





**செல்வி லக்ஸ்மன் டிலக்ஷனா**
400M தங்கப் பதக்கம்
100M, 200M 4ஆம் இடம்

**செல்வி மாணிக்கம் டாலினி**
ஈட்டி எறிதல் 4ஆம் இடம்

2016ஆம் ஆண்டு மாகாண மட்ட தடகளப் போட்டியில் கலந்து கொண்ட முல்லை வலய உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலய மாணவிகளான செல்வி லக்ஸ்மன் டிலக்ஷனா 400 M (1.08.0) தங்கப் பதக்கமும் 100M, 200M 4ஆம் இடத்தையும் பெற்று சிறந்த தடகள வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டும் செல்வி மாணிக்கம் டாலினி ஈட்டி எறிதலில் 4ஆம் இடத்தையும் பெற்று வலயத்துக்கும் கிராமத்துக்கும் தமக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள். இவர்களை மனமாற வாழ்த்துவதோடு இவர்களை இப்பெருமைக்கு ஆக்கிய உடற்கல்வி ஆசிரியை திருமதி கி.வேணுகோபாலசங்கர் அவர்களையும் உளமாற வாழ்த்துகின்றோம்.



அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திக்குழு
பழைய மாணவர்கள்
மு/உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்

## ஜமைக்கா மீண்டும் வெற்றி

கரீபியன் பிரிமியர் லீக் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் கிறிஸ் கெய்ல் தலைமையிலான ஜமைக்கா டாலவாஸ் அணி 36 ஓட்டங்களால் அசத்தல் வெற்றி பெற்றது.

பார்படோஸ் டிரிடன்ஸ் அணிக்கு



எதிராக முதலில் துடுப்பெடுத்தாடிய ஜமைக்கா டாலவாஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 195 ஓட்டங்கள் குவித் தது.

இதன் பின்னர் 196 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய பார்படோஸ் டிரிடன்ஸ் அணி ஸ்டெய்னின் வேகத்தில் தடுமாற ஆரம்பித்தது.

இதனால் அந்த அணி 17.4 ஓவரில் 159 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. ஜமைக்கா டாலவாஸ் அணி 6 வெற்றிகளுடன் 13 புள்ளிகள் பெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. (க)

## மக்கள் போராட்ட...

வசம் இருக்க, இன்னமும் அவர்கள் அகதி முகாம்களிலும், பிறர் வீடுகளிலும் தங்கி உள்ளனர். இந்த நிலையில் முல்லைத்தீவில் மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்பட்டு விட்டது என மத்திய அமைச்சர் ரிசாட் பதியுதீன் கூறி வருகின்றார். எனினும் சிங்கள முஸ்லிம் மக்களுடைய மீள் குடியேற்றம் பூரணப்படுத்தப்படவில்லை எனவும் அவர் கூறுகின்றார்.

இவை எல்லாவற்றையும் தமக்கு சார்பாக செயற்படுத்துவதற்கே குறித்த செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறுப்பினர்களான ரவிகரன், தியாகராசா, சிவநேசன் ஆகியோர் தெரிவித்தனர்.

தற்போது தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களிடையே தீர்வுத்திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அதனை குழப்பும் வகையில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே இன முறுகலை ஏற்படுத்தும் வகையில் இந்த செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் இவ்வாறான நடவடிக்கைகள் தொடருமாயின் மக்களை திரட்டி போராட்டங்களை முன்னெடுப்போம் என உறுப்பினர் பரஞ்சோதியும்,

இன பரம்பலை மாற்றியமைப்பது ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கு முரணானது என உறுப்பினர் தவநாதனும், மத்திய அரசு திணிப்பதை நாம் ஏற்றுக்கொண்டு வாய் மூடி இருப்பதால் தான் மத்திய அரசு தான் நினைத்தவற்றை தொடர்ந்தும் செய்து வருகின்றது என உறுப்பினர் அனந்தி சசிதரனும், தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களை அடுத்து தொடர்ந்து பேசிய முதலமைச்சர், வடக்கு மாகாணத்தில் மத்திய அரசு தனது அதிகாரத்தை பயன்படுத்தி எமக்கு தெரியாமல் பல்வேறு விடயங்களை செய்து வருகின்றது. பதின்மூன்றாவது திருத்தம் கொண்டுவரப்பட்ட பின்னர் எமக்கு அதிகாரங்கள் சில வழங்கப்பட்டுள்ளது என்பதை கூட மறந்து செயற்படுகின்றது என முதலமைச்சர் தெரிவித்தார். (செ-4)

# ஓராம் ஆண்டு நினைவு



## தர்மலிங்கம் கோபிநாத்

மலர்வு : 08.08.1983
உதிர்வு : 03.08.2015

எம்மை வாழவைக்க வந்த கோபு
இடையினிலே
எம்மை ஏமாற்றி விட்ட காலன்
கலங்கி நிற்கின்றோம் கோபு
உங்கள் உறவுகள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பின் - மனைவி, மகள், அம்மா,
மாமா குடும்பம் (உதயசேகர்)





வடமராட்சி அல்வாய் வேவிலந்தை அம்மன் ஆலய தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்கள் கடந்த 18 ,19 ஆம் திகதிகளில் இடம்பெற்ற போது...


(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)


**UNIVERSITY OF JAFFNA**
**FACULTY OF GRADUATE STUDIES**
**NOTICE**

All the academic programmes of Faculty of Graduate Studies will commence on 22.07.2016.

Registrar (சி/5256)


# மரண அறிவித்தல்



## திரு. ஆறுமுகம் அம்பலவாணர்
## (கணக்காளர் லண்டன்)

காரைநகர் களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 50, சுவிசுத்தாராம , வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. ஆறுமுகம் அம்பலவாணர் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு.ஆறுமுகம் (சட்டத்தரணி), திருமதி லட்சுமியின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் திரு.எஸ். வி. முருகேசு , திருமதி இராசம்மாவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னம்மா(மலேசியா), திருமதி இராசரத்தினம் மனோன்மணி, காலஞ்சென்ற திருமதி அமிர்தலிங்கம் சரோஜினியின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு ஜெயரட்ன மலர்ச்சாலையில் இன்று (22.07.2016) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 4.00 மணிக்கு பொரளை கனத்தை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வெள்ளவத்தை,
கொழும்பு.

தகவல்:- ச.இராசரத்தினம் 011 234 4045 ,K. அமிர்தலிங்கம் 077 267 9779
S.V.M குணரத்தினம் 077 732 5418

## இராசி பலன்

22.07.2016
(ஆனி 29, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03மணிக்கு
திருதியை பின்னிரவு2.37மணிவரை
அவிட்டம் பிற்பகல் 5.12 மணிவரை
சுபநேரம் 6.01-7.31 மணிவரை
இராகுகாலம் 10.31-12.01மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம், பூசம் | | சூரி சுக் புத |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** ஆனந்தமான நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** கவலைகள் தீர கணபதியை வழிபடவேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும்,தேகநலனில் அக்கறை தேவை.

**சிம்மம்:** மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், வழிபாட்டால் மகிழ்ச்சி கூடும், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி:** செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கடன்பாக்கிகள் திடீரென வசூலாகலாம், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வாகன சுகமுண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் பெறுவீர்கள், வியாபார விரோதம் விலகும், விரதம்,வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பினால் சந்தோசமடைவீர்கள், காரிய அலைச்சல் ஏற்படலாம்.

**மீனம்:** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

# சிறை நிரப்புவதில் மாணவர்களை ஆசிரியர்கள் மிஞ்சுகின்றார்களா?

## நீதிபதி இளஞ்செழியன் கேள்வி



சிறைச்சாலையை நிரப்பும் செயற்பாட்டில் மாணவர்களை ஆசிரியர்கள் மிஞ்சுகின்றார்களோ? என கேள்வி எழுப்பி கவலை வெளியிட்டுள்ள யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், ஆசிரியரோ மாணவரோ எவரும் சட்டத்தை கையில் எடுத்துச் செயற்படக் கூடாது என அறிவுறுத்தியுள்ளார்.

ஆசிரியர்கள் மாணவர்கள் மீது குற்றச் செயல்கள் புரிவதாக தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் வந்த வண்ணமுள்ளன. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பாடசாலைகள், பாடசாலை வளாகங்கள், கல்லூரி வளாகங்கள் என்பன குற்றச்செயல் புரிவதற்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசமல்ல. சட்டத்தைக் கையில் எடுத்துச் செயற்படுபவர்கள் சட்டவாட்சிக்கு எதிரானவர்களாகவே கருதப்படுவார்கள். மாணவர்கள் தொடர்பிலான குற்றச் செயல்களுக்கு மேல் நீதிமன்றம் கடுமையான போக்கையே எடுக்கும் என்று போதை வஸ்து தொடர்பான வழக்கின் பிணை மனு மீதான விசாரணை ஒன்றின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

யாழ்.குடாநாட்டில் போதை வஸ்து மற்றும் வாள்வெட்டு குற்றங்கள், கோஷ்டி மோதல்கள், தெருச் சண்டித்தனம், கொள்ளை, குழு மோதல்கள் என பலவித குற்றச்சாட்டுக்களில் பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்தக் குற்றச் செயல்களுக்கு எதிராக இறுக்கமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதனால், தற்சமயம் மாணவர்கள் குற்றங்கள் புரிவது குறைவடைந்து காணப்படுகின்றது.

ஆனால் ஆசிரியர்கள், மாணவர்கள் மீது குற்றச் செயல்கள் புரிவதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. இது குறித்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் வந்த வண்ணமுள்ளன. ஆசிரியர்கள் மாணவர்கள்ள அடிக்கின்றார்கள். மாணவர்களைத் தாக்குகின்றார்கள். மாணவிகள் மீது பாலியல் குற்றம் புரிகின்றார்கள் என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகள், பாடசாலை வளாகங்கள், கல்லூரி வளாகங்கள் என்பன குற்றச் செயல் புரிவதற்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசமல்ல. குற்றச் செயலைச் செய்த எந்தவொரு நபரும், தண்டனையில் இருந்து தப்ப முடியாது. இத்தகைய குற்றச் செயல்களுக்கு மேல் நீதிமன்றம் கடுமையான போக்கையே எடுக்கும்.

சிறுவர்கள், மாணவ, மாணவிகள் மீது குற்றம் புரியும் சம்பவங்களை, சமாதானமாக இணங்கி வைக்க முடியாது. அக்குற்றச் செயல்கள் பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும்.

மாணவிகள் மீது பாலியல் வதை புரியும் ஆசிரியர்களுக்கு பத்து ஆண்டுகளுக்கு மேலாக சிறைத் தண்டனை விதிக்க வேண்டும் என தண்டனைச் சட்டக்கோவை மேல் நீதிமன்றத்திற்குப் பரிந்துரைக்கின்றது.

மாணவர்கள் மீது ஆசிரியர்கள் தாக்குதல் நடத்துவதை சிறுவர் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் பாரதூரமான குற்றமாகக் கருதுகின்றது. இந்தக் குற்றத்திற்கு மேல் நீதிமன்றத்தினால் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்க முடியும்.

இதே குற்றத்தை சிறுவர்களைக் கொடுமைப்படுத்திய குற்றமாக தண்டனைச் சட்டக் கோவை சுட்டிக்காட்டி, சிறைத்தண்டனை வழங்க வேண்டும் என்று மேல் நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்கின்றது என சுட்டிக் காட்டிய நீதிபதி யாழ்ப்பாண சமூகத்தில் மாணவனுக்கும் ஆசானுக்கும் இடையில் குரு சிஷ்யன் என்ற ரீதியில் இன்றும் 95 வீதம் உறவு திறம்பட காணப்படுகின்றது. ஆனால் 5 வீதமான ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் செயற்பாடுகளே யாழ். குடாநாட்டின் கல்விச் சமூகத்தை வருத்திக் கொண்டிருக்கின்றன. இந்த விவகாரத்தில் சட்டத்தைப் பற்றி தெரியாது என நீதிமன்றில் விவாதம் செய்ய முடியாது.

எனவே ஆசிரியர்கள் மாணவிகளைத் தொடவே கூடாது. ஆசிரியர்கள் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தவே கூடாது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஏட்டுக் கல்வியை மட்டுமல்ல ஒழுக்கத்தையும் சேர்த்துப் போதிக்க வேண்டும். அதே வேளை, ஆசிரியர்களை சிரம் தாழ்த்தி வணங்கும் குருவாக மாணவர்கள் அனைவரும் மதிக்க வேண்டும்.

பாடசாலைகளில் அல்லது பாடசாலை வளாகத்தில் குற்றச் செயல்கள் இடம்பெற்றால், உடனடியாக அவை பற்றி பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டும். ஆசிரியர்கள், அதிபர்களோ அல்லது வலயக் கல்வி அலுவலகம் உட்பட கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உயரதிகாரிகளோ குற்றச் செயல்களை மூடி மறைக்கக் கூடாது.

பாடசாலையின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற போர்வையில் குற்றச் செயலை மூடி மறைப்பது தண்டனைக்குரிய குற்றச் செயலாகும் என்பதை அனைவரும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியது, மாணவிகள் மீது பாலியல் வதை புரிந்தது என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் மேல் நீதிமன்றத்திற்கு வரும் ஆசிரியர்களுக்கு இலகுவில் பிணை வழங்கப்படமாட்டாது. இத்தகைய குற்றச் செயல்களுக்கு மேல் நீதிமன்றம் கடுமையான போக்கையே எடுக்கும்.

யாழ்ப்பாண சிறை நிரப்புப் போராட்டத்தில் மாணவர்களைப் பின்தள்ளி ஆசிரியர்கள் முன்னிலையில் இருக்கின்ற வெட்கக் கேடான செயற்பாடு தற்சமயம் அரங்கேறுகின்றது. சட்டத்தைக் கையில் எடுத்து வன்செயலில் ஈடுபடும் எந்த நபரும், சட்டவாட்சிக்கு எதிரானவர்கள். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். தெரியாமல் செய்யும் தவறு மன்னிக்கப்படும். என நீதிபதி இளஞ்செழியன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)



யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் நடத்திய விதவைகள் தினம் அண்மையில் நடைபெற்றது.இதன்போது நிகழ்விற்கு வருகை தந்த லண்டன் மன்செஸ்ரர் கூட்டுறவுக்கல்லூரி அதிபர் டாக்டர் திருமதி சிவா அம்மையாருக்கும் தமிழ்நாடு (மதுரை) மேரிடோக் கல்லூரி விரிவுரையாளர் டாக்டர் செல்வி தமிழரசிக்கும் யாழ்.கூட்டுறவுக் கல்லூரி பொதுச்சட்ட விரிவுரையாளர் சோதிநாதன் கூட்டுறவின் ஒப்பந்த கூட்டத்தில் எதிர்மறை நிறுவல்கள் கொண்ட தத்துவத் தொகுப்பொன்றினை வழங்குவதை படத்தில் காணலாம்.

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுவிழா நாளை

பாரதி பாலர் கல்விப் பூங்கா சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் பாரதி பாலர் கல்விப் பூங்கா முன்றலில் இடம்பெறும்.க.திருநாவுக்கரவு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா,சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மா.பத்மராஜ், வலி.தென்மேற்குப் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஏ.ஜெபநேசன்,ஜே/138 கிராம உத்தியோகத்தர் எம்.அருணன், மானிப்பாய் கிழக்கு ஜே/138 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.செரினா, மானிப்பாய் கிழக்கு ஜே/138 சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி ரி.அனுசலா,மானிப்பாய் கிழக்கு ஜே/138 குடும்ப நல உத்தியோகத்தர் ஜே.மல்லிகா தேவி,முன்பள்ளி இணைப்பாளர் திருமதி யோ.கேமநளினி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## முன்னெச்சரிக்கையும் ஒத்திகைப்பயிற்சியும்

வேலணைப் பிரதேச செயலகபிரிவில் உள்ள கிராம சேவையாளர் பிரிவில்(ஜே/36 நயினாதீவு தெற்கு) இன்று வெள்ளிக்கிழமைமு.ப 10.30மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும். இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ




## 'பாரம்பரியத்தைத் தேடி' சிந்தனைக்களம்

யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபை கிராம அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் "பாரம்பரியத்தைத் தேடி" எனும் தொனிப்பொருளினாலான சிந்தனைக்களம் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப2மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## 'அன்புக்காய்' முதலிடம்



யாழ்.மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட சிறுவர் நாடகப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் "அன்புக்காய்" என்ற சிறுவர் நாடக அணி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதனை நாடகத்துறை ஆசிரியர் து.அயூரன் நெறியாள்கை செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பனை அபிவிருத்தி வார தொடக்க நிகழ்ச்சி இன்று

வடமாகாண விவசாய, கமநல சேவைகள்,கால்நடை அபிவிருத்தி,கூட்டுறவு அபிவிருத்தி ,உணவு வழங்கல், நீர்வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும்சுற்றாடல்அமைச்சுஆகியவற்றின் வடமாகாணபனைஅபிவிருத்தி வாரம் 22.07.2016 தொடக்கம் 28.07.2016 வரை இடம்பெறும்.

பனை அபிவிருத்தி வாரத் தொடக்க நிகழ்ச்சி இன்று 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

அத்துடன் பனை அபிவிருத்திக் கண்காட்சி இன்று 22 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும்.

கூட்டுறவு அமைச்சர் பொஜங்கரநேசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

கண்காட்சித்திடலில் தினமும் பனை உற்பத்திப் பொருட்களின் விற்பனையும் மாலை நேரத்தில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ-3)

## வெண்கட்டி வட்டம் நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

உலகப்புகழ் பெற்ற ஜேர்மன் நாடக ஆசிரியர் பெட்டோல் பிறெக்ற் இன் வெண்கட்டி வட்டம் நாடகமானது நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் திறந்த வெளி அரங்கில் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

தமிழ் மற்றும் சிங்கள கலைஞர்களின் கூட்டிணைவில் அரங்கேறவுள்ள இந்நாடகமானது குழந்தை மா.சண்முகலிங்கத்தினால் மொழிபெயர்க்கப்பட்ட நாடகப் பிரதியினை அடிப்படையாக வைத்து புகழ்பூத்த சிங்கள நாடக நெறியாளர் பராக்கிரம நிரியெல்ல மற்றும் யாழ். பல்கலைக்கழக நாடக அரங்கியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளர் க.ரதீதரன் ஆகியோரின் நெறியாள்கையில் மக்கள் களரியினால் தயாரிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## அமீரின் பிறந்ததினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே பேச்சுப்போட்டி

### விண்ணப்பங்களை அனுப்பலாம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான அமிர்தலிங்கத்தின் 89 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படவுள்ள பேச்சுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு,மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

தரம்-6 தொடக்கம் 8 வரையான கீழ்ப்பிரிவு மாணவர்கள் தமிழர் தாயகத்தின் தங்கத்தலைவன்,மன்னுயிர் வாழ தன்னுயிர் தந்த தலைவன், அமிர்தலிங்கம் அமிழ்தினும் இனியவன் என்ற தலைப்புக்களில் 3 நிமிடங்கள் பேச வேண்டும்.

தரம்-9 தொடக்கம் 11 வரையான மத்திய பிரிவு மாணவர்கள் தந்தை செல்வாவின் ஆணையின் தளபதி அமிர்தலிங்கம்,ஈழத் தமிழரின் இனிய காவலன் அண்ணல் அமிர்தலிங்கம்,தமிழரசுக்கட்சியின் தங்கத்தலைவன் என்ற தலைப்புக்களில் 5 நிமிடங்கள் பேசுதல் வேண்டும்.

தரம்-12 தொடக்கம் 13 வரையான மேற்பிரிவு மாணவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மாணம் வாழ உயிர்தந்த அண்ணல்,வடக்கு, கிழக்கு வாழவழி காட்டித் தந்தவன், எதிர்க்கட்சித் தலைவனுக்கு இலக்கணம் ஆனவன் என்ற தலைப்புக்களில் 7 நிமிடங்கள் பேசுதல் வேண்டும்.

மேற்குறித்த ஒவ்வொரு பிரிவிற்கும் உட்பட்டவர்கள் தங்கள் பிரிவிற்குரிய தலைப்புக்களில் ஏதேனும் ஒரு தலைப்பை தெரிவு செய்து குறித்த நேரத்துக்குள் பேச வேண்டும்.

முற்கூட்டியே தயார்படுத்தி மனனம் செய்து பேசப்படல் வேண்டும்.

பங்குபற்றுவோர் பாடசாலை சீருடையுடன் பங்குபற்ற வேண்டும். மேற்படி நிபந்தனைகளைப் பின்பற்றி பங்குபற்ற விரும்புவோர் முழுப்பெயர், வகுப்பு, பிறந்ததிகதி, தொலைபேசி இல. என்பவற்றை தெளிவாக எழுதி பாடசாலை அதிபர்ஊடாக 10.08.2016இற்கு முன் கிடைக்கக்கூடியவாறு போட்டி ஏற்பாட்டாளர், அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை,மூளாய் ,சுழிபுரம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். வடக்கு மாகாண பாடசாலையில் கல்வி கற்கும் எந்தவொரு மாணவரும் விண்ணப்பிக்கலாம்.



போட்டிகள் 21.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும் என்பதுடன் போட்டி நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஒவ்வொரு பிரிவிலும் வெற்றியீட்டும் முதல் 3 போட்டியாளர்களுக்கும் தங்கப்பதக்கமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். (இ-5)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## WALK- IN- INTERVIEW

## Faculty of Arts

Walk in interview for appointments to the following posts will be held at the **Board Room of this University on the dates and the time indicated against the posts.**

**28.07.2016**

| Posts | Time |
|---|---|
| Posts of Temporary Lecturer/Temporary Tutor in Media Studies/ philosophy/ Psychology | At 11.00 a.m |
| Posts of Temporary Lecturer/Temporary Tutor in Hindu Civilization/ Hindu philosophy/ Translation Studies/Christian Civilization/ Sociology | At 12.00 noon |
| Posts of Temporary Lecturer/Temporary Tutor in Tamil/ Political Science/ Geography/ Economics | At 2.30 p.m |

**29.07.2016**

| Posts | Time |
|---|---|
| Posts of Temporary Lecturer/Temporary Tutor/ Temporary Instructor in Fine Arts / Archaeology/ History/ Information Communication Technology/ Linguistics | At 9.30 a.m |
| Posts of Temporary Lecturer/Temporary Tutor/ Temporary Instructor in Planning/ Drama & Theatre Arts/ Education/ English Language Teaching | At 1.30 p.m |

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview.

**Candidates who are awaiting the results of the final degree examination are also called upon for the above Walk in Interview.**

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time schedule above with relevant certificates, NIC and **self prepared application.**

Registrar
University of Jaffna
21.07.2016

(C-5255)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:46 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ தனியார் லண்டன்<br>தொ.இ: B/6107 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 7<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/வங்கியாளர் லண்டன்<br>தொ.இ: G/6108 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 13 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BA/ அரசதொழில்<br>தொ.இ: B/6109 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 1/2<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/6110 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BBA, CIMA/ கணக்காளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/6111 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 17செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/6114 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 13செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6112 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 38செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/6118 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்



*ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லாமல்*
*பொன்றாது நிற்பதொன்று இல்*

பொய்யா மொழிப்புலவரின் இக்குறளுக்கு விளக்கம் தருவது எமது ராஜி மிஸ்ஸின் வாழ்க்கை. காலையில் பாடசாலைக்கு வரும் போது மலர்ந்த முகத்துடன் "குட்மோனிங்" என்று வரவேற்கும் பாங்கே வீட்டிலிருந்து வரும் சோர்வை நீக்கி எமக்கு புத்துணர்வை உண்டாக்கி விடும். பூக்களை மிக விரும்பும் எமது பிரதி அதிபரும் பூப்போன்ற மென்மையான மனங்கொண்டவர்.

அதனால் இன்று மணிவிழாக்காணும் அவர், அவரின் ஓய்வுபெறும் இன்றைய நாள் வரை சுறுசுறுப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கின்றார்.

பாடசாலையில் நடைபெறும் சகல செயற்பாடுகளிலும் அவரின் பங்களிப்பு எந்த வடிவிலாவது இருப்பது வெளிப்படை. இதன் உச்ச வெளிப்பாடு "சரஸ்வதி பூஜை" காலம். பூஜை இறுதி நாள் நிகழ்வில் சமையல் அறையிலேயே அவரைச் சந்திக்க முடியும்.

தனது கையால் சமைத்து அனைவருக்கும் பரிமாறி மகிழ்வார். அதேபோல் வெள்ளிக்கிழமை பிரார்த்தனையில் மிக ஈடுபாட்டுடன் கலந்து கொள்வார். ஆசிரியர்களும் மாணவர்களும் சமயம் தொடர்பான சிறிய சொற்பொழிவை ஆற்றும் திறன் பெற வைத்தவர். எழுத வேண்டுமானால் இன்னமும் எழுதிக் கொண்டே போகலாம்.

இவ்வாறான பல இனிய இயல்புகள் கொண்டவர் திருமதி. இராசலட்சுமி இராஜசேகரம் அவரின் ஓய்வுக்காலத்தில் அவர் மிகுந்த மகிழ்வுடன் குடும்பத்தினருடன் நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்போம் யாம்.

***ஆசிரியர் நலன்புரிச் சங்கம்***
***யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை,***
***பண்டத்தரிப்பு.***



## திருமதி இராஜலட்சுமி இராஜசேகரம்

## B.A.Dip in Edu.SLTS.I

பிரதி அதிபர்
யாழ்/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை
ஆரம்பக்கல்வி:- யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்
இடைநிலை:-யாழ்/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை
உயர் கல்வி:- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சேவை விபரம்:
வ/ கனகராயன்குளம் மகா வித்தியாலயம்:- 15.02.1982-31.03.1989
யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை:- 01.04.1989-22.07.2016

(C-5258)

எண்பத் திரண்டில் தொடங்கிய
ஆசிரியப் பணியில்
எண்ணற்கரிய
மாணவர்க்கு வழிகாட்டி
சீரிய அறிவுத்திறன்
மனப்பாங்குகள் ஊட்டி
செம்மையாய்ச் செதுக்கிச்
செழுமைப்படுத்திய
அரும்பணியால்
நிறை புகழ் கொண்ட
சேவையால்
எம் உளங்களை
நிறைத்து எமக்கெலாம்
முன்மாதிரியான
பண்புளங்கொண்ட
செம்மல் ராஜிமிஸ்
பார்போற்ற என்றும்
பெருமையுடன் வாழ்க!

**வாழ்த்துவோர்:**
**ஆசிரியர் கழகம்**
**யா/ பண்டத்தரிப்பு**
**பெண்கள்**
**உயர்தரப்**
**பாடசாலை,**
**பண்டத்தரிப்பு**

# பொருளாதார மத்திய நிலையம் அமைவதற்கான வளங்கள் அனைத்தும் ஓமந்தையில் உள்ளது

## திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தவேண்டும்- சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதே பொருத்தமானது என்று ஜனநாயக ரீதியாக முடிவெடுக்கப்பட்டு விட்டாலும் சில சுயநலன் சார்ந்த சக்திகள் மேலும் குழப்பங்களையும் இழுபறியையும் உருவாக்கிய வண்ணம் உள்ளனர் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையிலா? அல்லது தாண்டிக்குளத்திலா? அமைப்பது என்ற இழுபறி ஏற்பட்டபோது அதற்கு ஜனநாயக ரீதியாக தீர்வு காணப் போவதாகக் கூறி வடக்கு மாகாணசபை உறுப்பினர்களையும், வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்த ஒரு கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூட்டியிருந்தார்.

அந்தக் கூட்டத்தில் இந்த விடயம் விரிவாக ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஜனநாயக ரீதியில் முடிவை எட்டுவதாகக் கூறி அது வடக்கு மாகாண முதலமைச்சரின் கையில் ஒப்படைக்கப்பட்டது. முதலமைச்சர் சம்பந்தன் ஐயாவின் கருத்தினை ஏற்று, மாகாணசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தினைக் கேட்டறிந்தார். இதன் பிரகாரம் ஓமந்தையில் இது அமைவதே பொருத்தமானது என பெரும்பாலானவர்கள் வாக்களித்தனர். இது இத்துடன் நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், இதன் பின்னர் நாடாளுமன்றக்குழு கூடி இந்தக் காணிகளைப் பார்வையிடுவதாகவும், ஓமந்தையிலேயே இதனை நிறுவுவதற்கும் முடிவெடுக்கப்பட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா முதலமைச்சரை சந்தித்து நீங்களே இதற்கான முடிவை எடுங்கள் என்றும் கூறியிருந்தார்.

இன்று எந்த காரணத்திற்காக மத்திய அமைச்சர்கள் இதனை எதிர்க்கிறார்கள் என்பது இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது. இது இவ்வாறு இருக்கத்தக்கதாக பிரதி அமைச்சர் மீண்டும் ஒருமுறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவை கூட்டி இது விடயம் குறித்து முடிவெடுக்க வேண்டும் என்று கோருவதன் நோக்கமென்ன?

ஓமந்தை பிரதேசம் பேய்கள் உலாவும் இடம். அந்த இடத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க முடியாதென அமைச்சர் ஹரிசன் குறிப்பிட்டிருந்தார். அந்த மக்கள் தான் ஆட்சி மாற்றத்துக்கு வாக்களித்து ஹரிசனும் ஒரு அமைச்சராக இருப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் என்பதை அமைச்சர் ஹரிசன் மறந்துவிடக்கூடாது.

வடக்கு மாகாண மக்கள் அனைவருக்கும் பயன்படக் கூடியவாறு இந்த சந்தை அமைய வேண்டும் என்பதையும், எதிர்காலத்தில் இந்த சந்தையை மையமாக வைத்து அது தம்புள்ள போன்ற ஒரு நகரமாக வளரவேண்டும் என்ற தேவையையும் கவனத்திலெடுத்து, அதற்கான காணி மற்றும் தேவையான வளங்கள் அனைத்தும் ஓமந்தையில் உள்ள தென்பதையும் கவனத்தில் எடுத்து இந்த திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சருடனான பேச்சுவார்த்தையை எதிர்க்கட்சி தலைவர், முதலமைச்சர் ஆகியோர் முன்னெடுக்க வேண்டும்.


கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய வடக்கு மாகாண விவசாய சங்கங்கள் அனைத்தும் மற்றும் வடக்கு மாகாணத்தைச் சார்ந்த பொருளாதார நிபுணர்களும் யாழ்.பல்கலைக்கழகத்தின் பொருளியல் வல்லுநர்களும் இதற்கு சிறந்த இடம் ஓமந்தையே எனப் பரிந்துரை செய்துள்ளனர். இதற்குப் பின்னரும் இது தொடர்பான தேவையற்ற குடுமிப்பிடி சண்டை தொடர்வதை வடக்கு மாகாண நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




# பேருந்தின் சில்லுக்குள் சிக்குண்டது மோ.சைக்கிள்

## பயணித்த நபர் மயிரிழையில் உயிர்தப்பினார்

(விசுவமடு)



தனியார் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியவிபத்தில் மோட்டார் சைக்கிள் பேருந்தின் சில்லுக்குள் சிக்குண்டதில் பலத்த சேதமடைந்தது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் பரந்தன் – முல்லை பிரதான வீதியிலுள்ள விசுவமடு 12 ஆம் கட்டைப் பகுதியில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து முத்தையன்கட்டு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தனியார் பேருந்தும் அதே வழியில் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து இடம் பெற்றதாக கூறப்படுகின்றது.(2-295)

# முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம்

கிளிநொச்சி பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் பங்குபற்றலுடன் உருத்திரபுரம் சிவநகரில் முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

சிவநகர் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற உள்ள இந்த நிகழ்விற்கு உரிய ஏற்பாடுகளை சிவநகர் முதியோர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

அரசாங்க மருத்துவர்கள் பங்குபற்றும் இந்த நிகழ்வில் சிவநகர் மற்றும் அயற் கிராமங்களைச் சேர்ந்த முதியோர்கள் பங்குபற்ற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மருத்துவ கிளினிக்குகளுக்கு செல்பவர்களும், புதிதாக மருத்துவ பரிசோதனை செய்ய விரும்புபவர்களும் பங்கேற்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)



(குருமன்காடு)

வவுனியாவில் மக்கள் திட்ட வலையமைப்பு ஒன்றியத்தின் கலந்துரையாடல் காணி மற்றும் விவசாய மறுசீர் அமைப்பின் ஏற்பாட்டில் மக்கள் செயற்பாட்டினூடாக பலமானதொரு அமைப்பை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் இவ்வமைப்பின் வடக்கு மாகாண இணைப்பாளர் நா.தேவகிருஸ்ணன் தலைமையில் வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் ஒன்று திரண்டு அனைத்தினதும் நல்வாழ்வுக்காக பொது மக்கள் அதிகாரத்தை எவ்வாறு வலுப்படுத்த முடியும் அல்லது நிறுவ முடியும் என கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சிந்தக்க ராஜபக்ஷ, செயலாளர் பி.ஆர்.ஜெயதிலக அமைப்பின் உறுப்பினர் உப்பாலி மற்றும் வடக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் எஸ்.சிவா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் விவசாய அமைப்புக்கள்,பொது அமைப்புக்கள் மற்றும் மகளிர் அமைப்பைச் சார்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# கல்விமாணிப் பட்டக் கற்கைநெறியின் 2ம் வருட பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்பட்டு வரும் 2013/2015 கல்வியாண்டுக்கான கல்விமாணிப் பட்டக் கற்கை நெறியின் பகுதி -II பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறியினை கிளிநொச்சிப் பிராந்திய நிலையத்தில் தொடர்கின்ற பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகைமை பெற்ற ஆசிரிய மாணவர்கள் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கிளிநொச்சிப் பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவங்கள் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள பிராந்திய நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது. குறித்த ஆசிரிய மாணவர்கள் அனைவரும் உரிய படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி உரிய கட்டணத்தை வங்கியில் வைப்புச்செய்த பற்றுச்சீட்டினையும் இணைத்து எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.(2-277-15)

# குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி மாணவர்களின் பாவனைக்கு கையளிப்பு

வவுனியா மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் பாவனைக்கு குடிநீர் இயந்திரத்தொகுதி வடக்கு மாகாண சுகாதார அமைச்சரினால் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. பாடசாலையின் அதிபர் மரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாகாண 'சுகாதார அமைச்சரினால் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் வவுனியா நகர கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா, வலயக் கல்விப் பணிமனையில் அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களெனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவனும், இயங்கராவூரை சேர்ந்த லண்டனில் வதியும் செல்வரத்தினம் பிரபாகரனின் நிதியுதவியுடன் அவரது தந்தையின் ஞாபகார்த்தமாக அமைக்கப் பெற்ற இந்த இயந்திரத் தொகுதியில் நாளொன்றுக்கு 2000 லீற்றர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பாவனைக்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கையில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டம் இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் முதலிடத்தில் உள்ளது.

இதனை கருத்தில்கொண்டு லண்டனில் வதியும் செல்வரத்தினம் பிரபாகரனின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இந்த வடிகட்டிய சுத்தமான குடிநீர் வழங்கும் செயற்றிட்டம் எதிர்காலத்தில் வவுனியா மாவட்டத்தின் ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும், அமைச்சரின் இவ்வருடத்திற்கான மாகாண நிதியொதுக்கீட்டில் வவுனியா வடக்கில் 2 பாடசாலை களிலும் ,செட்டிகுளம் பகுதி யில் 3 பாடசாலைகளிலும் இதே மாதிரியான குடிநீர் இயந்திரத்தொகுதிகள் பொருத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.(2-281)


# பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு எழுதுகருவிகள்

(தண்ணீரூற்று)

2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களையும் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களையும் சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டுமென கூறி வாழ்த்தும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு குமுழமுனை கலைவாணி சனசமூக நிலையத்தின் தலைவர் வே.இரத்தின சபாபதி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி த.ஸ்ரீபுஸ்பநாதன், விசேட விருந்தினர்களாக சமூக அமைப்புக்களின் நிர்வாகிகளும் மு/குமுழமுனை மகா வித்தியாலய ஆசிரியர்கள், அதிபர், கிராம நலன் விரும்பிகள் கலந்து கொள்ளவுள்ளனர். மேற்படி பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு கலைவாணி சனசமூக நிலைய ஏற்பாட்டாளர்களினால் இலவசமாக எழுது கருவிகள் வழங்கப்படவுள்ளன. (2-295)

# வலம்புரி செய்தியை அடுத்து மாணவர்களுக்கு மூன்றாம் கட்டமாக உதவிகள் வழங்கப்பட்டன






(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலய மாணவர்களுக்கு வட்டு இந்து வாலிபர் சங்கம் மூன்றாம் கட்டமாக கற்றல் உபகரணங்கள், பாடசாலை சீருடைத்துணிகள், துவிச்சக்கர வண்டிகள் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளான புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலை, மாங்குளம் மகா வித்தியாலயம், பாண்டியன் குளம் மகா வித்தியாலயம், சிறாட்டிகுளம் அ.த.க பாடசாலை, கல்விளான் அ.த.க பாடசாலை மற்றும் உயிலங்குளம் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு 125 புத்தகப்பைகள், 23 மாணவர்களுக்கான சீருடைத்துணிகள் மற்றும் 8 துவிச்சக்கர வண்டிகள் என்பன யாழ். இந்துக் கல்லூரி அவுஸ்திரேலியா பழைய மாணவர்கள் சங்கத்தினால் வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக வழங்கி வைத்துள்ளனர்.

இந்நிகழ்வில் அவுஸ்திரேலியா விக்ரோறி, யாழ். இந்து பழைய மாணவர்கள் சங்க பிரதிநிதி த.ஆதவன், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க அங்கத்தவர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இது தொடர்பாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க தலைவர் கு.பகீதரன் கருத்து தெரிவிக்கையில், கடந்த வருடம் வலம்புரி பத்திரிகையில் துணுக்காய் கல்வி வலய மாணவர்கள் கல்வி கற்பதில் எதிர்கொள்ளும் இன்னல்கள் தொடர்பான செய்தி பிரசுரிக்கப்பட்டதை தொடர்ந்து இதனை கவனத்தில் கொண்ட எமது சங்கம் இவ் வருட முதற் பகுதிகளில் இரு கட்டங்களாக பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், காலணிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சியாக குறிப்பிட்ட பாடசாலை அதிபர்கள், வட்டு இந்து வாலிபர் சங்கத்திடம் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைவாக இதனை யாழ். இந்துக்கல்லூரி அவுஸ்திரேலியா விக்ரோறி பழைய மாணவர்கள் சங்கத்தினர் சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள், சீருடைத் துணிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என்பனவற்றை அன்பளிப்பாக வழங்கி வைத்துள்ளனர்.

வலம்புரி பத்திரிகை போன்று தாயகத்தில் வெளிவரும் நாளிதழ்களும் எம் மக்களின் பிரச்சினைகள், அவற்றை தீர்ப்பதற்கான பொறிமுறைகள் என்பனவற்றை வெளியுலகுக்கு கொண்டு வர முற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (2-15)

# கிளி.மாவட்டத்தில் பாடசாலைகளுக்கு செல்லாத மாணவர்கள் மீது நடவடிக்கை தொடர்கின்றன

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை செல்லாது பாடசாலை நேரங்களில் வீடுகளிலும் வீதிகளிலும் வீண்பொழுது போக்கும் மாணவர்களை இனங்கண்டு அவர்கள் மீதும் இதற்கு காரணமாகவிருந்த பெற்றோர்கள் மீதும் சட்ட நடவடிக்கைகள் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், பொலிஸார் ஆகியோரினால் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களில் பல சிறுவர்கள் பாடசாலை செல்லாதமைக்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர்களே காரணமாக விருந்து செயற்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் சிறுவர்களைப் பயன்படுத்தி சட்ட விரோத மதுபான விற்பனை, போதைவஸ்தை இடம்மாற்றுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் இதற்கு அச்சிறுவர்களுடைய பெற்றோர்களும் பெற்றோர்களுக்குப் பழக்கமானவர்களும் காரணமாக இருப்பது என தெரியவந்துள்ளது.

சில பகுதிகளில் பாடசாலை செல்ல வேண்டிய சிறுவர்கள் பாடசாலை நேரங்களில் பெரியவர்களுடன் வேலைக்குச் சென்று அவர்களுடன் சேர்ந்து தீயபழக்கங்களுக்கு அடிமையாகின்றார்கள் எனவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளில் பாடசாலை செல்லாத மாணவர்களை அவர்களது வீடுகளுக்குத் தேடிச் சென்று கதைக்கும் ஆசிரியர்களுடன் பெற்றோர்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைக் கருத்திற்கொண்ட சிறுவர் நன்னடத்தை திணைக்கள அதிகாரிகள், சிறுவர் மேம்பாட்டு அதிகாரிகள், பொலிஸார் ஆகியோர் இணைந்து நீதிபதியின் உத்தரவுக்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை செல்லாத மாணவர்களை அடையாளம் கண்டு அழைத்துச் சென்று நீதிமன்றத்தில் நிறுத்தி அவர்களுக்கான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோர்களின் மீதும் நீதிமன்றம் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நடவடிக்கைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரவுள்ளதாக சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

# வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்களை நிரந்தரமாக நியமிக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

## பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள 7 கிராமங்களுக்கு நிரந்தரமாக வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையால் தமது தேவைகளை பூர்த்தி செய்வதில் பொது மக்கள் பல்வேறுஇடர்பாடுகளை நாளாந்தம் சந்திப்பதாகத் தெரிவிக்கின்றனர்.




இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் 90 கிராமங்கள் காணப்படுகின்றன.

இதில் கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள 42 கிராமங்களில் 7 கிராமங்களுக்கு நிரந்தரமாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையால் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அல்லலுறுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனடிப்படையில் கரைச்சி பிரதேசத்தில் ஸ்கந்தபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி ஆகிய மூன்று சமுர்த்தி வங்கிகளில் 42 கிராமங்களுக்கான பண முத்திரை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால் குறித்த சில கிராமங்களுக்கு உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படாமையால் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கிக்குட்பட்ட அக்கராயன் குளம், புதுமுறிப்பு, உருத்திரபுரம் வடக்கு ஆகிய கிராமங்களுக்கும் வட்டக்கச்சி சமுர்த்தி வங்கிகளுக்கு உட்பட்ட சிவிக்சென்ரர், திருவையாறு மற்றும் கிளிநொச்சி சமுர்த்தி வங்கிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் கிளிநகரம் ஆகிய கிராமங்களுக்கு நிரந்தரமாக சமுர்த்தி உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லை.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக எண்ணிக்கையான கிராமங்களைக் கொண்ட கரைச்சி பிரதேசத்தில் இவ்வாறு அதிகமான வெற்றிடங்கள் நிலவுவதாக பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

ஆதலால் சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தில் கவனமெடுத்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ-2)

# முழங்காவிலில் பழங்கள், மரக்கறிகள் பதனிடும் நிலையம் திறந்து வைப்பு



கிளிநொச்சி மாவட்டம் முழங்காவிலில் பழங்கள், மரக்கறிகள் பதனிடும் நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் பிறைஸ் கட்செசன், இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன், வடக்கு கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் இணைந்து இதனைத் திறந்துவைத்துள்ளனர்.

போரின் காரணமாகச் செயற்பாடுகள் அற்றிருந்த விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் கடந்த ஆண்டில் இருந்து மீளவும் இயங்கிவருகிறது. இச்சங்கத்தில் ஆண்களும் பெண்களுமாக 500 வரையான அங்கத்துவர்கள் உள்ளனர். இவர்களினால் உற்பத்தி செய்யப்படும் பப்பாசிப் பழங்கள் தற்போது ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. ஏற்றுமதித் தரங்களுக்கு அமையாத பழங்கள் மற்றும் கறிவேப்பிலை, முருங்கை இலை போன்றவற்றை உலர்த்திப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் பொருட்டே இப்பதனிடும் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்து பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய கிறீன் ஃபீல்ட் பிளான்ரேஷன்ஸ் என்ற தனியார் நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

கூட்டுறவு - தனியார்துறை இணைந்த பங்கேற்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தில், கூட்டுறவின் பங்களிப்பாக பதனிடும் நிலையத்தின் கட்டடத் தொகுதி 6.4 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை அவுஸ்திரேலிய அரசாங்கம் உலக தொழிலாளர் நிறுவனத்தின் ஊடாக வழங்கியுள்ளது. தனியார் நிறுவனத்தின் பங்களிப்பாக 5 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

கூட்டுறவு - தனியார் பங்கேற்புடன் உருவாக்கப்பட்ட வடக்கின் முதலாவது தொழிலகம் என்ற சிறப்பை இப்பதனிடும் நிலையம் கொண்டுள்ளது. திறப்பு விழாவில் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் இந்திரா உடாவ, வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செலவராசா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கனகம்மா நல்லதம்பி, கிறீன் ஃபீல்ட் பிளான்ரேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவர் செ.முத்துசாமி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள். (2)

# மகா இலுப்பலமையில் உலர் வலயத்தின் விவசாய வயல் வாரம் 4 நாட்களுக்கு


மகா இலுப்பலமையில் அமைந்துள்ள வயற் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து 4 நாட்களுக்கு வயல்வாரம் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளதாக வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி மேலதிக பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில். இந்நிகழ்வில் புதிதாக வெளியிடப்பட்டுள்ள பயிர் இனங்கள் புதிய விவசாயத் தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாயங்கள் தொடர்பான ஏனைய தரவுகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வயல் வாரத்தில் விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் , தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச கோவை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு போதிய விளக்கமளிக்க ஏற்பாடாகியுள்ள அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இவ் வயல் வாரத்தில் கலந்து கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் பயனடைந்து கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார். (2)

# ரவிராஜ் படுகொலை; ஏழு பேருக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு



(கொழும்பு)

**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கில், 7 சந்தேக நபர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இந்தப் படுகொலை வழக்கில் சந்தேக நபராக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதீப் சந்திம தாக்கல் செய்த மீளாய்வு மனு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் தரப்பில் முன்னிலையான மூத்த அரச சட்டவாளர் சுகர்சினி ஹேரத், இந்த வழக்குத் தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் முடிந்துள்ள நிலையில் அடுத்த சில நாட்களில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக நீதிபதியிடம் தெரிவித்தார்.

பழனிச்சாமி சுரேஸ், ஹெற்றியாராச்சிகே பிரதீப் சந்தன குமார, காமினி செனிவிரத்ன, பிரதீப் சந்திம, சரன் எனப்படும் சிவகாந்தன் விவேகானந்தன், பபியன் ரோயஸ்டன் துசேன், சம்பத் முனசிங்க ஆகிய சந்தேக நபர்களுக்கு எதிராகவே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (இ-10)

## எந்த குழுவிலும் அர்ஜூன் உள் வாங்கப்படவில்லை

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் வியாபார ஒப்பந்தங்கள் தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் எந்த ஒரு குழுவிலும் உள்வாங்கப்படவில்லை என சர்வதேச வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் சிங்கப்பூர், சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் செய்து கொள்ளவுள்ளதாகவும், இது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட குழுவில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநரை நியமிக்கவில்லை என்றும் அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை குறித்த வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான குழுவில் கலாநிதி சமன கெலேகம, மங்கள யாப்பா, கலாநிதி ஹரித விக்ரம நாயக்க, கே.ஜே.விஜயசிங்க, வர்த்தக சபை மற்றும் வர்த்தக சங்கங்களை சேர்ந்த பிரதிநிதிகளே நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-10)

## ஹோட்டலில் கத்திகுத்து ஊழியர் உயிரிழப்பு!

மினுவாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவம் ஒன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா மாவட்டம் மினுவாங்கொடையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

ஹோட்டலில் பணியாற்றும் இரண்டு ஊழியர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பாக மாறிய நிலையில் ஒரு ஊழியர் தனது சக பணியாளரை கத்தியால் குத்தி படுகொலை செய்துள்ளார். (இ-10)

## உணவு விசமானதால் சிறுமி பலி;ஐவர் பாதிப்பு

அநுராதபுரம், கஹட கஸ்திகிலியப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈத்தல்வெட்டுனுவெவப் பகுதியில், உணவு விசமானதால் ஏழு வயதுடைய சிறுமி பலியானதுடன், ஒரே குடும்பத்தைச்சேர்ந்த ஐவர், நேற்று முன்தினம் புதன்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த சிறுமி, கஹடகஸ்திகிலிய - ஈத்தல்வெட்டுனுவெவ முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எம்.மஹீஸா (வயது 7) எனவும் குறித்த சிறுமியின் தாய் மற்றும் மூன்று பிள்ளைகள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில், பலாக் கொட்டையும் தாமரைக் கிழங்கும் சமைத்துச் சாப்பிட்டதையடுத்து அனைவருக்கும் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டுள்ளது.

வயிற்று வலியின் காரணமாகக் குளிர்பானம் அருந்தியதாகவும் அதனையடுத்து வாந்தியும் மயக்கமும் ஏற்பட்டதன் பின்னர் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (இ-10)

## பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களை வீட்டுவேலைக்காக அமர்த்திய விமல் வீரவன்ச

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் துறை அமைச்சராக பதவி வகித்த விமல் வீரவன்ச, இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு பணிக்கு இணைத்து கொள்ளப்பட்ட பெண் ஊழியர்களை தனது வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஏற்கனவே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளருமவடமத்திய மாகாண சபை உறுப்பினருமான வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச தனது உறவினர்களுக்கு காணி மற்றும் வீடுகளை வழங்கியது, கட்சியில் உள்ள தனக்கு நெருக்கமானவர்களுக்கு அரச பணத்தை முறைகேடாக பயன்படுத்த இடமளித்தமை உட்பட சில முறைப்பாடுகள் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் சம்பந்தமாக பல தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளதாக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-21

(21.07.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

பகுதி II

01. 1. வியாழன் 2.வியாழன் 3.விண்வெளி
4.கிரகம் 5.ஜுபிடர் 6.ஐந்தாவது 7.வாயுக்களால்

02. 1.வெளிநோயாளர் பிரிவு 2.தேசிய கல்வி நிறுவகம்
3.இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 4.கல்விப் பொதுத்தராதரம்

03. 1.கானல்நீர் 2.முல்லை 3.மாணிக்கவிழா 4.ஐம்பூதம்

04. 1.பாஸ்டர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்
2.சந்தைக் கட்டடங்களையும் அதன் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

05. 1.காலம் தரித்து நிற்காது
2.பயந்தவனை எல்லாம் பயமுறுத்தும்
3.அனுபவமற்றகல்வி பயனற்றது

06. 1.அவமதித்தல் 2.எதிர்கொள்ளல் 3.வெளிவருதல்

07. 1.நீலம் 2.கரி

08. 1.அடக்கம் 2.பொய்மை 3.கானம்

09. சீவனஞ் செய் பொல்லாங்கு செய்யான்
யடித்தாரார் கற்பகத்தை தொட்டாரார் சொல்லியமு விலங்கு

10. 1.பட்டம் 2.தொலைக்காட்சி

11. 1.நான் சென்று வருகிறேன்

12. 1.ஜன்னல் 2. உதடுகள்

13. I will come tomorrow

14. சரியான வாக்கியங்களுக்கு புள்ளிகள் வழங்குக.

15. 1.நாற்பத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று ஆறு 2.XIII, XV
3.10000+2000+000+80+7
4.i. 2 ii.3
5.ரூபா 36.00 6.பி.ப.10.30 7.108 மீற்றர் 8.85
9.6போத்தல்கள் 10.9 தடவைகள்

16. யாப்பகூவ தலதாமாளிகை சிகிரியா சந்திரவட்டக்கல்

17. 1) 3 2)3 3)2 4)4 5)1 6)3 7)1 8)3
9)2 10)3 11)2 12)2 13)3 14)3 15)2 16)1
17)3 18)2 19)4 20)1

## வரி ஏய்ப்பு செய்வோரின் சொத்துக்களை அரசுடைமையாக்க தீர்மானம்

### அமைச்சர் பைசர் அறிவிப்பு



வரி செலுத்தாமல் ஏய்ப்பு செய்பவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளின் செயலாளர்கள் மற்றும் ஆணையாளர்களுக்கு இதுபற்றிய ஆலோசனையை வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் ஒனறை மேற்கொண்ட அமைச்சர் பைசர் முஸ்தபா, அதற்கு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு இந்த அறிவிப்பை விடுத்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு வருமான வழிகளில் பிரச்சினைகள் ஏற்பட்டால் வரி செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஆலோசனைகளையும் தாம் வழங்கியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த மாதத்திலிருந்து உள்ளூராட்சி சபைகளின் வருமானத்தை 25 சதவீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# பூகோள வெப்பமயமாதலிலிருந்து புவியைக் காப்போம்

மண்ணைத் தோண்டி பொன்னைத் தேடினான் அன்று. விண்ணைத் தோண்டி மண்ணைத் தேடுகிறான் இன்று. கள்ளமில்லா உள்ள முடனே உயர் கலாசாரம் கண்டான் அன்று. உள்ள மெல்லாம் கரவு கொண்டு மானிடம் தொலைத்தான் இன்று. ஆம் விஞ்ஞானத்தின் விந்தைதான் இது.

இன்று இருபத்தொராம் நூற்றாண்டில் காலடி பதிக்கும் நம் மானிட சமூகமானது எத்தனையோ புதுப்புது விஞ்ஞானக் கண்டுபிடி ப்புக்கள் மூலமாக மிக விரைவாக வளர்ந்து வருவது நாம் அனைவரும் அறிந்ததே. ஆல் போல் தளைத்து, அறுகு போல் வேரூன்றி அகிலத் தையே ஆட்டிப் படைக்கும் விஞ்ஞானத்தின் ஆணிவேர் போன்றதே விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் ஆகும். ஆனால் அவ் ஆணிவேரையே மறந்து பாதையில் செல்வது இன்று கவலைக்குரியது.

இன்றைய நவீன உலகிலே சனத்தொகை அதிகரிப்பு காரணமாக பல விஞ்ஞான முன்னேற்றத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. வளர்ந்து வரும் மானிட சமூகத்திற்கு ஆணிவேராக இருப்பதே விஞ்ஞானமாகும். விஞ்ஞானத்தின் விந்தைகள் பல நடைபெறும் உலகிலே மானிடரும் அதற்கு ஏற்றாற் போல் வாழ பழகிக்கொள் கின்றனர். விழுதுகள் ஆயிரம் ஆனாலும் விளைந்தது வித்து ஒன்றிலன்றோ என்ற பாரதி கூற்றுக்கமைய விஞ்ஞானமே மூலாதாரமாகி ஆய கலை கள் 64 உம் தோற்றம் பெற்றன. வளர்ந்து வரும் இன்றைய விஞ்ஞான உலகிலேயே சனத்தொகை அதிகரி ப்புக்கு காரணமாக அனைத்து செயற்பாடுகளும் நகரம யமாக்கலுடன் பூகோள மயமாதலுக்கு உட்படுகின்றன. இன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிடையே காணப்படும் பாரிய சூழல் பிரச்சினை பூகோள மயமா தல் ஆகும். விஞ்ஞானம் வளர முன் மானிடர் வாழ்ந்த காலத்திலே அவர்கள் மிக எளிமையாக வாழ்க்கையை வாழ்ந்தன் காரணமாக இவ்வாறான மிகச்சிக்கலான பிரச்சினைகளை பூமி எதிர் நோக்கவில்லை.

ஆதி கால மனிதன் சூழலு டன் மிக நேயமாக சூழலுடன் ஓர் நண்பராக வாழ்ந்து வந்தான். அவன் எந்த வித தீய இடையூ றுகளையும் சூழலுக்கு விளைவி க்கவில்லை. சூழலிலிருந்து பயன்களைப் பெறுவதுடன் அதற்குக் கைமாறாக சூழலை நேசித்து பாதுகாத்தான். நாட்கள் உருண்டோடின. பல்வேறுபட்ட தொழில் துறை கள்



வளர்ச்சியடைந்தன. இதன் காரணமாக மனிதன் சூழலி லிருந்து அநேக நன்மைகளைப் பெறுவதோடு அதற்கு தீங்கு விளைவிக்க நேர்ந்தது. இதன் விளைவால் இன்று புவியின் வெப்பநிலை அதிகரித்து பூகோள வெப்ப மயமாதல் எனும் பாரிய சூழல் பிரச்சி னையை புவி எதிர்கொள்கிறது.

உலகம் வாழவும் வளரவும் விஞ்ஞானம் அவசியம். ஆனால் அவ்விஞ்ஞானம் தன் ஆணிவேரையே மறந்து பயணிப்பது வேதனைக்குரியது. இன்றைய நாட்களிலே பூமியா னது அதிகளவில் மாசடைந்து வருகிறது. அதற்குரிய கார ணங்கள் எண்ணிலடங்கா. மிகப் பிரதானமானது குளிரூ ட்டிகள் ,





குளிர் பதனாக்கிகள் என்பவற்றிலிருந்து வெளிவரும் சூழலுக்கு பாதகமான விளைவை ஏற்படுத்தும் குளோரோபுளோரோ காபன் வாயு ஆகும். இது வளிமண்டல ஓசோன் படையை பாதித்து சூரியனிலிருந்து வெளியிடப்படும் நச்சுத்தன்மை வாய்ந்த புற ஊதாக் கதிர்களை பூமிக்குள் இலகுவாக நுழைய விடுகிறது CFC வாயுவால் ஓசோன் மண்டலத்திலே விரிசல்கள் ஏற்படுகின்றன. இவ்விரிசல்கள் காரணமாக புற ஊதாக்கதிர்கள் பூமிக்குள் நுழைந்து மானிடருக்கும், ஏனைய ஜீவராசிகளிற்கும் பல பாதகமான விளைவுகளை கொடுக்கிறது. இதன் மூலமாக மனிதர்களிடையே தோல்புற்று நோய் ஏற்பட்டு மனுக்குலம் அழியும் ஆபத்து உண்டு. அதே போல் பிற உயிரினங்களும் இந் நஞ்சுக் கதிர்வீசலால் பூமிக்குள் இருக்க முடியாது உயிரிழக்கின்றன.

மானிடா!! இன்றே எழுந்திடு. உன் பூமித்தாயைக் காப்பாற்ற இன்றே விரைந்திடு!! செல்.... புவிக்கு இழைக்கப்படும் அநியாயங்களைக் கண்டு பொங்கிடு!! அத்தோடு மட்டும் நின்று விடாதே. அதை நிவர்த்தி செய்வதற்கான வழியை இன்றே அறிந்திடு!!!

துருவப் பிரதேசங்களிலே பூகோள வெப்பமயமாதலின் காரணமாக பனிப்பாறை மிக விரைவாக உருகுகின்றன.

இதனால் கடல் நீர் மட்டம் விரைவாக அதிகரிக்கிறது. சில நாடுகள் இதன் காரணமாக பாரிய பிரச்சினையை



எதிர்கொள்கின்றன.

தீவுகள் நீரில் மூழ்கடிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. மானிடர் என்ற ரீதியில் இவ் உலகைப் பாதுகாத்து பண்படுத்தி பராமரிப்பது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.வேதாகமத்திலே மிக அழகாக கூறப்பட்டுள்ளது. ஏதேன் தோட்டத்தை பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் அங்கு மனிதரை குடியிருக்கச் செய்தார். இவ் வார்த்தையை கேட்ட பின்னும் நாம் இப் பூமியை அழிப்பது தகுமா? சொல் நெஞ்சமே சொல்.

பூமியானது பூகோளவெப்பமுறுதலின் காரணமாக பல பாரிய பிரச்சினைகளை தினமும் அனுபவித்து வருகிறது. அதிலே வாழும் நாம் அதற்கு சுமையாக இருத்தல் ஆகுமா? வாகனப்புகைகள், குப்பைகளை எரிப்பதால் வரும் புகைகள், தொழிற்சாலையிலிருந்து வெளிவிடப்படும் நச்சு வாயுக்கள் என்பன காரணமாகவும் சூழல் வெப்பநிலை அதிகரிக்கப்படலாம். நச்சுப்புகைகள் மூலமாக சூழலுக்கு கந்தகவீரொட்சைட், காபனோரொட்சைட் என்பன விடுவிக்கப்படுகின்றன. இவை மழை நீருடன் கலந்து அமில மழை போன்ற பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

வீட்டுக்கழிவுகளை சிறந்த முறையில் அகற்றாமல் அவற்றை எரிப்பதால் அதிலிருந்து உருவாகும் நச்சுப் புகைகள் வளிமண்டலத்துடன் கலந்து சூழல் வெப்பநிலையை அதிகரிக்குச் செய்கிறது.

விஞ்ஞானத்தின் அபரிமித வளர்ச்சியின் காரணமாக இன்று பல தொழிற்சாலைகள் வானுயர்ந்து நிற்கின்றன. விஞ்ஞான வளர்ச்சியினால் நன்மைகள் கிடைப்பது போன்று தீமையான விளைவுகளையும் இப்பூமி எதிர்நோக்குகிறது. தொழிற்சாலைகளினுள்ளே நடைபெறும் இரசாயனத் தாக்கங்களின் காரணமாக் வெளிவிடப்படும் நச்சுத் தன்மையான இராசயன பதார்த்தங்கள் சூழலுடன் கலக்கப்படுவதுடன் வெளிவிடப்படும் நச்சுப் புகைகளும் சூழலுக்கு ஆபத்தை விளைவிக்கின்றன. இதனால் மக்கள் மத்தியிலே தோல் புற்றுநோய், சுவாசப்புற்றுநோய் எனும் பாரிய சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் சூழல் வெப்பநிலை அதிகரிப்பதுடன் அங்கிகளின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைகிறது.

விஞ்ஞான வளர்ச்சியின் மற்றுமொரு பாரிய விளைவு காடழிப்பு ஆகும். இன்று மனிதன் பல தரப்பட்ட தேவைகளுக்காக காடழிப்பு பணியில் ஈடுபடுகின்றான். பல புதிய தொழிற்சாலைகளின் நிர்மாணிப்பிற்க்ாகவும் பாதை அமைப்பு வேலைத்திட்டங்களுக்காகவும் இன்று காடுகள் அழிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. காடுகளை அழிப்பதன் காரணமாக சூழலில் குளிர்ச்சித்தன்மை இழக்கப்படுவதுடன் மழை வீழ்ச்சி குறைகின்றது. இதன் காரணமாக வரட்சி நிலவி பல உயிரினங்கள் அழிகின்றன. இது மட்டுமா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் மூலமாகவும் பாரிய அணுகுண்டு பரிசோதனைகள் மூலமாகவும் வெளிவிடப்படும் நச்சுக் கதிர்வீசல்கள் பூமியை அதிகளவில் பாதிக்கின்றன.

போட்டி மிகுந்த இன்றைய உலகிலே மனிதன் பிழைத்து வாழ்வது ஆச்சரியத்திற்குரிய விடயமாகும். அவ்வாறாக மானிட சமூகமானது பல காலம் நிலைத்து வாழ வேண்டுமெனில் பூமியை எம் தாய் போல் பாதுகாப்பது அவசியம். மனிதராக இப்பூமியிலே அவதரித்த எம் ஒவ்வொருவருக்கும் பல பொறுப்புக்கள் உண்டு. அவற்றில் தலையாயது நாம் வாழும் இப் பூமியை காப்பது.

எனவே மானிடரும் பிற உயிர்களும் நிலைத்து வாழ வேண்டுமானால் நாம் சூழலுக்கு நேயமானதை செய்தல் வேண்டும். குளிரூட்டி சாதனங்கள்,



வளிப்பதனாக்கிகளை பயன்படுத்துவதை குறைத்து இயற்கையான இன்பத்தை பெற முயற்சித்தல், அத்துடன் வீட்டுக் குப்பைகளை எரிப்பதை விடுத்து சூழலுக்கு நேயமான விதத்தில் அவற்றை உரமாக்கல், தொழிற்சாலைகள், வாகனங்களிலிருந்து அளவுக்கதிகமாக புகைகள் வெளியிடப்படுவதை தடுப்பதற்காகச் சில இரசாயன பதார்த்தங்களை பயன்படுத்தி அவற்றின் வெளியேறலை தடுத்தல். மிக முக்கியமாக காடழிப்பு சேனைப்பயிர்ச் செய்கையை நடத்துவதை குறைத்து சூழலுடன் ஒத்து வாழப்பழகுதல், தேவையற்ற விதத்தில் வெளியேற்றப்படும் நஞ்சுகளின் பயன்பாட்டை குறைத்து சூழலைப் பாதுகாப்பது அவசியம்.

உலகம் வாழவும் வளரவும் விஞ்ஞானம் அவசியம். ஆனால் அவ் விஞ்ஞானம் தம் கருவூலத்தை மறந்து பயணிக்காது சூழலுடன் ஒத்து ஒழுகின் எதிர்காலத்தில் இப் பூமி வளம்பெறும் எனவும் விஞ்ஞானத்தை வளப்படுத்தி பூமியைக் காக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள விஞ்ஞானத்தை வாழ்த்துவதோடு மட்டுமல்லாது நாமும் வாழ்வோம். நம்மைச் சார்ந்த விலங்குகள், பறவைகள் , மரங்கள் மற்றும் அனைத்து பொக்கிஷங்களையும் விசேடமாக அப்பூமித்தாயையும் பாதுகாத்து வாழப்பழகுவோம்.

றொ.அன்றியா சாந்தனா
உயிரியல் பிரிவு மாணவி
யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 165

கிரிக்கெட்டிற்கான உலகக் கிண்ணத்தை அதிக தடவைகள் வென்ற நாடு எது?

புதிர் 165 இற்கான விடைகளை 01.08.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி. (செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 164 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

பரிசுபெறுபவர்
கே. இராஜகோபால்
கந்தசுவாமிகோயிலடி,
வட்டுக்கோட்டை.

புதிர் 164க்கான கேள்வியும் விடையும்:

உலகின் மிகப் பெரியபனிப்பாறையின் பெயரென்ன?
ஐஸ்பேர்க் B-15A(Iceberg B-15A)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 165

சரியான விடை:-........................................
முழுப்பெயர்:-........................................
முகவரி:-........................................
தொ.பே. இல:........................................
கையொப்பம்:........................................

# இந்திய - சீன எல்லையில் 100 பீரங்கிகள் நிறுத்தம்

## இந்தியாவில் முதலீடு செய்வதை குறைப்போம் என சீனா மிரட்டல்

(பீஜிங்)

**சீன இராணுவம் அவ்வப்போது ஊடுருவி வருவதால் இந்திய-சீன எல்லையில் 100 போர் பீரங்கிகளை பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக இந்திய இராணுவம் நிலை நிறுத்தியுள்ளது.**



இதற்கு சீன ஊடகங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதுகுறித்து சீனாவின் அரசு ஊடகமான "குளோபல் டைம்ஸ்" வெளியிட்டுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்தியாவில் சீன நிறுவனங்கள் அதிக அளவில் முதலீடு செய்ய விரும்புகிறது. இந்தச் சூழ்நிலையில், இந்திய இராணுவம் 100 போர் பீரங்கிகளை நிலை நிறுத்தியிருப்பது மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எல்லையில் பீரங்கிகளை நிறுத்திவிட்டு சீனாவின் முதலீடுகளை அதிகரிக்க இந்தியா விரும்புவது நகைப்புக்குரியதாக உள்ளது. பீரங்கிகளை நிறுத்தியிருப்பதன் எதிரொலியாக இந்தியாவில் முதலீடு செய்ய வரும் சீன நிறுவனங்கள் இருநாடுகளுக்கும் இடையே அரசியல் நிலைத்தன்மை இல்லாமல் போய்விட்டதோ என நினைத்து பின்வாங்கும் நிலை உருவாகும். எல்லைப்பகுதியில் சீன இராணுவத்தின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதை முறியடிப்பதற்காகவே இந்திய இராணுவம் பீரங்கிகளை நிலை நிறுத்தியுள்ளது. இவ்வாறு அந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது. (இ-10)

## அடுத்த ஐந்தாண்டுகளில் ஏழைகளுக்கு பத்து இலட்சம் வீடுகள் அமைக்கப்படும்

### பட்ஜெட்டில் அறிவிப்பு

தமிழகத்தில் அடுத்த ஐந்தாண்டுகளில் ஏழைகளுக்காக 10 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று 2016-2017ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தாக்கல் செய்தார். அதில் உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு.

அடுத்த ஐந்தாண்டுகளில் ஏழைகளுக்காக 10 இலட்சம் வீடுகள் கட்டப்படும். அடுத்த ஓராண்டில் ரூ.420 கோடியில் சூரியசக்தி மின்சக்தியுடன் கூடிய 20 ஆயிரம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 3.50 இலட்சம் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் அடுத்த ஓராண்டில் வழங்கப்படும். அடுத்த ஓராண்டில் 5.35 இலட்சம் மாணவர்களுக்கு இலவச மடிக்கணனி வழங்கப்படும் என ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார். (இ-10)

## கச்சதீவு விவகாரம்; வலுக்கும் எதிர்ப்புகள்

இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை மீளவும்பெற்றுக்கொள்ள பாராளு மன்றத்தின் இரு அவை களிலும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. மக்களவை உறுப்பினர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர். குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள வட சென்னை தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் டி.ஜி.வெங்கடேஷ் பாபு,

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றனர். தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை களை மீறும் வகையில் இலங்கைக் கடற்படையினர் அத்துமீறலில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 15ஆம் திகதி நான்கு தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் இலங்கையுடன் செய்து கொள்ளப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை மீளப்பெற்றுக் கொள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க இந்திய வெளி விவகார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள் ளார்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள நாமக்கல் மக்களவைத்தொகுதி அ.தி.மு.க உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு கச்சதீவு தாரைவார்க்கப்பட்டதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக முதலமைச்சர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பாராளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் இல்லாமல் இலங்கைக்கு கச்சதீவு தாரைவார்க்கப்பட்டுள்ளது. இது சட்டப்படி செல்லுபடியற்றது.

எனவே, கச்சதீவை மீட்க பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் மத்திய அரசு தீர்மானம் கொண்டு வர வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இதே வேளை, குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள இராமநாத புரம் மக்களவைத் தொகுதி அ.தி.மு.க உறுப்பினர் ஏ.அன் வர்ராஜா,

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து கைது செய்தும் கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களைத் தாக்கி துன்புறுத்தியும் வருகின்றனர்.

தமிழக மீனவர்களின் துயரத்திற்குப் பிரதான காரணமே வெளிவிவகார கொள்கையின் தவறான கையாளுகைதான்.

எனவே, தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு மத்திய அரசு உடனடியாகத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## அரை நிரந்தர வீட்டை அமைக்க நிதி இல்லை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பல கிராமங்களில் அனர்த்த முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வீடுகள் முற்றுப்பெறாத நிலையில் அரைகுறையாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்குறிப்பிட்ட கிராமங்களில் மீளக்குடியேறிய வீடுகள் வழங்கப்படாத நிலையில் உள்ள பல வயோதிபர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான அரை நிரந்தர வீடுகள் கொடுப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அதற்குப் பல பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்படி தெரிவு செய்யப்பட்ட அப்பயனாளிகளுக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று முதற்கட்டமாக 30 ஆயிரம் ரூபா பணம் கொடுக்கப்பட்டது.

இப்பணத்திணைக்கொண்டு அனர்த்த முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகம்என்பனஇணைந்து வழங்கப்பட்ட அளவுத் திட்டத்திற்கு அமைவாக வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

மிகுதிப்பணம் தருவார்கள் என எண்ணி பயனாளிகள் சிலர் வழங்கப்பட்ட பணத்திற்கு மேலாக கடனைப் பெற்று வீட்டை முற்று முழுதாக கட்டி முடித்தனர் என்பதுடன் சிலர் அரைகுறையாக விட்டுள்ளனர்.

ஆனால் 30 ஆயிரம் ரூபா பணம் கொடுக்கப்பட்டு 3 மாதங்கள் கடந்தும் இதுவரை மிகுதிப்பணம் அப் பயனாளிக்கு கிடைக்கவில்லை.

இது தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு அப் பயனாளிகள் அலைந்தும் இதுவரை அவ்வீட்டுத்திட்டம் தொடர்பில் எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை.

எனவே அரைநிரந்தர வீட்டுத்திட்டம் என்ற பெயரில் ஏமாற்றப்பட்ட தமக்கு வீட்டுத் திட்ட மிகுதிப்பணத்தைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என பயனாளிகளால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.(இ-5-64)

### திருமுறை மனனப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம் இல. 36, கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டிக்கு பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டி தரம் 1,2 என பாலர்பிரிவிலும் தரம் 3,4 எனகீழ்ப் பிரிவிலும் நடத்தப்படவுள்ளன.

பாலர் பிரிவிற்கு "நத்தார் படை ஞானன்பசு", "பொன்னார் மேனியனே" ஆகிய இரு திருமுறைகளும்


கீழ்ப்பிரிவிற்கு "பித்தாபிறை சூடிபெருமானே", "மற்றுப்பற்று எனக்கு இன்றி நின்திருப்பாதமே" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 27 ஆம் திகதியாகும். பரிசில்கள் எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம், இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் இன்று முதல் 3.30 மணி முதல் 6மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரகரும் பரீட்சைச் செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.(இ-5)

## வடி-மோ.சைக்கிள் விபத்து

### ஒருவர் படுகாயம்



முன்னுக்குப்பின் சென்ற மோட்டார் சைக்கிளும் வடிரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்துச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறை- யாழ்ப்பாண வீதியில் உள்ள கரணவாய் கிராமிய வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. இதில் கலைமதி, புத்தூர் மேற்கைச் சேர்ந்த கனகலிங்கம் ஜெயலிங்கம் (வயது- 36) என்பவரேபடுகாயமடைந்தவராவார்.

நெல்லியடியில் இருந்து யாழ். நோக்கிச்சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வைத்தியசாலைப் பக்கம் திரும்ப முற்பட்டபோது பின்னே வந்தவடிரகவானுடன்விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-5-60)

## கணக்கீடு பகுதி-I தொடர்ச்சி கொழும்பு றோயல் கல்லூரி

வினா எண் 29, 30 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.
சாரதி உற்பத்திக் கம்பனி 02 உற்பத்தி பிரிவுகளையும், ஒரு சேவை பிரிவையும் கொண்டது.
முதலாம் கட்ட மேந்தலை பகிர்வின் பின்னர் கம்பனியின் தரவுகள் வருமாறு.

| | உற்பத்திபிரிவு | | சேவைப்பிரிவு சிற்றுண்டிச்சாலை |
|---|---|---|---|
| | கதிரை | மேசை | |
| மேந்தலை கிரயங்கள் | ரூ 500 000 | ரூ 350 000 | ரூ 200 000 |
| முதற்கிரயம்-அலகிற்கு | 4 450 | 6000 | -- |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 20 | 30 | -- |
| இயந்திர மணித்தியாலங்களின் பாவனை | 1160 | 1500 | -- |
| நேர் ஊழிய மணித்தியாலங்களின் பாவனை | 1000 | 2350 | -- |
| திட்டமிட்ட உற்பத்தி அலகு | 290 | 470 | -- |

நிறுவனம் உற்பத்தி கிரயத்துடன் 20% வீத இலாபம் சேர்த்து விற்பனை விலை குறிக்கின்றது.

(29) கம்பனி இயந்திர மணித்தியால அடிப்படையில் மேந்தலைக் கிரயத்தினை உள்ளடக்குமாயின் கதிரையொன்றுக்கான உற்பத்திக் கிரயம் யாது?

1) ரூ 5450 2) ரூ5000 3) ரூ 6000
4) ரூ 6450 5) ரூ 2000

30) கம்பனி நேர் ஊழிய மணித்தியால அடிப்படையில் மேந்தலைக்கிரயத்தினை உள்ளடக்கி மேசையொன்றுக்கான கிரயத்தினை கணிக்குமாயின் மேசையொன்றின் விற்பனை விலை யாது?

1) ரூ 5400 2) ரூ 7000 3) ரூ 6500
4) ரூ 7500 5) ரூ 8400

வினா எண் 31 தொடக்கம் 50 வரையானவற்றுக்கு சுருக்கமாக விடையளிக்க

31) நிதிக் கணக்கீட்டின் நியதிச் சட்டகத்தின் படி நிதிக் கூற்றுக்களின் பணக் கணியஞ்சாரா பண்புகள் 02 இனை குறிப்பிடுக.

32) மூலதன பாதீட்டு நுட்பத்தில் ஒன்றான தேறிய நிகழ்கால பெறுமதி (Net Present Value), முதலீடு மீளளிப்பு கால முறையினை (Pay Back period) விட எவ்வகையில் சிறந்தது. 02 தருக.

33) சப்பாத்துக்களை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றின் 02 தொடர் மாதங்களுக்குரிய தரவுகள்.

| | ஜனவரி | பெப்ரவரி |
|---|---|---|
| விற்பனை வருமானம் ரூ | 210 000 | 285 000 |
| இலாபம் | 21 000 | 36 000 |

i. விற்பனைக்கான பங்களிப்பு வீதம் யாது?
ii. மாதமொன்றுக்கான மொத்த நிலையான கிரயம் யாது?

34) நிதிக் கூற்றுக்களில் நிகழ்வொன்றை ஏற்பாடாக அங்கீகரிப்பதற்கான நிபந்தனைகள் 02 இனை தருக.

35) துஷார கொம்யுனிகேஷன்ஸ் போட்டோகொபி (photo copy) இயந்திரமொன்றை ரூ 60 000 ற்கு கொள்வனவு செய்வதினால் எதிர்பார்க்கின்ற காசு சேமிப்புக்களும் 10% வீத கழிவு காரணியில் கழிவிடப்பட்ட வீதங்களும் வருமாறு.

| ஆண்டு | தேறிய காசு | 10%வீத கழிவுக்காரணி வீதம் |
|---|---|---|
| 1 | ரூ 50 000 | 0.91 |
| 2 | 40 000 | 0.83 |
| 3 | 20 000 | 0.75 |

தேறிய நிகழ்கால பெறுமதி முறைகளின் படி முதலிடுவது தொடர்பான தீர்மானத்தை ஆதரிப்பீரா? இல்லையா? காரணத்துடன் விளக்குக.

36) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இற்கிணங்க கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றம் என்பவற்றை வரையறுத்துக் கூறுக.

37) நிமாலின் வியாபாரத்தில் இடம் பெற்ற 02 கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகளை கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் காட்டப்பட்டுள்ளது.

| | சொத்து = உரிமைத்துவம் | + பொறுப்பு |
|---|---|---|
| 1 | குறைவு = அதிகரிப்பு | + குறைவு |
| 2 | அதிகரிப்பு<br>குறைவு = அதிகரிப்பு | + - |

வணிகத்தில் இடம் பெற்றிருக்கக்கூடிய கொடுக்கல்களை பொருத்தமாக விபரிக்க.

38) பின்வருவன திலினி ஸ்டார், ஸ்போட்ஸ் கிளப்பில் சந்தா பணம் தொடர்பான தரவுகள் கழகத்தில் 500 பேர் வரை அங்கத்துவம் பெற்றிருந்ததுடன் அங்கத்தவரொருவருக்கான ஆண்டு சந்தா ரூ 200 வருமதியாயிருந்த சந்தா விபரம் -2015ஜனவரி01இல்ரூ10000
-2015டிசெம்பர் 31இல் 6000

31 டிசெம்பர் 2015 இல் , முற்பணமாக வசூலித்த சந்தா பணம் ரூ 5 000. 10 உறுப்பினர்கள் 2014 ற்குரிய சந்தா பணத்தை 2015.12.31 வரை செலுத்தியிருக்கவில்லை. கழகம் இவர்களது அங்கத்துவத்தை ரத்துச் செய்யத் தீர்மானித்தது.

2015 ஆம் ஆண்டில் காசாக வசூலித்த சந்தா தொகை யாது?

39) ஊழியர் கடமை புரிந்தமையினை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள் 04 இனை தருக.

40) பின்வருவன நிறுவனமொன்றில் இடம் பெற்ற 02 கொடுக்கல் வாங்கல்களை பிரதி பலிக்கும் கணக்கீடு சமன்பாடாகும்.

| கொடு வாங்கல் | சொத்து | = பொறுப்பு+ | மூலதனம் + | (வருமானம்-செலவு) |
|---|---|---|---|---|
| 1 | 70 000 காசு<br>(40 000) தொக்கு | = | | (+70 000-40 000) |
| 2 | | = (25 000)<br>வங்கிக்கடன் | +25000+ | -- |

i. மேலே தரப்பட்ட 02 கொடுக்கல் வாங்கல்களுக்கும் பொருத்தமான இரட்டைப் பதிவுகளைத் தருக.

கொடுக்கல் (01) கொடுக்கல் (02)
வாங்கல் வாங்கல்

(41) கம்பனியொன்றினால் 2012 ஜனவரி 01 இல் ரூ 1000 000 பெறுமதியான நிலமொன்று உடைமையாக்கிக் கொள்ளப்பட்டது. 2014 ஜனவரி 01 இல் முதன் முறையாக இந் நிலம் மீள விலை மதிக்கப்பட்டது. 2016 ஜனவரி 01 இல் இரண்டாவது முறையாக இந் நிலம் ரூ 1.5 மில்லியனுக்கு மீள விலை மதிக்கப்பட்டது. இவ் இரண்டாவது முறை மீள விலை மதித்தமையினால் ஏற்பட்ட மீள் விலைமதித்தல் மிகை ரூ 700 000 ஆகும்.

2016 ஜனவரி 01 இல் ஆதனம் மீள விலை மதித்தலுக்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

42) சகாயம் ஸ்டோர்ஸின் ஏடுகளில் இடம் பெற்ற தவறொன்றினை திருத்துமுகமாக அதன் கணக்காளர் பின்வரும் திருத்தப்பதிவினை இட்டிருந்தார்.

| | வரவு | செலவு |
|---|---|---|
| தொங்கல் கணக்கு | ரூ 33 000 | |
| கொள்வனவு கணக்கு | | 3 000 |
| விற்பனைக் கணக்கு | | 30 000 |

இத்தகைய திருத்தப் பதிவு இடம் பெறுவதற்கு ஏதுவாய் இருந்திருக்கக் கூடிய தவறு யாது?

43) பின்வரும் தரவுகள் அமீர் கம்பனியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை.

| | 01.01.2015 | 31.12.2015 |
|---|---|---|
| கடன்படுநர் | ரூ 500 000 | ரூ 800 000 |

கம்பனி ஆண்டிற்கு கடன்படுநரில் எப்பொழுதும் 10% சதவீதத்தை ஐயக்கடன் ஏற்பாடாகப் பராமரித்து வருவது வழமை. மேலும் அறவிட முடியாக்கடன். ஐயக்கடன் தொடர்பான அனைத்து சீராக்கங்களும் ஐயக்கடன் ஏற்பாடு கணக்கினூடாக மேற்கொள்வது வழமை. 2015.12.31 இல் உள்ள கடன்பட்டோரில் ரூ 15 000 இனை அறவிட முடியாக்கடன் என பதிவழிக்கத் தீர்மானித்தது. மேலும் சென்ற ஆண்டு அறவிட முடியாக்கடனாக பதிவழித்த ரூ 8000 இவ் வருடம் மீளக் கிடைக்கப் பெற்றது.

தேவைப்படுவது; ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு -2015

44) நிதிக் கணக்கீட்டுக்கான நியதிச் சட்டகத்தின் படி சொத்தொன்றின் பண்புகள் 02 இனைக் குறிப்பிடுக.

45) லங்கா உற்பத்தி கம்பனியுடன் தொடர்புடைய தகவல்கள்

| | |
|---|---|
| -நேர்மூலப் பொருட் கிரயம் | ரூ 200 000 |
| -மாறும் உற்பத்தி மேந்தலைக் கிரயம் | ரூ 150 000 |
| -நிலையான உற்பத்தி மேந்தலைக் கிரயம் | ரூ 75 000 |
| - தேறிய இலாபம் | 100 000 |
| -விற்பனைக்கான பங்களிப்பு வீதம் | 25% |

தேவைபடுவது : (i) இக்காலத்துக்குரிய விற்பனை வருமானத்தைக் கணிக்க
(ii) நேர் உழைப்புக் கிரயம் யாது?

46) இலங்கைக் கணக்கீட்டு நியமம் -07 இன்படி அறிக்கை இடும் தினத்திற்கு பிந்திய நிகழ்வுகள் என்பதால் கருதப்படுவது யாது?

47) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01 இன்படி பின்வருவனவற்றிற்கான நிதி மூலங்களை குறிப்பிடுக.

1. வருமானக் கூற்று 2. நிதி நிலைமைக் கூற்று

48) பங்குடைமையில் பங்காளருக்குள் உரித்துக்கள் 02 இனை குறிப்பிடுக.


49) நியு கிரனைட் பொது கம்பனி விஷேட வகையான கிரனைட் கற்களை உற்பத்தி செய்வது தொடர்பாக பின்வருவனவற்றை மதிப்பிட்டது.

உத்தேசிக்கப்பட்ட உற்பத்தி வருடமொன்றுக்கு 6000 அலகு கிரனைட் கல்லொன்றுக்கான விஷேட நிறத்தையளிப்பதற்கு விஷேட வகையான இரசாயனம் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு கல்லினை உருவாக்க 02 கிலோகிராம் இரசாயனம் பயன்படுத்தப்படுகின்றது.

கட்டளையொன்றை பிறப்பிப்பதற்கான கிரயம் ரூ 2000
அலகொன்றை பராமரிப்பதற்கான கிரயம் ரூ 48

தேவைப்படுவது (i) சிக்கன கட்டளை கணியம்?
(ii) மொத்த கட்டளைகளின் எண்ணிக்கை?

50) வணிக மொன்றின் இலாப அளவு வரைபடம் (profit-Volume graph) பின்வருமாறு




மொத்த நிலையான கிரயமும் இலாப நட்டமற்ற புள்ளி (அலகுகளிலும் முறையே)
1. மொத்த நிலையான கிரயம்
2. இலான நட்டமற்ற புள்ளி(அலகுகளில்)

◆ ◆ ◆

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

## கணக்கீடு பகுதி-II கொழும்பு றோயல் கல்லூரி

01) ராஜித பொதுகம்பனி லிமிடெட்டின் 2016 மார்ச் 31 இல் உள்ளபடி பரீட்சைமீதி

| விபரம் | வரவு(ரூ 000) | செலவு(ரூ 000) |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் | 11 800 | |
| 2015.ஏப்ரல் 01 இல் தொக்கு | 1600 | |
| வியாபார கடன்படுநர் | 4 000 | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 1540 | |
| கொள்வனவு | 6 400 | |
| செலுத்திய வேதனம் | 8 00 | |
| குத்தகை கடன்கொடுநர் | | 1 500 |
| விற்பனை | | 11 000 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்- 40000 பங்குகள் | | 4 000 |
| நிறுத்தி வைத்த உழைப்புக்கள் | | 4 200 |
| பொது ஒதுக்கீடு | | 2 000 |
| வியாபார கடன்கொடுநர் | | 3 400 |
| ஐயக்கடன் ஏற்பாடு (2015.04.01) இல் | | 320 |
| பதிவழித்த அறவிட முடியாகடன் | 100 | |
| செலுத்திய இடைகால பங்குலாபம் | 200 | |
| ஆதன திரண்ட தேய்மானம் | | 1 160 |
| செலுத்திய வரி | 150 | |
| காப்புறுதி கட்டணம் | 300 | |
| வங்கி கட்டணம் | 20 | |
| விளம்பர கட்டணம் | 500 | |
| கணக்காய்வு கட்டணம் | 50 | |
| இயக்குநர் வேதனம் | 200 | |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான ஊழியர் பங்களிப்பு | | 80 |
| | 27 660 | 27 660 |

மேலதிக தகவல்கள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முன்னர் கீழ்வரும் விடயங்களை கருத்திற்கொள்க.

i) 2016.03.31 இல் வியாபார கையிருப்பின் கிரயம் ரூ.2 மில்லியன்களாகும். இவற்றின் தேறக்கூடிய நிகரப்பெறுமதி ரூ.1.8 மில்லியன்களாகும்.

ii) ஊழியர் சேமலாப நிதியத்திற்கான ஊழியர் பங்களிப்பு 10% சதவீதம் கழித்துக் கொண்டு சம்பளம் செலுத்தப்பட்டது. ஊழியரின் பங்களிப்பு உரிய முறையில் சீராக்கப்பட்டிருந்தது. நிறுவன பங்களிப்பு 15% வீதம். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான நிறுவன பங்களிப்பு 3% தொடர்பிலோ எப்பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

iii) கடன்படுநரில் ரூ.300 000 இனை அறவிடமுடியக்கடனாக பதிவழிக்கவும் எஞ்சிய கடன்படுநரில் 10% சதவீதமாக ஐயக்கடன் ஏற்பாட்டினை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

iv) 2015 ஏப்ரல் 01 இல் உள்ளபடியான ஆதனம், பொறி, உபகரணங்களின் பகுப்பாய்வு ரூ (000) களில்

| ஆதன வகை | கிரயம் | திரண்ட தேய்மானம் |
|---|---|---|
| நிலம் (நியாய பெறுமதி | 4500 | -- |
| கட்டடம் | 3500 | 800 |
| மோட்டார் வாகனம் (நிதிக்குத்தகை) | 2000 | -- |
| அலுவலக சாதனம் | 1800 | 360 |
| | 11800 | 1160 |

ஆதனம் பொறி உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையில் 20% வீதம் தேய்விடப்படும்

v) நிலத்தின் கிரயம் ரூ5 மில்லியன் நிலம் 2 வது முறையாக 2016 மார்ச் 31ல் ரூ 6 மில்லியனாக மீள விலை மதிக்கப்பட்டது.

vi) 2015 ஏப்ரல் 1 ல் கம்பனி நிதிக்குத்தகை உடன்படிக்கையின் கீழ் ரூ 2 மில்லியன் நியாய பெறுமதி கொண்ட வேன் ஒன்றை உடன் கட்டுப்பணமாக ரூ 500000 செலுத்தி கொள்வனவு செய்தது. இது ஏடுகளில் முறையாக பதியப்பட்டுள்ளது. மிகுதி தொகை 2016 மார்ச் 31 துவக்கம் ரூ 500000 படி 04 கு சம ஆண்டு தவணைக் கட்டணங்களில் கொடுத்து தீர்க்கப்படும். இவ்வருடம் செலுத்திய தொகை வணிக கடன் கொடுநர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருட தவணைக் கட்டணத்திலும் உள்ளடங்கிய குத்தகை வட்டித்தொகை பின்வருமாறு

| ஆண்டு | வட்டித்தொகை |
|---|---|
| 2015/16 | 200 |
| 2016/17 | 150 |
| 2017/18 | 100 |
| 2018/19 | 50 |
| | 500 |

vii) கம்பனி 2015 ஏப்ரல் 1 ல் உள்ள சாதாரண பங்குதாரர்களுக்கு 5 பங்குகளுக்கு 1 பங்கினை பங்கொன்று ரூ 100 விலையில் உபகார பங்காக வழங்க தீர்மானித்தது.

viii) 2015/16 ஆம் ஆண்டிற்கான வருமான வரியென வரிக்கு முன் இலாபத்தில் 1/4 பங்கு மதிப்பிடப்பட்டுள்ளது.

ix) கம்பனி 2015.04.01 துவக்கம் தமது விற்பனை பொருட்களுக்கு 1 வருட உத்தரவாதம் வழங்கி விற்பனை செய்ய துவங்கியுள்ளது. இவ்வருட விற்பனை உத்தரவாத ஏற்பாடாக ரூ 500 000 இனை மேற்கொள்ள வேண்டிவருமென நம்பகரமாக கணிக்கப்பட்டுள்ளது.

x) பணிப்பாளர் சபை சாதாரண பங்குதாருக்கு ஆண்டிறுதி பங்கிலாபமாக ரூ200000 இணை பிரேரித்தனர்

தேவைப்படுவது:-ராஜித பொதுக்கம்பனி லிமிட்டெட்டின் நிதியறிக்கைகளை பிரசுரிப்பதற்கேற்ப வகையில் பின்வருவனவற்றை தயாரிக்குக.

i) 2016.03.31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான முற்றுமடங்கிய வருமானக்கூற்று
ii) 2016.03.31 முடிவுற்ற ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று
iii) 2016.03.31 உள்ளபடியான நிதிநிலைக்கூற்று (குறிப்புக்கள் உட்பட)

14ம் பக்கம் பார்க்க

## கணக்கீடு பகுதி-II தொடர்ச்சி.. கொழும்பு றோயல் கல்லூரி

02)

(அ) விஜய், ஆன்டனி இலாபநட்டங்களை சமமாக பகிரும் பங்காளர்கள் 2015 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று

| சொத்துக்கள் | ரூ 000 | ரூ 000 |
|---|---|---|
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | 2000 |
| ஆதனம், பொறி, உபகரணம் | | (400) |
| திரண்ட தேய்மானம் | | 1600 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | |
| வணிக தொக்கு | 200 | |
| வியாபார கடன்பட்டோர் | 1000 | 1900 |
| காசு | 700 | 3500 |
| உரிமையாண்மையும் பெறுப்புக்களும் | | |
| பங்காளர் மூலதனக் கணக்கு -விஜய் | 1000 | |
| -ஆன்டனி | 800 | 1800 |
| பங்காளர் நடைமுறைக் கணக்கு -விஜய் | 400 | |
| -ஆன்டனி | 300 | |
| நடைமுறையல்லா கடன் -விஜய் | | 500 |
| நடைமுறைக்கடன் | | |
| வியாபார கடன்கொடுத்தோர் | 400 | |
| அட்டுறு மின்சாரம் | 100 | 500 |
| | | 3500 |

**2015 ஏப்ரல்01 இல் தாமஸ் ரூ 8 000 000 காசுடன் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார். தாமஸினை சேர்க்கும் பொருட்டு பங்குடைமையின் மொத்த நன்மதிப்பு ரூ 1 200 000 என மதிப்பிடப்பட்டது எனினும் நன்மதிப்புக்கென ஏடுகள் திறக்காது பங்காளர் மூலதன கணக்கினூடாக சீராக்கப்படும்.**

**பங்குடைமையின் புதிய உடன்படிக்கை வருமாறு**

- ◆மூலதனத்திற்கான ஆண்டுவட்டி 10% வீதம்
- ◆பங்காளர்கள் மாதாந்தச் சம்பளமாக ரூ 15 000 பெறுவர்
- ◆இலாப நட்டங்கள் 2:2:1 என பகிரப்படும்
- ◆பங்குடைமை வணிகம் விஜயிற்கு சொந்தமான கட்டடத்தில் இயங்குவதனால் மாதவாடகையாக ரூ 20 000 செலுத்தப்படும்

**2016 மார்ச் 31 ல் முடிவுற்று ஆண்டிற்கான பெறுவனவு கொடுப்பனவு வருமாறு காசேடு**

| | | | |
|---|---|---|---|
| மீதி கீழ் வந்தது | 700 | கடன்கொடுநருக்கு | |
| கடன்படுநரிடம் சேகரித்தது | 5000 | செலுத்தியது | 3800 |
| | | செலுத்திய வாடகை-விஜய் | 120 |
| | | எடுப்பனவுகள் -விஜய் | 100 |
| காசு அறிமுகம் | | - ஆன்டனி | 100 |
| -தாமஸ் | 800 | - தாமஸ் | 50 |
| | | செலுத்திய மூலதன வட்டி -விஜய் | 50 |
| | | -ஆன்டனி | 40 |
| | | -தாமஸ் | 30 |
| | | பங்காளர் கடன்வட்டி-விஜய் | 10 |
| | | மின்கட்டணம் | 200 |
| | | அலுவலக செலவுகள் | 300 |
| | | மீதி கீழ் சென்றது | 1700 |
| | 6500 | | 6500 |

2016 மார்ச் 31 இல் நடைமுறை சொத்துக்களிலும் நடைமுறைப் பொறுப்புக்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள்

| | |
|---|---|
| தொக்கு அதிகரிப்பு | ரூ 100000 |
| கடன்படுநர் அதிகரிப்பு | 1000 000 |
| கடன் கொடுநர் அதிகரிப்பு | 600 000 |
| அட்டுறு மின்சார குறைவு | 20 000 |

ஆதனம், பொறி உபகரணங்களுக்கு 10% தேய்விடுக.

தேவைப்படுவது:-2016 மார்ச் 31 ல் முடிவுற்ற ஆண்டிற்கான விஜய், ஆன்டனி, தாமஸ் பங்குடைமையின் வருமான கூற்று (பகிர்வு உட்பட) பங்காளர் மூலதன கணக்கும் பங்காளர் நடைமுறைக் கணக்கும்

ஆ) கங்கமித்ர உற்பத்தி கம்பனி பொறுத்துதல், முடிவுறுத்தல் ஆகிய 02 உற்பத்தி பிரிவு களையும் களஞ்சியம் என்ற சேவை பிரிவையும் கொண்டு 02 வகையான முடிவுப் பொருட்கள் (A,B) வெளியீடு செய்கின்றது

பின்வரும் கம்பனியின் பூரணப்படுத்தப்படாத மேந்தலை பகிர்வு அட்டவணையாகும். ரூ.(000)

| மேந்தலை கிரயம் | பகிர்வு அடிப்படை | மொத்தம் | உற்பத்திபிரிவு | | சேவைபிரிவு |
|---|---|---|---|---|---|
| | | | பொறுத்துதல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
| பகிரப்பட்ட மேந்தலை | தரப்பட்டது | 570 | 320 | 170 | 80 |
| வாடகை | | 800 | | | |
| ஊழியர்நலன்புரி செலவு | | 200 | | | |
| இயந்திர தேய்வு | | 350 | | | |
| மேற்பார்வையாளர் வேதனம் | | 200 | | | |
| இயந்திர பராமரிப்பு | | 50 | | | |

1) ஏனைய தகவல்

| | மொத்தம் | பொறுத்துதல் பிரிவு | முடிவுறுத்தல் பிரிவு | களஞ்சிய பிரிவு |
|---|---|---|---|---|
| இடப்பரப்பு (சதுர அடிகளில்) | 40 000 | 20 000 | 20 000 | 10 000 |
| இயந்திரத்தின் கிரயம் (ரூபா) | 70 000 | 40 000 | 30 000 | - |
| பராமரிப்பு மணித்தியாலங்கள் | 10 000 | 6 000 | 4 000 | - |
| ஊழியர் எண்ணிக்கை | 2 000 | 800 | 1 000 | 200 |
| இயந்திர மணித்தியாலங்கள் | | 24 200 | 25 000 | - |
| நேர் ஊழிய மணித்தியாலங்கள் | | 28 000 | 32 000 | |
| களஞ்சிய கோரிக்கை பத்திரம் | | 2 700 | 1 500 | |

ii) சேவைபிரிவான களஞ்சியத்தின் மொத்த மேந்தலை செலவு உற்பத்தி பிரிவுகளுக்கிடையே களஞ்சிய கோரிக்கை எண்ணிக்கைப்படி மீள் பகிர்ந்தளிக்கப்படும்.

iii) மேந்தலை உள்ளடக்கல் விகிதம் பின்வருமாறு கணிக்கப்படும்

பொறுத்துதல் பிரிவு - இயந்திர மணித்தியால அடிப்படை

முடிவுறுத்தல் பிரிவு -நேர் ஊழிய மணித்தியால அடிப்படை

iv) முடிவுப்பொருள் A,B தொடர்பான வேறு தகவல்கள்

| | முடிவுப் பொருள் (A) | முடிவுப் பொருள் (B) |
|---|---|---|
| -நேர்மூலப்பொருட் கிரயம் | ரூ. 1000 | 800 |
| -நேர் கூலிக்கிரயம் | 600 | 500 |
| உற்பத்தி மேந்தலை கிரயம் | | |
| -பொறுத்துதல் பிரிவு (மணித்தியாலங்கள்) | .05 | 06 |
| -முடிவுறுத்தல் பிரிவு (மணித்தியாலங்கள்) | 04 | 05 |

தேவைப்படுவது :-

1) மேந்தலை பகிர்வு அட்டவணையினை பூரணப்படுத்துக.

2) முடிவுப்பொருள் (A), (B) என்பவற்றின் உற்பத்தி கிரயத்தைக் கணிக்க

03)

அ) சாருதன் 2015 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தனது சொந்த சேமிப்பு கணக்கிலிருந்து ரூ. 800 000 இனை மீளப்பெற்று வியாபாரமொன்றை ஆரம்பித்தார். அவரது வணிகத்தின் முதல் மாத கொடுக்கல்வாங்கல்கள் கீழ்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் பின்வருமாறு வரிசைப்படுத்தியுள்ளார்.

| | | சொத்து | | | | பொறுப்புக்கள் | | உரிமைத் துவம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொடுக்கல் வாங்கல் இல | அலுவலக உபகரணம் | தொக்கு | கடன் படுநர் | முற் கொடுப்பனவு | வங்கி | வங்கிகடன் | கடன் கொடுநர் | |
| 1 | 200 000 | | | | | 200000 | | |
| 2 | | 200000 | | | (50000) | | 150000 | |
| 3 | | (80000) | 120000 | | | | | 40000 |
| 4 | | | | 5000 | (20000) | | | (15000) |
| 5 | | (60000) | | | 80000 | | | 20000 |
| 6 | | | (100000) | | 95000 | | | (5000) |
| 7 | | | | | (10000) | | | (10000) |
| 8 | | | | | 20000 | | | 20000 |
| 9 | | | | | (25000) | (20000) | | (5000) |
| 10 | | | | | (90000) | | (100000) | 10000 |

மேலதிக தகவல்கள்

i. வியாபாரத்தின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் வங்கி நடைமுறை கணக்கின் மூலமே மேற்கொள்ளப்படுகிறது

ii. அலுவலக உபகரணங்கள் நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு 12% சதவீதம் தேய்விடுவது வழமை

iii. மாத இறுதி கடன்பட்டோர் மீதியில் 10% வீதம் ஐயக்கடன் ஏற்பாடு செய்க. பின்னர் இடம் பெற்ற கணக்காய்வில் பின்வரும் தவறுகள் இடம்பெற்றமையினை அவதானிக்க கூடியதாயிருந்தது.

அ) உரிமையாளர் பண்டபற்று ரூ 10 000மும்

ஆ) ரூ 40 000 பெறுமதியான கொள்வனவு கிரயப்பட்டியலொன்று முழுமையாக ஏடுகளில் தவறவிடப்பட்டிருந்தது

தேவைப்படுவது:- 1) கொடுக்கல் வாங்கல 01-10 வரையான இடம்பெற்றிருக்க கூடிய கொடுக்கல் வாங்கல்களை விபரிக்குக

2) மேலதிக தகவல்களை கருத்திற்கொண்டு வருமானக்கூற்றினை தயாரிக்குக.

31 ஜனவரி.2015 உள்ளபடியான பின்வரும் மீதிகளைக் கணிக்க

i. வணிக தொக்கு

ii. வணிக கடன்படுநர்

iii. வணிக கடன்கொடுநர்

ஆ) பின்வரும் தரவுகள் சேருநுவர மெனுபெக்சரர்ஸ் நிறுவனத்தின் தரவுகள்

| | | |
|---|---|---|
| ◆ஆண்டுக்கான கேள்வி | | 30000 அலகுகள் |
| ◆கட்டளையொன்றை பிறப்பிப்பதற்கான கிரயம் | | ரூ.600 |
| ◆அலகொன்றின் கொள்விலை | | ரூ.40 |
| ◆இருப்பு பேணும் கிரயம் இருப்பின் பெறுமதியில் 10% வீதம் | | |
| ◆மாதமொன்றுக்கான நுகர்வு | -இழிவு | 200 அலகுகள் |
| | -சராசரி | 250 அலகுகள் |
| ◆முதன்மை காலம் | -இழிவு 02 மாதம் | |
| | -உயர்வு 04 மாதம் | |

தேவைப்படுவது:- 01.பொருளாதாரக்கட்டளை கணியம்

02.மறுக்கட்டளை மட்டம்

03.இழிவு இருப்பு மட்டம்

04.உச்ச இருப்பு மட்டம்

05.சராசரி இருப்பு மட்டம்

04)

(அ) அனுஷியா கம்பனி லிமிடெட்டின் நிதிக்கூற்றுக்களின் பொழிப்பு பின்வருமாறு தரப்படுகிறது.

அனுஷியா கம்பனி லிமிடெட்

2016.03.31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக்கூற்று

| | ரூ 000 | ரூ 000 |
|---|---|---|
| விற்பனை | | 10 000 |
| கழி:-விற்பனை கிரயம் | | (6000) |
| மொத்த இலாபம் | | 4000 |
| கூட்டு: ஏனைய வருமானங்கள் | | 600 |
| கழி:- | | 4600 |
| விற்பனை பங்கீட்டு கிரயம் | 1500 | |
| நிருவாக செலவு | 1200 | |
| நிதிசெலவு | 100 | |
| ஏனையவை | 50 | (2850) |
| வரிக்கு முன் இலாபம் | | 1750 |
| கழி:-வருமான வரி | | (400) |
| நிகழாண்டு இலாபம் | | 1350 |

மேலதிக தகவல்கள்

i. 2016.03.31இலும் 2015 மார்ச் 31 இலும் கம்பனியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமாறு தொகை ரூ(000)களில்

| | 2016 | 2015 |
|---|---|---|
| நிலம் | 8 000 | 10 000 |
| கட்டடம்-கிரயத்தில் | 8000 | 8 000 |
| திரண்ட தேய்மானம்-கட்டடம் | (4000) | (3200) |
| மோட்டார் வாகனம்-கிரயத்தில் | (10000) | 4000 |
| திரண்ட தேய்மானம்-வாகனம் | (1800) | (1000) |
| வணிக தொக்கு | 1600 | 1200 |
| வியாபார வருமதிகள்(கடன்படுநர்) | 1500 | 2000 |
| வங்கியிலுள்ள காசு | 800 | 600 |
| கையிலுள்ள காசு | 600 | 400 |
| | 24700 | 22000 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 17000 | 14000 |
| நிறுத்திவைத்த உழைப்புகள் | 4500 | 3700 |
| வங்கிக்கடன்(2015.04.01இல் பெற்றது) | 2000 | 2500 |
| வியாபார கடன்கொடுநர் | 1100 | 1500 |
| வருமானவரி பொறுப்பு | 100 | 200 |
| அட்டுறு வட்டிச்செலவு | - | 100 |
| | 24700 | 22000 |

மேலதிக தகவல்கள்

i. அனைத்து கொள்வனவுகளும் விற்பனைகளும் கடனுக்கே நிகழ்ந்திருந்தன.

ii. நிதிச்செலவு வங்கிகடனுக்கான வட்டியினை பிரதிபலிக்கின்றது.

iii. கம்பனி சாதாரண பங்குதாரருக்கு இடைக்கால பங்குலாபத்தை செலுத்தியுள்ளது.

iv. 20000 எண்ணிக்கையிலான சாதாரண பங்குகளை கம்பனி பங்கொன்று ரூ 150 விலையில் உரிமை வழங்கீடு செய்திருந்தது.

v. நிலவிற்பனையால் பெற்ற இலாபம் ஏனைய வருமானங்களென உள்ளடக்கப்பட்டுள்ளது.

vi. 2015 ஏப்ரல் 01இல் புதிய மோட்டார் வானொன்று வாங்கப்பட்டது

தேவைப்படுவது-இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இற்கிணங்க 2016.03.31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அனுஷியா கம்பனி லிமிடெட்டின் காசு பாய்ச்சல் கூற்று

(ஆ)பின்வரும் தகவல்கள் 2016 மார்ச் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான கனிஸ்கர் பொதுகம்பனி லிமிடெட்டிலிருந்து பெறப்பட்டன.தொகைகள்ரூ(000)களில்

| | | |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | ரூ 6000 |
| மீளவிலைமதித்தல் ஒதுக்கம் | | 3500 |
| பொதுஒதுக்கம் | | 1000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | | 1500 |
| 10% தொகுதிகடன் | | 4000 |
| 10%வங்கிக்கடன் | | 2000 |
| கடன்கொடுநர் | | 1000 |
| அட்டுறுச் செலவுகள் | | 250 |
| நடைமுறை சொத்துக்கள் | | |
| -தொக்குகள் | 1600 | |
| -கடன்படுநர் | 3500 | |

(2015 ஏப்ரல் 01இல் கடன்படுநர் மீதி ரூ 1500)

| | |
|---|---|
| விற்பனை (கடன்) | ரூ10 000 |
| விற்பனை கிரயம் | 6000 |
| நிகழாண்டு இலாபம் | 1600 |
| ஆண்டிற்கான வருமான வரி | 200 |

தேவைப்படுவது:-2016 ஆம் ஆண்டிற்கு பின்வருவனவற்றை கணிக்க

1.மொத்த இலாப வீதம் 2.வட்டி காப்பு விகிதம்


3.கடன் உரிமை விகிதம் 4.கடன்படுநர் புரள்வு விகிதம்

5.விரைவு விகிதம்

மிகுதி நாளை வெளிவரும்

# பாதுகாப்பு விவகாரங்களை ஆராய்வதற்கு பாதுகாப்புக் கற்கைகளுக்கான நிறுவகம்

## அமைச்சரவை அங்கீகாரம்



(கொழும்பு)

**பாதுகாப்பு விவகாரங்களை ஆய்வு செய்வதற்காக சிந்தனைக் குழாம் ஒன்றை உள்ளடக்கிய ஆய்வு அமைப்பு ஒன்றை இலங்கை பாதுகாப்பு அமைச்சு உருவாக்கியுள்ளது. தேசிய பாதுகாப்பு கற்கைகளுக்கான நிறுவகம் என்ற பெயரில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி உறுதிப்படுத்தியுள்ளார்.**

இதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிறுவகத்துக்காக சிலரை ஆட்சேர்ப்புச் செய்யவுள்ளதாகவும், அதன் பின்னர் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக ஆய்வுகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"பாதுகாப்புத் தொடர்பான எல்லா விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படும். பாதுகாப்புடன் தொடர்புடைய, இலங்கையின் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பல் வேறு நாடுகளினதும், தேசிய அனைத்துலக செயற்பாடுகளை உள்ளடக்கியதாக இந்த ஆய்வுகள் இருக்கும்" என்றும் பாதுகாப்புச்செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 10 பனங்கைப்பணிக் கிராமங்கள்

(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் பத்து பனங்கைப்பணிக் கிராமங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பனங்கைப்பணித் தொழிலில் ஆர்வமுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும், கணவனை இழந்த பெண்களுக்கும்,வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்ப பெண்கள்க்கு சுயதொழில் வாய்ப்பினையும் வருமானத்தை ஈட்டுவதற்கும் பனைசார் வளங்களை உச்சமாகப் பயன் படுத்துவதற்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதென சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

கடந்த மேமாதத்தில் மட்டக்களப்பில் பண்டாரியா வெளிக் கிராமத்தில் 110 பெண்களுக்கும் திருகோணமலையில்குச்சவெளி மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் வாழையூற்று, இறக்ககேணி மற்றும் உட்பட்வேல ஆகிய கிராமங்களில் 90 பெண்களுக்கும்,அம்பாறையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் ஒலுவில் மற்றும் வாழைமுனைக் கிராமங்களில் 40 பெண்களுக்கும், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் ஒயார் சின்னக்குளம் கிராமத்தில் 32 பெண்களுக்கும், முல்லைத்தீவில் முள்ளியவளை பிரதேச செயலகப் பிரிவில் மாமூலைக் கிராமத்தில் 30 பெண்களுக்கும், கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் வன்னேரிக்குளம் கிராமத்தில் 50 பெண்களுக்கும், புத்தளத்தில் தம்பவன்னி கிராமத்தில் 60 பெண்களுக்கும், மன்னாரில் பாலைப் பெருமாள் கட்டுகிராமத்தில் 45 பெண்களுக்கும், யாழ்ப்பாணத்தில் வேலணை பிரதேச செயலகப் பிரிவின் புங்குடுதீவில் 46 பெண்களுக்கும் மொத்தமாக 503 குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 6 மாத கால கைப்பணிப் பயிற்சி பனை அபிவிருத்திச்சபையினால் வழங்கப்படுவதுடன் உபகரணப் பொதிகளும் வழங்கப்படும். இவர்களது உற்பத்திபொருட்கள் சிறு சுவடுகள் கட்டமைப்பின்கீழ் பனை அபிவிருத்திச் சபையினால் கொள்வனவு செய்யப்படும். இந்தப் பயிற்சித்திட்டத்தின்கீழ் நவீன வடிவமைப்பிலான கைப் பைகள்,சுளகு, கூடைகள், நீத்துபெட்டி, பனை ஓலையுடன் தோற் பொருட்களை இணைத்து செய்யப்படும் கோவைகளை வைப்பதற்கான பைகள் போன்ற கைவினைக் கைப்பணிப் பொருட்களிற்கான பயிற்சிகளும்,தொழில்நுட்ப கருத்தரங்குகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன.

பனங்கைப் பணி கிராமங்களை கட்டியெழுப்புகின்ற இந் நிகழ்ச்சித்திட்டம் பனைவளப் பயன்பாட்டினை உச்சப்படுத்துவதுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் கணவனை இழந்த பெண்களுக்கும் வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதுடன் சுயதொழில் முயற்சிகளையும்கைவினைக் கைப்பணி முயற்சிகளையும் விரிவாக்கும் வேலைத்திட்டமாகவும் அமையும் என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# புலிகளுக்கு நிதி திரட்டியதாக 13 பேருக்கு எதிராக வழக்கு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக, மில்லியன் கணக்கான டொலர்களை திரட்டினார்கள் என்று, விடுதலைப் புலிகளின் 13 செயற்பாட்டாளர்களுக்கு எதிராக சுவிஸ் சட்டமா அதிபர் திணைக்களம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

சுவிஸ், ஜேர்மனி மற்றும் இலங்கையைச் சேர்ந்த இவர்கள் மீது குற்றவியல் அமைப்பு ஒன்றின் உறுப்பினராக இருந்தமை அல்லது அதற்கு உதவியமை, மோசடி, போலி சான்றிதழ், பணச்சலவை, குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

நுண்கடன் திட்டங்களின் கீழ் சூரிச்சில் உள்ள வங்கியில் இருந்து நிதி திரட்டப்பட்டுள்ளதாகவும், உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பெயரில் இந்த நிதி திரட்டல் இடம்பெற்றுள்ளதாகவும் சுவிஸ் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுவிஸ் பொலிஸாரின் உதவியுடன் நடத்திய விசாரணைகளில், கணிசமான நிதி புலம்பெயர்ந்தோரிடம் இருந்து திரட்டப்பட்டமை கண்டறியப்பட்டதாகவும், சுவிஸ் சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் 2009 ஆம் ஆண்டு இலங்கையில் போர் முடிவுக்கு வந்ததுடன் இந்த நிதி திரட்டும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு விட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தற்போது பெலின்சோனாவில் உள்ள சமஷ்டி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த குற்றப்பத்திரம் தொடர்பான விசாரணைகள் எப்போது என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

அதேவேளை, குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள் 13 பேரின் விபரங்களையும், சுவிஸ் சட்டமா அதிபர் திணைக்களம் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இன்று ஒரு தகவல்

### நினைவேட்டில் இருந்து நீக்கப்பட வேண்டியவை

நான் சிறிய வயதில் மிகச் சாதாரண காரணங்களுக்காகச் சண்டையிட்டிருக்கிறேன்; பலரை விரோதிகள் ஆக்கிக் கொண்டிருக்கிறேன்.அத்தகைய சம்பவங்கள் பெரிய விவகாரங்களாகி, விகாரங்கள் ஆனதும் உண்டு.

அர்த்தமில்லாமல் அப்போது அடித்துக் கொண்டோமே என இப்போது தோன்றுகிறது. சண்டையிட்ட சிலரை நீண்ட இடைவெளிக்குப்பின் மீண்டும் சந்திக்கும் போது நாம் நேசக்கரம் நீட்ட அவர்களும் நட்பைப் புதுப்பிக்கிறார்கள்.மனதுக்குள் உற்சாகம் கரை புரள்கிறது.

காலங்கள் மாறும் போது கருத்துகள் மாறுகின்றன. விரோதிகள் மிக வேண்டியவர்களாகிறார்கள்.இதற்கு அவர்கள் தாம் முதலில் முன்வர வேண்டும் என்றெல்லாம் வீண் கௌரவம் பாராமல் நாம் தாம் முதல் முயற்சி எடுக்க வேண்டும்.

நமக்கு அவர்கள் செய்த தீமைகளை, ஏற்படுத்திய அவமானங்களை , பழைய விரோதங்களை மறந்தால் தான் இது சாத்தியம்.நாம் அவர்கள் மீது குறை சொல்ல, அவர்கள் நம் மீது பதிலுக்குக் குறை சொல்ல இது ஒரு முடியாத தொடர் கதையாகவே இருக்கும்.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

கடந்த காலத்தில் நடந்த கசப்பான சம்பவங்களை ஏதோ ஒரு தீய கனவாய் எண்ணி நினைவேட்டில் இருந்து அழிக்க வேண் டும். அப்போதுதான் சுமுகமான சூழ்நிலை உருவாக முடியும்.

பார்வைகளையும் மனங்களையும் சுருக்கிக் கொண்டு அவர்கள் செய்தது தவறு ; அதை அவர்கள் உணர வேண்டும்;அதைத் தொடர்ந்து அவர்கள் அவதியுற வேண்டும்; முடிந்தால் என்னிடம் வந்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றெல்லாம் மனித நேசங்களுக்கு வெடி வைக்கும் உணர்வுகளை வளர்த்துக் கொண்டே போனால் நம்முடைய வட்டம் சுருங்கிக் கொண்டே போய் விடும். அப்புறம் தனி மனிதனாக ஆகி அவதியுற வேண்டியது தான்.

அடுத்ததாக , சிலர் கடந்த காலத்தில் தாங்கள் செய்த தவறுகளையே நினைத்து நினைத்து வருந்தி நிகழ்காலத்தையும் கெடுத்துக் கொள்வார்கள்.

புதிதாக ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய தெம்பையும் உற்சாகத்தையும் இந்த நினைவுகள் காற்றுப்பிடுங்கிவிட்ட பலூனாக ஆக்கி விடும்.

கடந்த கால கசப்புச் சம்பவங்களை அழுக வைத்து அதையே உரமாக்கிப் புதிய பயிரை விளைவித்துக் கொள்ள வேண்டுமே தவிர, நம் நினைவுகளே நமக்குத் தடைக் கல்லாக அமைந்து விடக்கூடாது.

எவ்வளவு முயன்றும் என்னால் மறக்க முடியவில்லை என்பவர்களுக்குச் சில வார்த்தைகள்.

இப்படிச் சொல்வதும் நினைப்பதுமே நம் நினைவாற்றலை அதிகப்படுத்தி நம்மை வதைக்கும். இப்போது தேவையில்லை. நான் அதையெல்லாம் மெல்ல மறந்து வருகிறேன் என்று மனத்தால் எண்ணவோ வெளியில் சொல்லவோ வேண்டும். இது அற்புதமான பலனைத் தரும்.

இதோடு, நாம் பெரிதும் முயன்று ஏற்படுத்திக் கொள்ளும் புதிய சூழ்நிலைகளே அவற்றை மறக்க அற்புதமான வழிகள்.

**லேனா தமிழ்வாணன்**

# கலாசாரத்தினை கட்டியெழுப்புவதற்காக பாடுபடும் நாடகம் "வெண்கட்டி வட்டம்"

சிங்கள இனத்தவர்களுக்கிடையில் தற்போது காணப்படும் பாடல்கள், இசை, நாடகம் மற்றும் திரைப்படங்கள் என்பன முனனேற்றமடைவதற்கான காரணத்தை உற்றுநோக்குகையில் அது மிக நீண்ட வரலாற்றை கொண்டதாக அமைந்திருக்கிறது. சிங்களவர்களுக்கு உரித்தான மரபுப்பாடல்கள் என்று பார்க்குமிடத்து அவை பெல் கவி, கரத்த கவி, பாரு கவி, பதல் கவி மற்றும் நெலும் கவி என்றபெயர்கள்கொண்டு அழைக்கப்படும் மக்கள் பாடல்கள் ஆகும். இதனை தவிர்த்து வேறொரு பாடல் வடிவம் மக்களுக்கிடையில் கிரம போன யுகத்திலேயே பரவத் தொடங்குகிறது. தென்னிந்திய கர்நாடக இசையையும் வடஇந்திய ஹிநதுஸ்தானி இசையையும் அடிப்படையாகக் கொண்டுதான் மக்களுக்கிடையில் அப்படி ஒரு வடிவம் பரவ ஆரம்பித்தது. இந்த முனனேற்றத்துக்காக தமிழ் மற்றும் முஸ்லிம் இசைக கலைஞரகள் முன்நின்று பணியாற்றினார்கள். ஆரம்பத்தில் சில சிங்கள பாடல்களை தமிழ் பாடகர்களே பாடியுள்ளார்கள். இதனால், தமிழ், முஸலிம் மற்றும் சிங்கள இசைக்கலைஞர்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றியமையானது மிகச் சாதாரண விடயமாக எமது நாட்டில் காணப்பட்டது. இன்றுவரை மொஹிதின் பேக் பாடிய பௌத்த பாடல்கள விகாரைகளில் ஒலிப்பது இதற்கு நல்லதொரு சான்றாகும்.

கலைஎன்பது இன்ப, துன்ப, வேதனைகளை உணர்த்தக்கூடிய பிரசித்தமான ஊடகமாகும். அதிலும் நாடகக் கலை என்பது தன்னைத் தானே திரும்பி பார்க்கக்கூடிய, ஏனையவரின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளக்கூடிய, கலந்துரையாடல் செய்யக்கூடிய, ஒரு எழுமானத்திற்கு வரக்கூடிய கலையாகும். 1983 ஆம் ஆண்டுக்கு பிறகு தமிழ், சிங்கள மக்களுக்கிடையில் ஏற்பட்ட விரிசலை குறைத்துக்கொள்வதற்கு உதவும் வகையான கலை மாதிரியை கொண்டு ஒருவருக்கிடையில் ஒருவர் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளக்கூடிய வகையிலான கலையாக்க வேலைத் திட்டங்கள் மிக சொற்ப அளவிலேயே ஒரு சிலரால் முன்னெடுக்கப்பட்டது. தமிழ், சிங்கள மக்களுக்கிடையில் ஏற்பட்ட பிளவினை மீண்டும் சரிபடுத்தும் நோக்கில் முன்னோடியாக செயற்பட்டவர் தர்மசிறி பண்டாரநாயக்க அவர்களாவார். இவரைப் போலவே பராக்கிரம நிரியெல்ல, அசோக ஹந்தகம, பிரசன்ன விதானகே மற்றும் தர்மசேன பதிராஜ ஆகியோர் மேற்குறிப்பிட்ட பணிகளில் ஈடுபட்டார்கள். கலைஞர்கள் என்ற ரீதியில் மட்டுமல்லாது தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுப்பவர்களாக இவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்தார்கள்.

இவர்களுக்கிடையில் இனங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்ப்பதற்கான ஒரு



திட்டமிட்ட செயற்றிட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்தவர் பராக்கிரம நிரியெல்ல அவர்களும் அவரின் மக்கள் களரி நாடகக்குழுவுமாகும். அவரது உற்ற தோழனான எச்.ஏ. பெரேரா என்ற கலைஞரோடு கைகோரத்து 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மக்கள்களரி நாடகக்குழு இப்போது 13 வருடங்களை கடந்து நிற்கிறது. மக்கள் களரி நாடகக்குழு தமிழ், சிங்கள நடிகர்,நடிகைகளை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இரண்டு மொழிகளிலும் நாடகங்கள் தயாரிக்கப்பட்டு அரங்கேற்றம் செய்யப்படுகிறது. சுமார் 600 பேர் இருந்து பார்க்கக்கூடிய நகரும் அரங்கினை தன்னகத்தே கொண்டுள்ள இக்குழு, தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் வாழுகின்ற பிரதேசங்களுக்குச் சென்று நாடகங்களை அரங்கேற்றி இன நல்லுறவுக்கான சிறந்த நிதர்சனமாக நிகழ்காலத்தில் திகழ்கிறது. மக்களுக்கும் அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பாரிய பணியிலும் ஈடுபடுகிறது. இவர்கள் மிகவும் கஷ்டப்பட்ட பிரதேசங்களில் நாடகம் காட்டுகிறார்கள். "சரண்தாஸ்", "மாயபபட்டாடை", "எருக்கலம் பூ", "பயணிகள்" போன்ற நாடகங்கள் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்ற நாடகங்களாகும். இவ் அனைத்து நாடகங்களும் கேரளா, கொல்கத்தா போன்ற சர்வதேச நாடக விழாக்களில் பங்கு கொண்டதோடு தேசிய, இளைஞர் தேசிய விழாக்கள் என்பனவற்றில் பங்கேற்று விருதுகளையும் வென்றெடுத்த நாடகங்கள் என்பதனை விசேடமாக குறிப்பிட வேண்டும். மக்கள்களரி ஆரம்பம் தொட்டு 13 வருடங்களாக அதன் உறுப்பினர்களாக இருக்கின்ற அனுபவமிக்க கலைஞர்களோடு வீறு நடைபோடுகிறது.

கொழும்பிலிருந்து மிக தொலைவிற்கு சென்று ஒரு செயற்றிட்டத்தில் இப்போது பராக்கிரம நிரியெல்ல அவர்களும் மக்கள்களரி குழுவினரும் கடந்த இரண்டு மாதங்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து ஈடுபட்டு வருகிறார்கள். அது "வெண்கட்டி வட்டம்" என்ற பெயரால் அறியப்படும் நாடக உருவாக்கம் ஆகும். இந்நாடகம் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற இலங்கையின் அனுபவமிக்க ஆளுமையான கலாநிதி குழந்தை. ம.சண்முகலிங்கம் மொழிபெயர்த்த உலக பிரசித்தி பெற்ற ஜேர்மன் நாடக ஆசிரியரான பர்டோல்ட் பிறெக்டின் "த கோக்கேசியன் சோர்க் சேர்கள்" எனும் நாடகத்தின் தமிழ்மொழி பெயர்ப்பாகும். மக்கள் களரியின் நிறுவகர் பராக்கிரம நிரியெல்ல மற்றும் நாடக தயாரிப்பாளர் க.இரதிதரன் ஆகியோர் நாடகத்தை நெறியாளகை செய்கிறார்கள். மூன்று களப்பயிற்சிகளை நடத்தி இத்தயாரிப்புக்கு தேவையான நடிகர், நடிகையரை மக்கள்களரி தெரிவு செய்தது.

ஐக்கிய நாடுகளின் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் கலாசார அமைப்பினது கலாசார மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியத்தின் (International Fund for Promotion of Cultures of UNESCO) செயற்திட்டத்திற்கிணங்க மக்கள் களரி முன்னெடுக்கும் இந் நாடகம் யாழ்ப்பாணம், கொழும்பு, மாத்தறை, கிளிநொச்சி, வவுனியா, ஹற்றன், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் அரங்கேற்றப்படும். இந்நாடகம் பயிற்றுவிககப்பட்டு இன்று 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம், வீரசிங்கம் நாடக அரங்கத்தில் அதன் முதல் அரங்கேற்றம் நடைபெறவிருக்கிறது. அதன் பின் 25 ஆம் திகதி பி.ப 3 மணிக்கும் இரவு 7 மணிக்கும் கொழும்பு, அழகியற் கற்கைகளுக்கான பல்கலைக்கழகத்திலும், 27 ஆம் திகதி மாத்தறை, றுகுணு பல்கலைக்கழகத்திலும் "வெண்கட்டி வட்டம்" அரங்கேற்றப்பட விருக்கிறது.

**அ.சாந்தன்**

# தமிழ் சினிமா வரலாறு

## பாரதிராஜாவின் "முதல் மரியாதை" யில் சிவாஜிகணேசன் 213

சூட்டிங்கிற்காக ஒரு மாதம் மைசூர் சென்றிருந்தேன். சிவ சமுத்திரம் நீர் வீழ்ச்சியில் காவிரிக்கரையில் ஒரு மரத்தடியில் உட்கார வைத்திருந்தார். காலுக்கு செருப்பு கூட இல்லாமல் ஒரே ஒரு வேட்டி-சட்டை கொடுத்து ஒரு மாதம் என்னை அங்கே படுக்க வைத்திருந்தார் பாரதிராஜா. கிராமிய சூழ்நிலையில் எடுக்கப்பட்ட அந்தப்படம் மிகப் பெரிய வெற்றி அடைந்தது.

**பசும்பொன்**

இதற்குப்பிறகு சில வருடங்கள் கழித்து மீண்டும் என்னை வைத்து பசும்பொன் என்று இன்னொரு படம் எடுத்தார். அதில் நடிகை ராதிகாவும் நடித்தார்.

அந்தப் படப்பிடிப்பிற்காக மைசூர் சென்றோம். அங்கே இரவும் பகலும் படப்பிடிப்பு நடத்தினோம்.

படப்பிடிப்பு முடிந்து திரும்பி வந்தேன். திடீரென நோய்வாய்ப்பட்டேன். என் நாடித்துடிப்பு குறைந்து விட்டது. உடனே என்னை வைத்தியசாலைக்கு தூக்கிச் சென்று விட்டார்கள்.

அங்கே எனக்கு அறுவைச் சிகிச்சை செய்து என் நெஞ்சில் பேஸ்மேக்கர் கருவியை பொருத்தி விட்டார்கள்.

இவ்வாறு சிவாஜி கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

**படங்கள்**

1983இல் சிவாஜி நடித்த படங்கள் நீதிபதி, இமைகள், சந்திப்பு, சுமங்கலி ,மிருதங்கச் சக்கரவர்த்தி, வெள்ளை ரோஜா.

1984 - திருப்பம் ,சிரஞ்சீவி, தராசு, வாழ்க்கை, சரித்திர நாயகன் ,சிம்ம சொர்ப்பனம், எழுதா சட்டங்கள், இரு மேதைகள், தாவணிக் கனவுகள், வம்ச விளக்கு.

1985- பந்தம், நாம் இருவர், படிக்காத பண்ணையார், நீதியின் நிழல், நேர்மை, முதல் மரியாதை ,ராஜரிசி.


**நீதிபதி**

சிவாஜியும் பிரபுவும் இணைந்து நடித்த படமான நீதிபதி 141 நாட்கள் ஓடின. சுரேஷ் பாலாஜி தயாரித்த இப்படத்தை ஆர். கிருஷ்ணமுர்த்தி இயக்கினார். வசனத்தை ஏ.எல் நாராயணன் எழுத, கங்கை அமரன் இசை அமைத்தார். கே.ஆர்.விஜயா, சுஜாதா, ராதிகா ஆகியோரும் நடித்த படம்.

**மிருதங்க சக்கரவர்த்தி**

பைரவி பிலிம்ஸ் சார்பில் கலைஞானம் தயாரித்த படம் மிருதங்க சக்கரவர்த்தி. மிருதங்கம் வாசிக்கும் போது வித்வான் முகம் எவ்வளவு மாறுபடும் என்பதை நுணுக்கமாக பார்த்து அதை நடிப்பில் தத்ரூபமாக பிரதிபலித்தார் சிவாஜி கணேசன்.

இதில் சிவாஜியுடன் பிரபு,



கே.ஆர்.விஜயா,சுலக்ஷனா ஆகியோரும் நடித்தனர். வசனத்தை ஏ.எல் நாராயணன் எழுத, கே.சங்கர் டைரக்ட் செய்தார். இசை எம்.எஸ். விஸ்வநாதன். இது நூறு நாட்கள் ஓடிய வெற்றிப்படம்.

**வெள்ளை ரோஜா**

சிவாஜியுடன் பிரபு, அம்பிகா, ராதா நடித்த படம் வெள்ளை ரோஜா "பிலிம்கோ" வி.விஸ்வநாதன் நடித்த இந்தப்படத்தை ஏ.ஜெகந்நாதன் டைரக்ட் செய்தார். ஏ.எல். நாராயணன் வசனம் எழுத, இசை இளையராஜா. பாதிரியார் வேடத்தில் சிவாஜி சிறப்பாக நடித்த படம் இது.

**வாழ்க்கை**

காயத்திரி பிலிம்ஸ் சார்பில் சித்ரா லட்சுமணன், சித்ரா ராமு தயாரித்த படம் "வாழ்க்கை".

பொதுவாக பழைய படங்களின் பெயர்களை மீண்டும் வைத்து எடுக்கப்படும் படங்கள் நன்றாக ஓடுவதில்லை. 1949 இல் ஏ.வி.எம். தயாரித்த வாழ்க்கை, வையந்திமாலாவை திரை உலகுக்கு அறிமுகம் செய்த மகத்தான படம். அதன் பின் 35 ஆண்டுகள் கழித்து வெளிவந்த வாழ்க்கையும் 100 நாட்களை கடந்து வெற்றிகரமாக ஓடியது. இதில் சிவாஜிகணேசனும் அம்பிகாவும் நடித்தனர். "அவதார்" என்ற அந்தப் படத்தின் கதையை தழுவி எடுக்கப்பட்ட இப்படத்தின் வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுத, சி.வி. ராஜேந்திரன் டைரக்ட் செய்தார். இதில் அம்பிகா நடுத்தர வயதைத் தாண்டிய பெண்ணாக சிறப்பாக நடித்திருந்தார்.

சிவாஜி கணேசனும் கமல் ஹாசனும் இணைந்து நடித்த தேவர்மகன், 25 வாரங்கள் மேல் ஓடி வெள்ளிவிழா கொண்டாடியது. இது கமல்ஹாசனின் சொந்தப் படம். ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர் நஷனல் என்ற பேனரில் தயாரிக்கப்பட்டது .

(தொடரும்...)

## காலைக் கூட்டத்துக்குள் வெறிநாய்; மாணவர்களை விரட்டி விரட்டி கடித்தது

நீர்கொழும்பு மகாவலி தேசிய பாடசாலைக்குள் நேற்று முன்தினம் புதன்கிழமை காலையில் திடீரென நுழைந்த வெறிபிடித்த நாய் கடித்ததில், 5 மாணவர்கள் காயமடைந்து நீர்கொழும்பு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காலைக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக வகுப்பறையிலிருந்து வெளியேறிய மாணவ, மாணவிகளையே இவ்வாறு வெறிநாய் விரட்டி விரட்டி கடித்துள்ளது.

பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் நுழையும் இவ்வாறான நாய்கள் அனைவரையும் கண்டபடி கடிக்க முற்படுவதாகவும் இந்த நாய்களால் பல மாணவர்கள் காயங்களுக்குள்ளானதாகவும் மாணவர்களின் பெற்றோர் தெரிவித்தனர். கட்டாக்காலி நாய்களை முழுமையாக அப்புறப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் இதை விட அதிக பாதிப்புகளை மாணவர்கள் எதிர்கொள்ள வேண்டியேற்படும்என பொது மக்கள் தெரிவித்தனர். (இ-10)

# வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மட்டுமே வரிச் சலுகை வழங்கப்படும்

(கொழும்பு)

**இலங்கை அளித்த வாக்குறுதிகள் யாவும் நிறைவேற்றப்பட்டாலேயே ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைத் திட்டம் வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.**

இலங்கையின் பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சித்ராங்கனி வாகீஸ்வரா உள்ளிட்ட பிரதிநிதிகள் பிரசல்ஸிற்கு விஜயம் செய்துள்ளனர்.

இதில், இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்த பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருந்தது. இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் முனைப்பு காட்ட வேண்டுமென தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் குன்னர் வெய்கென்ட் தலைமையிலான பிரதிநிதிகள், இலங்கைப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# போதைப்பொருள் பாவனையில் முன்னிலை வகிக்கும் இலங்கை

போதைப் பொருள் பாவனை இலங்கையில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் மது கொள்வனவுக்காக வருடமொன்றுக்கு 15 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்படுவதாக இலங்கை மது ஒழிப்பு சபை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டை அபிவிருத்தி செய்யப்பயன்படும் நிதியின் பெருந்தொகை அழிவடைவதாகவும், இதனை தடுப்பதற்கான நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் சபையின் செயலாளர் சக்ய நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

18 தொடக்கம் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு மது விநியோகிப்பது சட்ட ரீதியாக தடைசெய்யப்பட்டுள்ளதுடன் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுவர்களுக்கு போதைப் பொருட்களை விநியோகித்தல் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மதுபாவனையில் இலங்கை முன்னிலையில் இருப்பதாகவும், இதனால் நாட்டின் நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் இங்கு உரையாற்றிய விசேட வைத்தியர் அநுலா விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதனை தடுப்பதற்கான அல்லது இந்த நிலையினை மாற்றுவதற்கான சட்டங்களை உருவாக்குவதோடு, நாட்டில் அதிகரித்துள்ள தற்கொலைக்கும் இந்த மது பாவனையே காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-10)

# பரீட்சை நுழைவுச்சீட்டுக்களை மாணவர்களிடம் வழங்காத அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நுழைவுச் சீட்டுக்களை மாணவர்களிடம் வழங்காத அதிபர்களுக்கு எதிராக பரீட்சைகள் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம். என்.ஜே. புஸ்பகுமார இதனை தெரிவித்துள்ளார்.

பரீட்சை நுழைவுச் சீட்டுக்களில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால் கடந்த 15ஆம் திகதிக்கு முன்னதாக அவற்றை திருத்திக் கொண்டிருக்க வேண்டுமென நான் அறிவுறுத்தியிருந்தேன்.

சில அதிபர்கள் இன்னமும் பரீட்சை நுழைவுச்சீட்டுக்களை மாணவர்களிடம் வழங்கவில்லை என பெற்றோரும் பரீட்சார்த்திகளும் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே, பரீட்சை நுழைவுச்சீட்டுக்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 27ஆம் திகதியின் பின்னர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு வகுப்புக்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 786


கீர்த்து




டினோ



தர்மா




பிறந்தநாள் என்றால் என்ன?
இந்த ஒரே ஒரு கேள்விக்கு
BBC WORLD நிறுவனம் நடத்தி
உலகில் உள்ள அனைத்து பெரிய
மனிதர்களிடம் (VIP) கேள்வி கேட்டனர்
அதில் சிறந்த பதிலாக தேர்வு
செய்தது ஐயா அப்துல் கலாம் பதிலே.
அவர் சொன்ன பதில்
வாழ்க்கையில் அந்த ஒரே நாள்
தான் உன் அழுகை குரல் கேட்டு
உன் தாய் சிரிப்பது

நிஷா

நா வந்துடன்னு சொல்லு
திரும்பி வந்துடன்னு சொல்லு



கபாலி டிக்கெட்
600 ரூபானு
சொன்னதும்
டிக்கெட்டுக்கு காசு
இல்லாம
அப்டியே திரும்பி
வந்துடன்னு
சொல்லு....

கபாலி டா
காசு இல்லடாஆ.....

உஷானி




ஆடம்பர பொருளை பேரம் பேசா கூட்டம்...
அத்தியாவசிய பொருளை பேரம் பேசும்
அவலம் என் தேசத்தில்...
விடியலை நோக்கி கனவுகளோடு...
-விவசாயி...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# முறைப்பாடுகளைத் தெரிவிக்க புதிய தொலைபேசி இலக்கங்கள்

நுகர்வோர் அதிகார சபையில் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்காக நுகர்வோர் அதிகாரசபையானது புதிய தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களை அதிக விலைக்கு விற்றல், காலாவதியான பொருட்களை விற்றல் உள்ளிட்ட முறைப்பாடுகளுக்காக இந்த தொலைபேசி இலக்கங்கள் ஊடாக நுகர்வோர் முறைப்பாடுகளை தெரிவிக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 011-7755481, 755482, 755483 என்ற இலக்கங்களுக்கு அல்லது 076 667 0670 என்ற இலக்கங்களுக்கு அழைத்து தமது முறைப்பாடுகளை தெரிவிக்கலாம் எனவும் நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த வாரம் 16 அத்தியாவசிப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலைகளை அரசாங்கம் அறிவித்திருந்ததுடன், குறிந்த நிர்ணய விலைகளுக்கு அதிகமாக பொருட்கள் விற்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதால் வர்த்தக நிலையங்களை சுற்றிவளைக்கும் வேலைத்திட்டத்தையும் நுகர்வோர் அதிகார சபை முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கடந்த சனிக்கிழமை இவ்வாறு 650 வர்த்தக நிலையங்கள் சுற்றி வளைக்கப்பட்டதாகவும் அதில் 325 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-22.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.77 | 148.42 |
| பிரிட்டன் | பவுண்ட் | 190.80 | 197.24 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 158.56 | 164.60 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 145.84 | 151.69 |
| கனடா | டொலர் | 110.16 | 114.52 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 107.17 | 111.98 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.11 | 110.01 |
| இந்தியா | ரூபா | 2.1613 | ------- |
| சீனா | யுவான் | 21.7458 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.8192 |
| குவைத் | டினார் | 480.1653 |
| ஓமான் | ரியால் | 377.2482 |
| கட்டார் | ரியால் | 39.8847 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7282 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5443 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 150 | 90 | 120 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 800 | 500 | 600 | 550 | 500 | 600 |
| தக்காளி | 150 | 150 | 120 | 150 | 160 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 140 | 100 | 80 | 100 |
| கோவா | 160 | 200 | 120 | 150 | 160 | 160 | 160 |
| கரட் | 80 | 250 | 150 | 200 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 100 | 80 | 120 | 120 | 120 | 150 |
| புடோல் | 100 | 120 | 80 | 70 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 140 | 100 | 100 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 160 | 90 | 120 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 70 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 200 | 180 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 50 | 80 | 80 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 140 | 200 | — | 150 | 110 | 160 | 150 |
| பயற்றங்காய் | 140 | 150 | 70 | 120 | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 160 | 150 | 120 | 120 | 160 | 120 | 150 |
| பீற்றூட் | 140 | 150 | 120 | 140 | 120 | 160 | 150 |
| கறிமிளகாய் | 250 | 600 | 320 | 300 | 200 | 400 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 350 | 600 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 150 | 200 | 130 | 160 | 170 | 200 | 200 |
| கத்தரிதம்பள்ள | 120 | 100 | 100 | 100 | 120 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 20 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 140 | 140 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-25 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | — | 150 | - | 160 | — | 160 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 130 | 140 | 160 | 200 | 200 |
| முள்ளங்கி | 50 | 100 | 50 | 60 | 80 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 150 | 30 | 50 | 60 | 50 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகள் விமானத்தாக்குதலில் பெற்றோல் கிடங்குகள் எரிந்தன 233

கொல்லனாவ மற்றும் முத்துராஜவல எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் மீது தலா 2 குண்டுகள் வீசப்பட்டதாகவும் இதில் 2 குண்டுகள் வெடிக்கவில்லை என்றும் இராணுவ அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முத்துராஜவல எண்ணெய் சேமிப்பு கிடங்கில் விழுந்த குண்டுகள் வெடித்ததில் அங்குள்ள தீயணைப்புக்கருவிகள் மற்றும் தண்ணீர் பரிமாற்ற குழாய்கள் சேதம் அடைந்ததாகவும் கூறினார்.

இந்தக் குண்டுவீச்சில் உயிர்ச்சேதம் ஏற்பட்டதா? எத்தனை பேர் காயம் அடைந்தனர் என்ற தகவல் எதுவும் வெளியாகவில்லை. காயம் அடைந்த எண்ணெய் சேமிப்பு கிடங்கு ஊழியர்கள் 2 பேர் வந்து சிகிச்சை பெற்றதாக கொழும்பு நகர வைத்திய சாலை வட்டாரங்கள். தெரிவித்தன.

### விடுதலைப்புலிகள் உறுதி

கொழும்பு நகரில் உள்ள எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் மீது தாக்குதல் நடத்தியதை விடுதலைப்புலிகளும் உறுதி செய்தனர்.

இராணுவ விமானங்களுக்கு எரிபொருள் வழங்கும் கொல்லனாவ பெற்றோல் சேமிப்பு கிடங்கு, முத்துராஜவல எரிவாயு சேமிப்பு கிடங்கு ஆகியவற்றின் மீது வான்புலிகள் இரு விமானங்களில் சென்று தாக்குதல் நடத்தி விட்டு வெற்றிகரமாக தளத்திற்கு திரும்பி விட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்தனர். இரு எண்ணெய் சேமிப்பு கிடங்குகளிலும் தீ கொழுந்துவிட்டு எரிந்ததை விமானத்தில் இருந்தபடி வான்புலிகள் பார்த்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### பாதிப்பு

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சியின் மீது சிங்கள இராணுவ. விமானங்கள் 28-4-2007 அன்று இரவு குண்டுகளை வீசி தாக்குதலை நடத்தின. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் விடுதலைப்புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினார்கள்.

இராணுவ விமானங்களுக்கு இந்த 2 எண்ணெய் கிடங்குகளில் இருந்து தான் எரிபொருள் பரிமாற்றம் செய்யப்பட்டு வருகிறது. விடுதலைப்புலிகளின் இந்தத் தாக்குதலில் இந்த எண்ணெய் கிடங்கு சேதம் அடைந்து இருப்பதால் இராணுவத்துக்கு பாதிப்பு ஏற்பட்டது.

### பாதுகாப்பு நடவடிக்கை

25-03-2007 அன்று கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தின் மீது விடுதலைப்புலிகளின் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து வான் பாதுகாப்புக்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பலதரப்பில் இருந்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து சக்திவாய்ந்த ரேடார்களை அமைப்பது பற்றியும் எந்தெந்த வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவது என்பது பற்றியும் அரசு ஆலோசித்து வந்தது.

அரசு பதில் நடவடிக்கைகள் பற்றி திட்டமிடுவதற்கு முன்பே விடுதலைப்புலிகள் கொழும்பு நகரில் மீண்டும் வான் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தினார்கள்.

### தாக்குதல் தொடரும்

இந்நிலையில் விமானத் தாக்குதல்கள் தொடரும் என்று விடுதலைப்புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் செய்தித்தொடர்பாளர் ராசையா இளந்திரையன் கூறியதாவது,

நாட்டின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப் போவதாக இராணுவமும் விமானப்படையும் பிடிவாதம் பிடித்து வருகின்றன. எனவே நாங்களும் பதில் நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு வழியில்லை . நிச்சயமாக மேலும் பல விமானத்தாக்குதல் நடத்தப்படும். திருப்பி அடிப்பதை தவிர எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

விடுதலைப்புலிகளின் இந்த அறிவிப்பால் எந்த நேரத்தில் மீண்டும் தாக்குதல் நடக்குமோ என்று கொழும்பு நகர மக்கள் பயந்து போய் இருந்தனர்.

### இராணுவத்துக்கு நவீன உபகரணங்கள்

இதற்கிடையே விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலை முறியடிக்க நவீன உபகரணங்கள் வாங்கப்போவதாக இராணுவம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக இராணுவ செய்தித்தொடர்பாளர் பிரசாத் சமரசிங்கே கூறுகையில், போரில் புதிய பரிணாமம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளை வானத்திலோ,தரையிலோ ஒழித்துக் கட்டுவது மிகவும் முக்கியமானது. இதற்காக நவீன உபகரணங்களை வாங்கப் போகிறோம் என்றார்.

### விமானத்தை வீழ்த்திய புலிகள்

இந்த நிலையில் விடுதலைப்புலிகளின் வன்னிப் பகுதியில் இரணைமடு என்ற இடத்தில் உள்ள தமிழீழ விமானப்படை தளத்தைத் தகர்க்க சிங்கள போர் விமானங்கள் விரைந்தன.

29-04-2007 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் மிக்-27 ரக விமானங்கள் அணிவகுத்து வந்த போது விடுதலைப்புலிகளின் தானியங்கி பீரங்கிகள் சிங்கள விமானங்களை நோக்கி சரமாரியாகச் சுட்டன. அதில் ஒரு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

### கடலில் விழுந்தது


பயங்கர சத்தத்துடன் அந்த விமானம் வெடித்து சிதறி கடலுக்குள் வீழ்ந்தது. விடுதலைப்புலிகளின் இராணுவச் செய்தித்தொடர்பாளர் ராசையா இளந்திரையன் இந்த தகவலை உறுதி செய்தார்.

ரஷ்யாவில் தயாரான இந்த மிக் 27 விமானம் முதலை மூக்கு போன்ற முகப்பு தோற்றத்துடன் ஏராளமான குண்டுகள், ரொக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகளைத் தாங்கிச் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்ட நவீன ரகத்தை சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

◆ ◆ ◆ ◆ ◆

விடுதலைப்புலிகள் வசம் இருந்த மன்னார் பகுதியை இராணுவம் கைப்பற்றியது.


தலைநகர் கொழும்பில் உள்ள விமானப்படைத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதல் நடத்தினர். இதைத் தொடர்ந்து புலிகள் மறைத்து வைத்திருக்கும் விமானங்களை அழிப்பதற்காக அவர்களின் முக்கிய முகாம்கள் அமைந்துள்ள காட்டுப்பகுதிகளை குறிவைத்து இராணுவம் போரிட்டு வந்தது.



குண்டு வீச்சில் சேதம் அடைந்த வாகனங்கள்.

(தொடரும்)

# பெருக்கத்து வேண்டும் பணிதல்!



கம்பவாரிதி ஜெயராஜ்

(நேற்றைய தொடர்ச்சி)...

எங்கே இடம் கிடைக்கும்? எப்போது பகை விதைக்கலாம்? என எதிர்பார்த்து ஏங்கிக் கிடக்கிறது ஒரு குள்ள நரிக் கூட்டம். அவர்களுக்கு எங்களைப் பற்றியும் கவலையில்லை, உங்களைப் பற்றியும் கவலையில்லை. ஊரை இரண்டுபடுத்திக் கொண்டாட நினைக்கும் கூத்தாடிகள் அவர்கள். ஈரை எருமையாய் ஆக்கி இழிவு செய்யக் காத்திருக்கும், ஓர் ஈனர் கூட்டம் இரு பக்கமும் இருக்கிறது. அவர்தம் வஞ்சக வலையில் வீழாமல் தப்புதல் நம் கடமையாம். மகாபாரதக்கதையில் நடந்த தவறுக்காக துரியோதனனோடு போர் தொடுக்கவேண்டும் என்று சகோதரர்கள் சொன்னபோது தர்மன் அதை மறுத்து அவர்களை நோக்கி ஓர் உவமை சொல்கிறான். காட்டிலுள்ள மூங்கில்கள் ஒன்றோடு ஒன்று உராய்ந்தால் நெருப்புண்டாகும். அந்நெருப்பால் காடு அழிகின்றதோ இல்லையோ, நெருப்பை உண்டாக்கிய மூங்கில்கள் அழிந்துபோகும். அதுபோல பகை என்னும் நெருப்பை உண்டாக்கினால், மற்றவர்கள் அழிகிறார்களோ இல்லையோ, உண் டாக்கியவர்கள் அழிந்து போவார்கள். எனவே பகை நெருப்பு வேண்டாம் என்கிறான் அவன். வயிரமெனும் கடு நெருப்பை மிக மூட்டி வளர்க்கின்ற உயர் வரைக் காடென்ன செயிர் அமரில் வெகுளி பொர சேர இருதிறத்தேமும்சென்று மாள்வோம். எத்துணை அற்புதமான உவமை. மற்றவற்றிற்குத் தீ மூட்டவென கொளுத்தப்படும் தீக்குச்சி, மற்றவற்றை எரிக்கிறதோ இல்லையோ தான் எரிந்து போகிறதே.அதைக் கண்கூடாகக் கண்ட பின்னும் பகை வளர்க்க முனைபவன் எங்ஙனம்அறிவாளியாவான்? தர்மன் அங்ஙனம் சொன்ன பின்பும், "அவர்கள் இழைத்த தீங்கை எங்ஙனம் மறப்பது?" என்று கேட்கிறான் வீமன். அதற்கு தர்மன், "சில வேளைகளில் எங்கள் கையே எங்கள் கண்களைக் குத்திவிடுவதில்லையா?" எங்கள் கண்ணைக் குத்தியது என்பதற்காக கையை வெட்டமுடியுமா? என்று பதிலுரைக்கிறான்."கண் மலரில் கை படாதோ" என்றோ பாடப்பட்ட இதிகாசங்கள் இன்று கைகொடுக்கின்றன. நடந்த சிறு தவறுக்காக என் இளையோர் சார்பிலும் தமிழ்மக்கள் சார்பிலும் உங்களிடம் மன்னிப்புக் கேட்டு நிற்கிறேன். விளையாட்டை வினையாக்காதீர்கள். பகைவேரை அடியோடு கிளறி எறிந்து அன்பு தொடர அனைவரும் அனுமதியுங்கள். இனி, சந்தர்ப்பத்தால் சமநிலை தவறிப்போன, என் தமிழ் இளைஞர்களுக்கு அன்போடு சில வார்த்தைகள். தயைகூர்ந்து உணர்ச்சிவயப்பாட்டில் செயலாற்றுவதை உடன் நிறுத்துங்கள். உங்கள் ஆத்திரம் எனக்குப் புரிகிறது. அடுத்தடுத்து இனத்தின் மேல் அநியாயமாய் விழுந்த அடிகளால், நீங்கள் கொதித்திருப்பதை என்னால் உணரமுடிகிறது. ஆனால் ஒன்றை மறந்து போகாதீர்கள். அடிவாங்கினோம் என்பது மற்றவர்களை அடிப்பதற்கான அனுமதிப்பத்திரமாகாது. தீங்குக்குத் தீங்கிழைத்தல் என்பது ஒருக்காலும் தமிழர்தம் மரபாகாது. நாளைய தமிழுலகின் தலைமை அறிஞர்கள் நீங்கள். உங்கள் வழிப்படுத்தலில்தான் நாளை நம் தமிழினம் தலை நிமிர்த்த வேண்டியுள்ளது. அதை மறந்து போகாதீர்கள்.

போரினால் விளைந்த புன்மைகளை ஆழ அறிந்தவர்கள் நீங்கள். எதிரிகள் கேடு விளைத்த போது, கேட்பாரின்றி சிதைந்த நம் உறவுகளைக் கண்ணால் கண்டவர்கள் நீங்கள். நமது அரசியல்வாதிகள் தமது சுய நலத்திற்காய், உங்கள் உணர்ச்சிகளைத் தூண்டி விளையாட இன்றும் நினைக்கிறார்கள். அவர்களின் வஞ்சனை வலையில் வீழ்ந்து போகாமல், உறுதி பட்ட நெஞ்சோடு எதிர்காலத்தைச் சந்திக்க வேண்டியவர்கள் நீங்கள்.பலம் வளர்க்காமல் பகை வளர்த்து என்ன செய்யப்போகிறோம்?

உறவுதான் பலம்.

பகைதான் பலவீனம்.

உணருங்கள்!

உலக அரசியல் பற்றி உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை.எங்கள் மேல் அக்கறை காட்டும் எந்தத் தேசத்தாரும், தங்கள் இலாபத்திற்காய் அன்றி எங்கள் இலாபத்திற்காய் இங்கு வருவதில்லை.எம் இனம் பதைபதைத்து அழிந்தபோது பார்த்திருந்தவர்கள்தானே அத்தனை பேரும். அவர்கள் துணைவருவார்கள் எனும் நம்பிக்கையால்,அன்பு அயலில் மீண்டும் துளிர்க்கும் சூழ்நிலையில்,அதை வளர்க்க நினைக்காமல் அழிக்க நினைக்கலாமா? மோத நினைப்பது முட்டாள்கள் செயல்.வெல்ல நினைப்பதுதான் அறிஞர்க்கு அழகு. வெல்வதற்கு அன்பைத் தவிர வேறு ஆயுதம் உண்டா?

தர்மத்தின் பலம் அறிந்த நாங்கள் தவறிழைக்கலாமா? பல்கலைக் கழகத்திற்குள் பெரும்பான்மையராய் இருக்கிறோம் என்பதற்காக மாற்றாரின் கலை, கலாசாரத்தை நாம் அங்கீகரிக்க மறுத்தால், நாட்டில் பெரும்பான்மையாய் இருக்கும் தகுதிபற்றி அவர்கள் நம் கலை, கலாசாரத்தை அங்கீகரிக்க மறுத்தது சரி என்று ஆகிவிடாதா?

நாம் வீழ்ந்தது உண்மை. ஆனாலும் நம் பண்பு வீழவில்லை என்று நாம் நிரூபிக்கவேண்டாமா? இறையருளால் உலகம் காவல் நின்று, மீண்டும் இத்தேசத்தின் ஒற்றுமைக்கு வழிவகுத்துப் பார்த்திருக்கிறது. தமிழர்தான் அதனைச் சிதைத்தார்கள் எனும் பழி சூழ, உங்களின் மிகையுணர்ச்சியால் தயைகூர்ந்து வழிவகுத்து விடாதீர்கள்.

மாற்றாரின் மொழி, மதம், கலை, கலாசாரம் என்பவற்றைத் தாழ்த்தித்தான் நமது விழுமியங்களை வளர்க்கவேண்டும் என்று நாம் நினைத்தால், நாமும் மற்றவர் போல் சிறியராகிவிடமாட்டோமா? தமிழின் பெருமை நமக்கும் தெரியவில்லை என்றாகிவிடாதா? எத்தனையோ படையெடுப்புக்களையும், ஆக்கிரமிப்புக்களையும் தாண்டித்தான் நம் தமிழ்த்தாய் இன்றும் நிலைத்து நிற்கிறாள். பல்லாயிரமாண்டு பண்புப் பலம் கொண்ட அவளை, மாற்றாரை இறக்கித்தான் உயர்த்தவேண்டுமெனில், அது அவளுக்கு நாம் செய்யும் இழிவென்று முதலில் உணருங்கள்.தயைகூர்ந்து தமிழ்த்தாயை தலைநிமிர்ந்து வாழவிடுங்கள்.

தம்மோடு ஒப்பிடுகையில் தமிழர்கள் உலகளாவிய பெரும்பான்மை கொண்டவர்கள். அப்பெரும்பான்மை கிடைத்தால் தமிழர்கள் தம்மை நசித்துவிடுவார்கள் எனும் பயத்திலேயே அன்று தொட்டு சிங்களவர்கள் நம்மை அடக்க முயன்று வருகிறார்கள்.

பெரும்பான்மை பெற்று விட்டால், தமிழர்கள், அவர்கள் நினைப்பது போல்தான் நடப்பார்கள் என, உலகம் பழி சொல்ல வழிவகுத்து விடாதீர்கள்.

பிழைக்குப் பிழை ஒருகாலும் பதிலாகாது.அதுதான் வழி என்று ஆகிவிட்டால் பகைக்கும், போருக்கும் எப்படித்தான் முடிவுவரும்? பகையினதும், போரினதும் பாதிப்புக்களை உணர்ந்த நீங்களே, இவ் உண்மையைத் தரிசிக்கத் தவறினால், உலகம் நம்மை இழிவு செய்யாதா? உணருங்கள் !

சிங்களவர்க்கு நான் முன்னே சொன்ன.பாரதக் கதையைத்தான் உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். பகை மற்றவர்களை அழிக்கிறதோ இல்லையோ, உங்களை அழித்துவிடும் என்பதை மறவாதீர்கள்.

பல்கலைக்கழக எல்லைக்குள் இன்று உங்களுக்கு ஓரளவு பாதுகாப்பு இருக்கிறது. அப்பாதுகாப்புத் தரும் உற்சாகந்தான் உங்களை நிலைதடுமாற வைத்திருக்கிறது. சென்ற ஆட்சியில் இருந்திராத பாதுகாப்பு அது. இன்று ஏதோ உலக நெருக்கடியால் ஓரளவு இறங்கி வந்திருக்கிறார்கள். மாற்றாரின் பொறுமையை அவர்களின் மூக்கில் குத்தித்தான் சோதிக்க வேண் டுமா?'அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின் மிகப்பட்டு செம்மாக்கும் கீழ்' என்றான் வள்ளுவன். அவன் சொன்ன கீழோரில் ஒருவராய் நாம் ஆகலாமா?

அவ்வள்ளுவனே, 'அச்சமே கீழ்களது ஆசாராம்' என்றான். நாம் அவ்வகையினர் அல்லர் என்று நீங்கள் நிரூபிக்க வேண்டாமா? சென்ற ஆட்சியில், நம் பல்கலைக்கழகத்தில் புரட்சி செய்ய முனைந்த சில இளைஞர்களை, அரசு மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பியபோது, அவர்கள் பணிந்து மன்னிப்புக் கடிதம் கொடுத்து வெளிவந்ததும், அவ்விளைஞர்களின் தாயார் யாழ் வந்த மகிந்தவிடம் கால்பற்றி இறைஞ்சி நின்றதும் இப்போதும் நினைவில் இருக்கிறது. தேவையற்று துணியக்கூடாது. துணிந்தால் பணியக்கூடாது. உங்கள் பாதுகாப்பு எல்லைக்குள் மீண்டும் மாற்றாரை நுழைய விட்டு விடாதீர்கள்.

கடுமையாய்ப் போர் நடக்கையிலும் நம் தமிழ் இளைஞர்கள், தென் பகுதியில் சிங்களச் சகோதரர்களுடன் சேர்ந்தே படித்தார்கள். ஒருசில தீயரைத் தவிர மற்றவர்கள் அவர்களை உறவாய் நடத்தியது உண்மை. முப்பதாண்டுகளின் பின் எங்கள் இடத்திற்கு அவர்களின் வருகை நிகழ்ந்திருக்கிறது. தமிழர்தம் பண்பாட்டை நாம் நிரூபிக்க வேண்டிய நேரமிது. 'பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்றானே வள்ளுவன். அவர் வழி நின்று நஞ்சைப் பெய்தார்க்கும் நன்மை செய்தல் வேண்டாமா? சிந்தியுங்கள்.

நம் தமிழினத்தின் தனித்துவங்களைக் காக்கத்தானே போராடினோம். இன்றும் போராடுகிறோம். அத்தனித்துவங்களை வரையறுத்துத்தந்த வள்ளுவனே, "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்று கூறியிருக்கிறான். உயர் பண்புகளை இழந்தா நம் உயிர்த்தமிழைக் காக்கப்போகிறோம். தயைகூர்ந்து நினைத்துப்பாருங்கள்.

தமிழர்கள் பெரும்பான்மை பெற்ற இடங்களில் மாற்றார்க்கு, மத, மொழி, கலை, கலாசார உரிமைகள் அனைத்தும் வழங்கப்படும் என்று, நீங்கள் நிறுவினால் தான் அவர்கள் நாணுவார்கள்.

இவையெல்லாம் பழங்கதைகள். நடைமுறைக்குச் சாத்தியப்படாத இவ்விடயங்களை நம்பச் சொல்லி,மீண்டும் எங்களை ஏமாறச் சொல்கிறீர்களா? என்று, உங்களில் ஒருசிலர் குமுறுவது தெரிகிறது. அதையும் நான் விளங்காதவன் அல்லன். இன்று உலகத்தின் மேற்பார்வையில், இரு இனமும் வந்திருக்கின்றன. உலகம் தரும் அழுத்தமே மாற்றாரின் இன்றைய மன மாற்றத்திற்குக் காரணம். உலகம் தரும் அவ்அழுத்தம் என்பதே, சிறுபான்மையினராகிய எமக்குக் கிடைத்திருக்கும் பலமுமாம். நம் பெருந் தன்மைகள், மாற்றாரால் ஏற்கப்படாவிடினும், நிச்சயம் உலகின் மதிப்பை நமக்குப் பெற்றுத் தரும். அதனால் நாம் மேலும் பலம் பெறுவோம். நமது முன் கோபத்தால்உலகின்பார்வையில், நாம் குற்றவாளிகளாகி விடக்கூடாது என்பதே எனது கோரிக்கை.

என்னவோ ஏதோ! மாற்றினத்தாரின் கலைக்கு, நம்மண்ணில் இடந்தராமாட்டோம் எனும் உங்கள் பிடிவாதத்தில் எனக்கு உடன்பாடில்லை. நடந்தது நடந்து விட்டது. மாற்றார் தீர்ப்புரைக்க வரும் முன்னர், உங்கள் பேராசிரியர்களின் துணைகொண்டு, முரண்பட்ட அச்சிங்கள இளைஞர்களோடு, முகம் கொடுத்துப் பேசுங்கள். நடந்த தவறுக்கு மன்னிப்புக் கோருங்கள். 'அடடா நாமும் தவறிழைத்து விட்டோமே!' என, அவர்களையும் எண்ணச் செய்யுங்கள்.யாழ். பல்கலைக்கழகத்தை இன ஒற்றுமைக்கான முன்மாதிரியாய் ஆக்கிக்காட்டுங்கள்.அதனால் உங்கள் மதிப்பும் எங்கள் இனத்தின் மதிப்பும் உயரும். பகை வேர் அறும் – எம் பார் உயரும். அனைவரும் அமைதி யுற வாழலாம்.

அரிதாய் நாம் எதிர்பாராமல் வாய்த்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை நம் உணர்ச்சிக் கொந்தளிப்புகளால் கொச்சைப்படுத்தி விடவேண்டாம் என உங்களைக் கைகூப்பிக் கேட்டு நிற்கிறேன். வள்ளுவன் வழிவந்த தமிழர்கள் நாம் என நிரூபிக்கும் நேரம் இது. நீங்கள் நிரூபிப்பீர்கள் எனும்நம்பிக்கை இருக்கிறது.

இத்தேசத்தில் வேற்றுமையை வேரறுங்கள். இவ் அரிய காரியத்தை எங்கள் இளைஞர்கள் செய்து காட்டினார்கள் எனும் பெருமையைத் தாருங்கள். உங்களை மீண்டும் கைகூப்பி வேண்டி நிற்கிறேன். (முற்றும்)

# மத்திய சீனாவை உலுக்கும் வெள்ளம்; நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

(பீஜிங்)

மத்திய சீனாவின் ஹுபெய் மாகாணத்தில் பெருக்கெடுத்த வெள்ளத்தால் சிக்கித் தவித்த கிராம மக்களை மீட்கும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பெய்து வரும் கன மழை காரணமாக Jingmen நகரத்தில் பெருக்கெடுத்த வெள்ளம் அதன் அருகில் உள்ள கிராமமொன்றில் உள்ள நதியை நோக்கி வடிந்து சென்றது.

இதனால் அக்கிராமத்தில் இருந்த ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் சிக்குண்டனர். அத்தோடு பலரும் காணாமல் போயினர்.

இதேவேளை பெருக்கெடுத்த வெள்ளத்தினால் Jingmen நகரம் மற்றும் அதனை அண்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இது வரை உயிரிழந்துள்ளதோடு, பலர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வெளியாகியுள்ள காணொளியில் வெள்ளத்தில் சிக்குண்டு மிகவும் பரிதாபமான நிலையில் உதவிக்காகக் காத்திருக்கும் மக்களை, மீட்புப் படையினர் பாதுகாப்பாக வெளியேற்றுவது பதிவாகியுள்ளன.

அத்தோடு. இந்த வெள்ள அனர்த்தத்தால் இந்நகரை சுற்றியுள்ள பல கிராமங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிழக்கு மற்றும் மத்திய சீனாவின் பல பிராந்தியங்களிலும் இந்த கோடை காலத்தில் கனமழை பெய்து வருவதோடு, பாரிய வெள்ளப் பெருக்கு அனர்த்தமும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# துருக்கியில் 3 மாதங்களுக்கு அவசரநிலை பிரகடனம்

## ஜனாதிபதி ஏர்துவான் அறிவிப்பு

(அங்காரா)



துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி முறியடிக்கப்பட்ட நிலையில், மூன்று மாதங்களுக்கு அவசர நிலை பிரகடனம் செய்வதற்கான உத்தரவை ஜனாதிபதி எர்துவான் பிறப்பித்துள்ளார்.

துருக்கியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று இராணுவத்தின் ஒரு பகுதியினர் ஆட்சியை கைப்பற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். தலைநகரில் ஆங்காங்கே இராணுவ டாங்கிகளை நிறுத்தி பீதியடையச் செய்த அவர்கள், முக்கிய பகுதிகள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதாக கூறினர். பின்னர் மக்களின் கடும் எதிர்ப்பின் காரணமாக இந்த இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டது. மீண்டும் ஜனாதிபதி கட்டுப்பாட்டில் அரசாங்கம் வந்துள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு எதிராக நடந்த போராட்டத்தில் 290 பேர் கொல்லப்பட்டனர். இராணுவ புரட்சியில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும் பல்வேறு பகுதிகளில் இன்னமும் பீதி நிலவுகிறது.

இந்த சூழ்நிலையில், அங்காராவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஏர்துவான் தலைமையில் தேசிய பாதுகாப்பு சபை மற்றும் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாட்டின் பாதுகாப்பு குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பின்னர் பேசிய ஜனாதிபதி ஏர்துவான், "இராணுவததில் புகுந்துள்ள அனைத்து கிருமிகளும் அகற்றப்படும். துருக்கி ஒரு சுமுகமான சூழ்நிலையை எட்டுவதற்காகவும், மீண்டும் ஆட்சி கவிழ்ப்பில் ஈடுபடாமல் இருக்கவும், மூன்று மாதங்கள் அவசர நிலை பிரகடனம் செய்யப்படுகிறது" என அறிவித்தார்.

இந்த உத்தரவு உடனடியாக அமுலுக்கு வந்ததையடுத்து, அடுத்த 3 மாதங்களுக்கு துருக்கியில் அவசரநிலை சட்டம் அமுலில் இருக்கும்.

ஆட்சிக் கவிழ்ப்பு தொடர்பாக சுமார் 10 ஆயிரம் பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் காவலை நீடிக்க இந்த அவசர நிலை பிரகடனம் பயன்படுத்தப்படும்.

'துருக்கியில் இதுவரை 600 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன, ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை இழந்துள்ளனர். இது ஜனநாயகம், சட்டம் மற்றும் சுதந்திரத்திற்கு எதிரானதல்ல. சர்வாதிகாரத்தை ஒடுக்கி, ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக தான். ஆட்சி கவிழ்ப்பு முயற்சிக்கு எதிரான போராட்டத்தின் போது உயிரிழந்தவர்கள் தியாகிகள் ஆவார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.(இ-5)

# ராணுவ முகாமிற்குள் நுழைந்த தீவிரவாதிகள் திடீர் தாக்குதல்

## 17 இராணுவத்தினர் பலி!



ஆபிரிக்க நாடான மாலியில் பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அங்குள்ள இராணுவ முகாம் ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். வீரர்கள் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். கட்டடங்களை தீ வைத்து கொளுத்தினர். கடைகளை கொள்ளையடித்தனர்.

இந்த தாக்குதலில் 17 வீரர்கள் கொல்லப்பட்டனர். 35 பேர் படுகாயம் அடைந்தனர்.

அண்மைக் காலத்தில் மாலியில் நடந்த மிகப்பெரிய தாக்குதல் இதுதான் என மாலி இராணுவ அமைச்சர் ஹியூபெர்ட் கூலி பலி, தெரிவித்தார். "நாம் 17 வீரர்களை இழந்து இருக்கிறோம். 35 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு சேகவ் நகர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்" என தெரிவித்தார்.


இதேபோன்று இராணுவ செய்தி தொடர்பாளர் மைகா செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், " இது பயங்கரவாத தாக்குதல்தான். இருப்பினும் தாக்குதல் நடத்தப்பட்ட நகர், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. பயங்கரவாதிகளை தேடும் வேட்டை முடுக்கி விடப்பட்டுள்ளது" என தெரிவித்தார். (இ-10)

# சீனாவில் பாலத்தில் மோதி நொறுங்கியது விமானம்

## 5 பேர் பலி; முதல் நாளிலேயே விபரீதம்

(பீஜிங் )

சீனாவில் ஆம்பியான் விமானம் பாலத்தில் மோதியதில் 5 பேர் உயிரிழந்தனர், மேலும் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.



சீனாவில் அரசு விமான நிறுவனத்தின் துணை நிறுவனமான ஏ.வி. ஐ.சி ஜாய் ஜெனரல் ஏவியேசன் நிறுவனம் புதியதாக நீரிலும், ஆகாயத்திலும் செல்லக்கூடிய விமான சேவையை தொடங்க திட்டமிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த விமானத்தின் சோதனை ஓட்டம் முடிந்து கிழக்கு சீனாவில் இந்த விமானத்தின் சேவையை தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, நேற்று விமானத்தின் சேவையை தொடங்கய முதல் ஆம்பியன் விமானம் ஷாங்காயின் ஜின்ஷான் மாவட்டத்திலிருந்து ஜெஜியாங் மாகாணம் ஜோஷான் நகருக்கு 10 பேருடன் புறப்பட்டு சென்றது.

அப்போது. எதிர்பாராத விதமாக நெடுஞ்சாலை மேம்பாலத்தில் பயங்கரமாக மோதியது.

தகவலை அறிந்த மீட்புக் குழுவினர் விரைந்து சென்று காயமடந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். (இ-10)




# இலங்கைப் பிரஜை சவுதியில் கொலை!

இலங்கை பிரஜை ஒருவர் சவுதியில் கொலை செய்யப்பட்டுள்ளதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நபரின் அறையில் தங்கியிருந்த மற்றும் ஒரு நபரினால் இவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி றியாத் நகரில் கண்ணாடி தொழிற்சாலையில் பணிபுரியும் 32 வயதான ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ள நிலையில்.சடலம் அவர் தங்கியிருந்த அறையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் ஏமன் நாட்டு பிரஜையொருவரை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த கொலைக்கான காரணங்கள் எதுவும் இதுவரை அறியப்படவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-10)

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்து விடும்.

– பைபிள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கெட்ட எண்ணங்கள் கெட்ட விளைவையே தரும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் – சிங்கள மாணவர்களிடையே நடந்த மோதல் சம்பவம் சமாதானத்தை விரும்பும் பலரையும் ஆழ்ந்த வேதனைக்கு ஆளாக்கியுள்ளது.

இவ்வாறான மோதல்கள் இனியும் வேண்டாம் என்ற நல்ல சிந்தனை நல்ல மனிதர்களிடம் இருக்கவே செய்கிறது.

இங்குதான் சிந்தனை – நோக்கம் – எண்ணம் என்ற விடயங்கள் மேலெழுகின்றன. நீ எதுவாக வரவேண்டுமென நினைக்கின்றாயோ அதுவாகவே நீ ஆகிவிடுகிறாய் என்கிறார் ஒரு தவயோகி.

சிந்தனைக்கு மிகுந்த வலிமை உண்டு. அந்த சிந்தனை தூய்மையானதாக இருந்தால், அதன் முடிவும் தூய்மையானதாக அமையும்.

மாறாக கெட்ட சிந்தனைகள் உள்நோக்கம் கொண்ட தீய எண்ணங்கள் மிகப் பிழையான விளைவுகளைக் கொட்டிவிடும். ஆக எப்போதும் சிந்தனை – நோக்கம் – எண்ணம் தூய்மையானதாக, நல்லதாக அமைதல் அவசியம்.

எனினும் இந்த உயர்ந்த சிந்தனைகள் எங்கள் இலங்கைத் திருநாட்டில் அடியோடு இல்லாமல் போய்விட்டதனால் இதன் விளைவுகள் பாதகமாக அமைவதை காண முடிகிறது.

குறிப்பாக இலங்கையின் ஆட்சித் தரப்பும் பெரும்பான்மை இனம் சார்ந்த புத்திஜீவிகளும் எப்போதும் தமிழ் மக்களுக்கு எதிரான எண்ணத்தையே கொண்டுள்ளன. இதன் விளைவுதான் வன்னி யுத்தத்தில் வெளிப்பட்டது.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக ஒரு இனத்தை அடியோடு அழித்தாலும் அது தகும் என்பது அன்றைய ஆட்சியாளர்களின் முடிவு. இதற்கு தென் பகுதி புத்திஜீவிகளும் மத பீடங்களும் பரிபூரண ஒத்துழைப்பு வழங்கின.

மக்களை காப்பாற்ற வேண்டிய ஓர் அரசு இப்படிச் செய்யலாமா? தமிழ் இனம் என்பதற்காக இப்படி வதைக்கலாமா? என்று கேட்பதற்கு ஆளில்லாமல் போயிற்று. இதனால் தாங்க முடியாத இழப்புக்களை தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவானது.

அந்த துன்பத்திலிருந்து இன்னமும் தமிழ் மக்கள் விடுபட முடியாத நிலைமையில் தத்தளிக்கும் போதும் தென்பகுதி ஆட்சியாளர்களும் புத்திஜீவிகளும் இன்னமும் தமிழ் மக்களை வதைப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உரிமைகளைக் கொடுத்து அவர்களையும் வாழ விடுங்கள் என்று சொல்ல வேண்டிய தென்பகுதி புத்திஜீவிகள், இதற்கு மாறாக தமிழ் மக்கள் ஒருபோதும் தலை நிமிரக் கூடாதென்றே நினைக்கின்றனர்.

இதற்காக தமிழர் தாயகம் முழுமையிலும் தமிழர்களுக்கு பாதகமான திட்டங்களும் செயற்பாடுகளும் நடந்துகொண்டே இருக்கின்றன.

இதன் ஒரு திட்டம்தான் தமிழர்களின் பல்கலைக்கழகமாக இருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை சிங்கள மாணவர்களின் பெரும் தொகையான அனுமதியுடன் அதன் வழமையை மாற்றியமைக்கின்ற திட்டமாகும். இந்தத் திட்டத்தை தென்பகுதி மிகச் சிறப்பாக அரங்கேற்றிவிட்டது.

எனினும் இதெல்லாம் எங்கள் அரசியல் தலைமைக்கு அவசியமற்றது. கொழும்பில் தங்கள் சுகபோகமான வாழ்க்கையை தவிர வேறெதுவும் அவர்களுக்கு பெரிதல்ல.

இந் நிலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெரும்பான்மையின மாணவர்கள் முழு இடத்தையும் ஆக்கிரமிக்க, தமிழ் மாணவர்கள் எதுவும் செய்ய முடியாதென்றாயிற்று.

கூடவே எப்போதும் தங்களுக்கு ஆபத்து வரலாம் என்ற ஏக்கத்துடன் பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற சூழ்நிலை தமிழர் தாயகத்தில் பதற்றமான தன்மையை தொடர்ந்தும் பேணவே செய்யும்.

எந்தத் தீய நோக்கத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தென்பகுதி மாணவர்கள் அனுப்பப்பட்டனரோ அந்தத் தீய எண்ணத்தின் விளைவு இப்போது அறுவடையாகிறது. நாம் தமிழினம் என்பதால் எதுவுமே செய்ய முடியாது. அவ்வளவுதான்.

# வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சுந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக அமைந்திருக்கும் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் வாராந்த நிகழ்வுகள் யாழ். கலையகத்தின் ஏற்பாட்டில் பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லூரும் சித்தர்களும் என்னும் தலைப்பில் சைவசித்தாந்த பண்டிதரும் சைவப்புலவருமான மு.திருஞானசம்பந்தப்பிள்ளை சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (இ-7)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். இதன்போது புதிய நிர்வாகத் தெரிவும் அபிவிருத்தி செயற்பாடுகளும் ஆராயப்படும். (இ-7)

# வேலையற்ற பட்டதாரிகளின் கவனயீர்ப்பு ஒன்றுகூடல் நாளை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினரால் நாளை 23ஆம் திகதி காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு, எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான கவனயீர்ப்பு ஒன்றுகூடல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் ஒன்றுகூடலில் அனைத்து இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தம்மிக்க முனசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் பட்டதாரிகளின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக முக்கியமாக கலந்துரையாடப்படவுள்ளதோடு ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் ஆகியோர்களிடம் கையளிக்கப்படவுள்ள மகஜருக்கான வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளின் கையெழுத்துக்கள் பெறப்படவுள்ளன.

ஏனைய மாவட்டங்களில் நடைபெற்று முடிந்த இச் செயற்பாட்டின் தொடர்ச்சியான வடமாகாணத்திற்குட்பட்ட ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து பட்டதாரிகளினதும் கையெழுத்துக்கள் பெறப்படவுள்ளன.

எனவே வடமாகாணத்தைச் சேர்ந்த அனைத்து பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி மற்றும் தேசிய உயர் தொழில்நுட்பக் கல்லூரி பட்டதாரிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ

# செம்மறி ஆடுகள் திருட்டு

(கரணவாய்)

வடமராட்சி கப்பூது பகுதியில் உள்ள ஆட்டுப்பட்டியில் கட்டப்பட்டிருந்த இரண்டு செம்மறி ஆடுகள் திருட்டுப் போயுள்ளன.

அப்பகுதியைச் சேர்ந்த க.பாக்கியநாதன் என்பவரது ஆடுகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (இ-5-60)

# இலங்.அகதிகளுக்கு ரூ.105 கோடி ஒதுக்கீடு

2016 / 2017ஆம் ஆண்டுக்கான தமிழக சட்டசபையின் வரவு செலவுத் திட்டத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன்களுக்காக 105.97 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபையில் நேற்று ஆரம்பமான இரண்டாவது கூட்டத் தொடரில் 2016/2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிதி அமைச்சர ஓ.பன்னீர் செல்வம் சமர்ப்பித்து உரையாற்றியபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# நினைவஞ்சலியும் மலர் ஆய்வறிமுகமும்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம் அவர்களது 60 ஆம் நாள் நினைவஞ்சலியும் சைவவித்தியாரத்தினம் மலர் ஆய்வறிமுகமும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் தேசிய கல்வியியற் கல்லூரி தர்மலிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் திருமதி விகனேஸ்வரி பவனேசன் ஆய்வறிமுகத்தை நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் முனைவர் அ.சண்முகதாஸ், யாழ்.பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் முனைவர் என்.சணமுகலிங்கன், யாழ்.பல்கலைக்கழக மேனாள் தமிழ துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

மலராசிரியர் முருகேசு கௌரிகாந்தன் ஏற்புரை வழங்குவார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை 8 மணியிலிருந்து 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில மயிலங்காடு, குப்பிளான் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் பரந்தன், பூநகரி, முரசுமோட்டை, தர்மபுரம், விசுவமடு, தேராவில், உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், ஆனையிறவு உப்பளம், இயக்கச்சி 12th VIR, இயக்கச்சி நவ ஜவணம் பாம், 683 ஆவது படைப்பிரிவு முகாம், 681 வதுபடைப்பிரிவு முகாம், 68 வதுபடைப் பிரிவு முகாம், SLNS வட்டுவாகல், முல் லைத் தீவு நகரம், உன்னாப் பிலவு, முல்லைத் தீவு கச்சேரி, கூல்மான் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில அரிப்பு, சவேரியார் குளம, வெள்ளிமலை, CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் உணவகம்; உரிமையாளருக்கு ரூ.30000 அபராதம்

(கரணவாய்)

நெல்லியடி நகரில் சுகாதாரச் சீர்கேட்டுடன்இயங்கிய உணவகத்தின் உரிமையாளர் ஒருவருக்கெதிராக கரவெட்டி சுகாதாரப் பகுதியினரால் தொடரப்பட்ட வழக்கில் 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கரவெட்டி சுகாதாரப் பிரிவினரால் நெல்லியடி நகரிலுள்ள உணவகங்களில் திடீர் சுகாதரப் பரிசோனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மேற்படி நீதிமன்ற அபராதம் விதிக்கப்பட்ட நபரின் உணவகத்தில் சுகாதாரச் சீர்கேடு இருப்பதாக கண்டறியப்பட்டு . பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்டமைக்கமைய மேற்படி அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்தார். (இ-5-60)




## பொறுமையைக் கடைப்பிடிப்போம்

❖ (இறைவனின் அடியார்கள்) செலவு செய்யும்போது வீண் விரயமும், கஞ்சத்தனமும் செய்வதில்லை. மாறாக, அவர்களுடைய செலவு இந்த மித மிஞ்சிய இரு நிலைகளுக்கிடையில் மிதமானதாக இருக்கும்.

❖ உமது தொழுகையில் உமது குரலை மிக உயர்த்த வேண்டாம் மிகத் தாழ்த்தவும் வேண்டாம். இவ்விரண்டுக்கும் இடையே மிதமான தொனியைக் கடைப்பிடிக்கவும்.

❖ இறைதிருப்தியை பெறும் நோக்குடன் மனிதன் தன் குடும்பத்தாருக்கு செலவிடுவதையும் ஓர் அறச் செயலாகவே இறைவன் காண்கின்றான்.

❖ நற்செயல் என்பது நற்குணத்தை பெறுவதாகும். எந்தச் செயலை நீ மனதில் நினைத்து அதனை பிறர் அறிவதை விரும்பவில்லையோ அது பாவச்செயலாகும்.

❖ வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்கள் புண்ணியவான்கள் ஆவர்!

❖ இறைவன் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக சிரமப்படுத்துவதில்லை... சிரமத்திற்குப் பின்னர் இலகுவை இறைவன் உண்டாக்குவான்... உண்மையில் சிரமத்துடன் இலகுவும் இருக்கின்றது.

-வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பூஜைக்கு உடைக்கும் தேங்காய் அழுகலாக இருந்தால் அபசகுனமா?

நல்லோருக்கு அவ்வப்போது ஏற்படப்போகும் துன்பங்களை தெய்வம் உணர்த்தி எச்சரிக்கை செய்கிறது. அதையே நிமித்தம் என்று கூறுவார்கள்.

எந்த ஒரு செயலையும் செய்யும் முன்னர், முதன் முதலில் விநாயகருக்குத் தேங்காய் உடைத்து விநாயகரை வழிபட்டுத் தொடங்குகிறோம். அப்போது, உடை க்கப்படும் தேங்காய் இரண்டாக மட்டுமே உடைய வேண்டும். நல்ல முறையில் சரிபாதியாக இரண்டு பகுதிகளாக உடைய வேண்டும்.

ஆரம்பிக்கப் போகும் செயல்கள் எந்தவொரு தடாங்கலும் இன்றி, நிறைவேறும் என்பதற்கான அறிகுறி இது. இதற்கு மாறாக உடைக்கப்படும் தேங்காய், இரண்டுக்கும் அதிகமான பகுதிகளாக உடைபட்டாலோ, தேங்காய் அழுகலாக இருந்தாலோ அது துர்நிமித்தம் எனப்படும். இதற்குப் பரிகாரமாக வேறு நல்ல தேங்காயாகத் தேர்ந்தெடுத்து இரண்டு தேங்காயாக உடைத்து கணபதிக்கு நிவேதனம் செய்யலாம். அல்லது 2 தேங்காயை சிதறு காயாகப் போடலாம். ஸ்ரீகணபதியின் அருள்கிட்டும்.

# வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**19 வயது பெண்கள் 200 மீற்றர்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.நிதர்சனா முதலாமிடத்தையும் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.மேரி எரோமி இரண்டாமிடத்தையும் முருகானந்தா கல்லூரியைச் சேர்ந்த பி.தனுஜா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**21 வயது பெண்கள் 200 மீற்றர்**

தட்சணாமருதமடு அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த எம்.குகயாழினி முதலாமிடத்தையும் அத்தியார் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பிருந்தா இரண்டாமிடத்தையும் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.யாழினி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**13வயது ஆண்கள் 200 மீற்றர்**

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.செந்தீஸ் முதலாமிடத் தையும் வள்ளிபுனம் இரண்டாம்தர உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.சஞ்ஜீவன் இரண்டாமிடத்தையும் இடைக்காடு ம.வியைச் சேர்ந்த வி.கிள்ளிவளவன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண் டனர்.

**15 வயது ஆண்கள் 200 மீற்றர்**

அளம்பில்.ஆர்.சி.வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.றெஜினோல்ட் முதலாமிடத்தையும் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். எஸ்.சதுர்யன் இரண்டாமிடத்தையும் மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். வக்சன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**17வயது ஆண்கள் 200 மீற்றர்**

மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். கபில்சன் முதலாமிடத்தையும் முருகானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். ஜோகன் மதுர ஜீவா இரண்டாமிடத்தையும் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எம். அபிராம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**19 வயது ஆண்கள் 200 மீற்றர்**

சென் ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.கலை வேந்தன் குறொஸ் முதலாமிடத்தையும் உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன்கல்லூரி எஸ். வனஜன் இரண்டாமிடத்தையும் பாத்திமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ. அபினாஸ் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**21 வயது ஆண்கள் 200 மீற்றர்**

சென்.ஜோன்ஸ் கல்லூரி எம். நிலோஜன் முதலாமிடத்தையும் கௌரியம்பாள் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த எஸ். சிறிமுகுந்தன் இரண்டாமிடத்தையும் அறிப்பு றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த ஆர். எஸ். றினோசன் பெர்னாண்டோ மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**21 வயது ஆண்கள் முப்பாய்ச்சல்**

சென் ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்,வேனிலன் மார்க் முதலாமிடத்தையும் சிலாவத்துறை ஜி.எம்.எம்.எஸ்.ஏ.தேவராஜ் இரண்டாமிடத்தையும் காரைநகர் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். கோகுலன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**19 வயது ஆண்கள் ஈட்டி எறிதல்**

பாத்திமா மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.டிலோசன் மஸ்கிறிங்கே முதலாமிடத்தையும் சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பி.தேவக்குமரன் இரண்டாமிடத்தையும் வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை யைச் சேர்ந்த ஏ.பிருதன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**13 வயது ஆண்கள் உயரம் பாய்தல்**

முருங்கன் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஐ.தனுஜன் முதலாமிடத்தையும் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜி. மிதுர்சன் இரண்டாமிடத்தையும் பெரியபண்டிவிரிச்சான் மகாவத்தியாலயத்தை சேர்ந்த என்.சரண்யன்தாஸ் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**15வயது ஆண்கள் ஈட்டி எறிதல்**

மகாஜனா கல்லூரியைச் சேர்ந்த ஆர்.தனுஜன் முதலாமிடத்தையும் தர்மபுரம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.தனுசன் இரண்டாமிடத்தையும் ஸ்கந்தவரோதயா கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மதுசுதன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**21 வயது பெண்கள் உயரம் பாய்தல்**

பலாலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜே.சுகிர்தா முதலாம் இடத்தையும் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.கிரிஜா இரண்டாம் இடத்தையும் உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த என்.சிவரஞ்சினி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**21 வயது ஆண்கள் குண்டு போடுதல்**

புதுக்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சிந்துயன் முதலாம் இடத்தையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சி.ஜெனோஜன் இரண்டாமிடத்தையும் நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.நிதுசாந் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**19 வயது ஆண்கள் முப்பாய்ச்சல்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.செந்தூர்ஜன் முதலாமிடத்தையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பி.கஜலக்ஸ்மன் இரண்டாமிடத்தையும் எஸ்.துஸ்யந்தன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**17 வயது பெண்கள் 1500 மீற்றர்**

. அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.மேரி ஜான்சி முதலாமிடத்தையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.டென்சிகா இரண்டாமிடத்தையும் தட்சணாமருதமடு அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த என்.நிவேதிகா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**17 வயது ஆண்கள் 1500 மீற்றர்**

பாத்திமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.கிளஸ்ரன் முதலாமிடத்தையும் கௌரியம்பாள் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த எம்.சுமணன் இரண்டாமிடத்தையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.றேனுஜன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**19 வயது பெண்கள் 1500 மீற்றர்**

தட்சணாமருதமடு அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த பி.பிரியங்கா முதலாமிடத்தையும் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த எஸ்.விதுசா இரண்டாம் இடத்தையும் பூவரசங்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐ.தாரணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**19 வயது ஆண்கள் 1500 மீற்றர்**

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.ஜெனன்தனன் முதலாமிடத்தையும் பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இ.அன்ரனீஸ் றோச் இரண்டாமிடத்தையும் உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இ.அனுஜன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**21 வயது பெண்கள் 1500 மீற்றர்**

நானாட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.தீபா முதலாமிடத்தையும் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.மகில்நிலா இரண்டாமிடத்தையும் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.நிலாஜினி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**21வயது ஆண்கள் 1500 மீற்றர்**

முருங்கன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.ஹரிகரன் முதலாமிடத்தையும் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர்.கவின் இரண்டாமிடத்தையும் கல்மடு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.நந்தரூபன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**17வயது பெண்கள் ஈட்டி எறிதல்**

சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சங்கவி முதலாமிடத்தையும் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.கஜனி இரண்டாமிடத்தையும் மகாஜனா கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சானு மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**15 வயது பெண்கள் நீளம் பாய்தல்**

பெரியபுலம் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த பி.சாகனா முதலாமிடத்தையும் சேவரியார்புரம் றோ.க. த.க. பாடசாலையைச் சேர்ந்த வி.டிசாந்தினி இரண்டாமிடத்தையும் அதம்பகஸ்கட வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.ஐ.ஜெயவர்த்தன மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

(தொடரும்)

## இன்றைய போட்டிகள்

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 11 பேர் கொண்ட உதைப் பந்தாட்ட போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் போட்டியில் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இருதயராஜா B விளையாட்டுக்கழகம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து காந்திஜி விளையாட்டுக் கழகமும் மாலை 4மணிக்கு நடைபெறும் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄⅄

**யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் றோயல் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து இரணை மாநகர் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (ஃ)**

# JPL வெற்றிக்கிண்ணம் - 2016
# சிறிகாமாட்சி முதலாவது வெற்றி

J.P.L.வெற்றிக்கிண்ணத்திற்காக யு.ஆர்.பிரெண்ட் பவுண்டேசன் 4 ஆவது வருடமாக நடத்திவரும் 20 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றில் 7வது போட்டியில் சிறிகாமாட்சி அணி கே.சீ.சி.சி அணியை 5 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.




முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 20 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றன. சுஜன் - 22, துவாரகன்-23, மோகன்ராஜ்-43, பபிந்திரன்-16, கஜீபராஜ்-13 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் கே.சீ.சீ.சீ.அணி சார்பாக ராகுலன்-02,உத்தமன்-01, தனுஸன்-02,சாம்பவன்-01 இலக்கினைக் கைப்பற்றினர்.

**பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ.அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்த 150 ஓட்டங்களை பெற்றனர்.**

ஜெயரூபன்-22 , சசிகரன்-32, ராகுலன்-13, ஆதித்தன்- 20 ஓட்டங்களைப பெற்றனர். களத்தடுப்பில் சிறிகாமாட்சி அணி சார்பாக ராம்-01, சுஜன்-03, வில்சுநாதன்-01 , தீபன்-01, சுதர்ஸன்-01 விக்கெட்டுககளைக் கைப்பற்றினர்.இப்போட்டியில் மோகன்ராஜ் (சிறிகாமாட்சி அணி ) சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல்விளையாட்டுக்கழகம் 2016 ஆம் ஆண்டிற்கான தர வரிசை பட்டியலுக்கு சிறி காமாட்சி அணி 4.30 புள்ளிகளையும் , கேசீ.சீ.சீ. அணி 2.10 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (ஃ)

# றியோ ஒலிம்பிக்கில் பங்கேற்க செல்லும் இலங். வீரர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

பிரேஸில் நாட்டில் நடைபெறும் 2016 றியோ ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொள்ளும் இலங்கை வீரர்களும் வீராங்கனைகளும் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுடன் சுமுகமாகக் கலந்துரையாடிய ஜனாதிபதி, தாய்நாட்டுக்கு வெற்றியைப் பெற்றுத் தருவதற்காக அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

2016 ஒகஸ்ட் மாதம் 05ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை 17 நாட்கள் 206 நாடுகளைப் பரதிநிதித்துவப்படுத்தி 10 ஆயிரத்து 500 விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் பங்கபற்றும் இவ்விளையாட்டு விழா பிரேஸிலின் றியோ டி ஜெனெய்ரா நகரில் நடைபெறுகிறது.

2016 ஒலிம்பிக் போட்டிகள் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய 306 பதக்கங்கள் தொகுதியையும் 28 ஒலிம்பிக் விளையாட்டுக்களையும் கொண்டிருக்கும்.

அதேபோன்று 1924 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ரக்பி விளையாட்டும் 1904 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கோல்ப் விளையாட்டும் மீண்டும் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளுக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 09 போட்டியாளர்கள் 08 போட்டிகளுக்கு தகுதிபெற்றுள்ளனர்.

இலங்கை வீரர்கள் மரதன் ஓட்டப் போட்டி (ஆண், பெண்) ஈட்டி எறிதல் (ஆண்) பூப்பந்து, ஜுடோ, பாரம் தூக்குதல், நீச்சல் மற்றும் குறிபார்த்துச் சுடுதல் ஆகிய போட்டிகளில் நாட்டுக்கு பெருமையைத்தேடித் தரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

2016 ஒலிம்பிக் விளையாட்டு விழாவை முன்னிட்டு 04 நினைவு முத்திரைகளும் ஒரு தபால் உறையும் தபால் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளதுடன், அதன் முதலாவது முத்திரையும் தபால் உறையும் ஜனாதிபதியிடம் இதன்போது கையளிக்கப்பட்டது.

இந்நினைவு முத்திரை ரூ.8.00, ரூ.10.00, ரூ.35.00 மற்றும் ரூ.50.00 பெறுமதியுடையவையாகும்.

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தபால் சேவைகள் அமைச்சர் அப்துல் ஹலீம் மற்றும் தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஹேமசிறி பெர்னாந்து ஆகியோர்களும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-11)

## 274 கிலோ...

பிரிவினருடன் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ள்னர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள கண்டெயினர் சீனி கொண்டு செல்ல பயன்படுவது எனத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணை நடவடிக்கைகளை போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## ஐ.நாவின் செயற்பாட்டில்...

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பதவிக்கான முதன்மை வேட்பாளராக பெயரிடப்பட்டுள்ள ஹெலன் கிளாக், உலகளாவிய ரீதியாக ஏற்பட்டுள்ள வன்செயல்கள் சம்பவங்களுக்கான அடிப்படை காரணங்களை ஐக்கிய நாடுகள் சபை கண்டறிய வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய செயலாளர் நாயகத்திற்கான போட்டியில், 15 உறுப்பு நாடுகளால், தெரிவு செய்யப்பட்ட மூன்று வேட்பாளர்களில் ஹெலன் கிளாக், முன்னிலை பெறுகிறார்.

இந்த நிலையில் அவர் த கார்டியன் ஊடகத்திற்கு செவ்வியொன்றை வழங்கியுள்ளார் அதில் அவர் கூறுகையில்,

இலங்கை விவகாரத்தில் ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்து திருப்தி அடைய முடியாதுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப் படையினருக்கும் இடையிலான யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் அமைபபின் பங்களிப்பு அங்கு போதுமானதாக காணப்படவில்லை.

அத்தோடு இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான நீதி விசாரணைப் பொறிமுறையிலும் ஐ.நாவின் காத்திரமான பங்களிப்பு இன்னமும் தேவையான நிலையே உணரப்படுகின்றது என ஹெலன் கிளார்க் தெரிவித்தார்.

மேலும் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய பகுதியாக செயற்படும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் குறித்தும் அவர் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த 1945ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்த உலக முறைமையினை முற்றாக மாற்றி சகல நாடுகளின் மேம்பாட்டுக்காக ஐக்கிய நாடுகள் சபை செயற்பட வேண்டியதன் அவசியத்தை உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ளும் எனவும் ஹெலன் கிளாக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், செலவீன குறைப்பு மற்றும் முகாமைத்துவ திறமை தொடர்பாக அவர் வெளிப்படுத்திய கருத்துகளுக்கு, ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிக நிதியினை வழங்கும் அமெரிக்க நிர்வாகம் பெரும் வரவேற்பை வெளிப்படுத்தி இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்தைச் சேர்ந்த 66 வயதான ஹெலன் எலிசெபெத் கிளாக், நியூசிலாந்தில் மூன்று முறை தொடர்ச்சியாக பிரதமர் பதவியை வகித்தார் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. (செ-11)

## தமிழ்-முஸ்லிம் உறவுகளை...

தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைக்கு மக்கள் அங்கீகாரம் தந்திருக்கின்றார்கள். அதில் மத்திய அரசு தலையிடுவது வெறுப்பாக இருக்கின்றது.

மக்கள் ஆணையைப் பெற்ற வடகது மாகாண சபை மற்றும் முதலமைசசரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளாமல் மத்திய அரசு செய்த மிகமோசமான வேலைகளை செய்கின்றது.

தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தும் திட்டமாக இவை இருக்கின்றதோ என்ற சந்தேகம் எனக்கு உருவாகின்றது. நாங்கள் செய்ய வேண்டிய வேலைத் திட்டத்தை செய்யாமல் விட்டால், வேறு தலையீடுகள் வந்து கொண்டே தான் இருக்கும்.

மத்திய அரசு தமிழ் பேசும் மக்களின் மீள்குடியேற்றத்தைச் சரியாகச் செய்யும் என்ற நம்பிக்கை இப்போது எனக்குத் தகர்ந்து விட்டது. மத்திய அரசு சிங்கள, முஸ்லிம் மீள்குடியேற்றத்தை சரியாக செய்திருக்க நினைத்திருந்தால், எங்களையும் - வடக்கு மாகாண சபையையும் அதில் உள்ளடக்கியிருப்பார்கள்.

ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. பெரும்பான்மை சமூகம் குளிர்காய்வதற்கு தமிழ் - முஸ்லிம் சமூகத்தை விறகாகப் பயன்படுத்துவதற்கு நாங்கள் அனுமதிக்க கூடாது. நாங்கள் திட்டத்தை மறுத்தால் மாற்றுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும்.

அதனை நாம் காலம் தாழ்த்தாது உடனடியாக மேற்கொள்ள வேண்டும், காலம் தாழ்த்தி எல்லாவற்றையும் செய்வதனால்தான் இந்தளவு பிரச்சினைகள் தோன்றுகின்றன.

மேலும் இந்த பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் மத்திய அமைச்சரவையில் கேள்வி எழுப்ப முடியுமென்றால் அவர் அதை மேற்கொள்ள வேண்டும் என ஜவாஹிர் தெரிவித்தார். (செ-4)

## பாரம்பரிய சிங்கள கிராமங்...

மாக மத்திய அரசு செயற்படக் கூடாது. இதயசுத்தியுடன் செயற்பட முன்வர வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது. இலங்கைக்கு என்று மீள்குடி யேற்றக் கொள்கை இல்லை. குறித்த பிரதேச மக்களின் விருப்பங்களுக்கு மாறாக அங்கு சட்டவிரோத குடியேறங்கள் பல நடப்பதற்கு இதுதான் காரணம்.

எனவே வடக்கு மாகாணத்திற்கு தனியான மீள்குடியேற்றக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என இதன்போது முடிவு எடுக்கப்பட்டது.

இந்நிலையில் வடக்கு மாகாண மீள்குடி யேற்றக் கொள்கை தயாரிக்கப்பட்டு விட்டது. அது வடக்கு அமைச்சரவையின் ஆலோசனைக்கு இப்போது சமர்பிக்கப்பட்டுள்ளது.

விரைவில் சபையில் சமர்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். இப்படியான சூழலில் ஜனாதிபதி மைத்திரபால சிறிசேனவின் முடிவுக்கு மாறாகவே, மத்திய அரசின் அமைச்சரவை முடிவு எடுத்துள்ளது. எங்களுடைய மீள்குடியேற்றக் கொள்கை தயாரிக்கப்பட்டு முடிவுற்றுள்ள நிலையிலும், இலங்கை அரசின் மீள் குடியேற்றக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ள சந்தர்பத்திலும், மத்திய அரசின் அமைச்சரவை ஏன் இந்தத் தீர்மானத்தை அவசர அவசரமாக நிறைவேற்றியுள்ளது.

ஏதோ உள்நோக்கத்துடன் செயற்படுகின்றார்கள் என்று சந்தேகத்தை உருவாக்குகின்றது. மத்திய அரசின் அமைச்சரவைத் தீர்மானத்தில் பாரம்பரிய சிங்களக் கிராமங்களைக குறிப்பிட்டுள்ளனர்.

பாரம்பரியம் என்றால் அதன் வரை விலக்கணம் எனன? வடக்கில் எங்கே பாரம்பரிய சிங்களக் கிராமங்கள் இருந்தன? ஆராய்ந்து பார்த்தால் அப்படி எதுவும் இல்லை.

தமிழ் - முஸ்லிம் மக்கள் அவர்களது பாரம்பரியக் கிராமங்களில் குடியமர்த்தப்பட வில்லை. தமிழ் மக்களின் பூர்விக - பாரம் பரிய கிராமமாக வவுனியாவில் இருந்த கொக்கச்சான் குளம் கடந்த இரணடு ஆண்டு களுக்கு முன்னர் போகஸ்பெவவாக மாறிவிட்டது. கொக்கச்சான் குளத்தில் தமிழர்கள் 1980 ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்தார்கள்.

அதன் பின்னர் அவர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள். 1983 ஆம் ஆண்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள்.

எனவே வடக்கு மாகாண சபைக்கு சம அந்தஸ்தை - சமபங்களிப்பை, மத்திய அரசின் மீள்குடியேற்றச் செயலணியில் வழங்க வேண்டும். வடக்கு மாகாண சபையின் மீள் குடியேற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம் தொடர்பிலான எந்தவொரு நடவடிக்கைக்கும் மேற்குறித்த செயற பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும்என வடக்கு சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார். (செ-4)

## ஏனைய பல்கலைக்கழகங்களில்...

க்கு தீர்வு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித்தலை வருமான இரா.சம்பந்தன் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

பல்கலைக்கழகத்திற்கான விஞ்ஞான பீட புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் புரிந்துணர்வின்மை காரணமாக ஏற்பட்ட மோதலானது துரதிர்ஷ்டவசமான சம்பவமொன்றாகும்.

அவ்வாறான புரிந்துணர்வின்மைகளை தவிர்த்துக் கொள்வதில் அனைவரும் உறுதியுடன் செயற்பட வேண்டும். எவ்வாறிருப்பினும், அந்த நிலைமையானது மிகவும் துரிதமாக கட்டுப்பாட்டுக்குள் கொணடு வரப்பட்டு விட்டது. அதற்காக சகல மாணவர்களும் பல்கலைக்கழக அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

இத்தகைய மோதல் சம்பவங்கள் தொடர்வதற்கு இடமளிக்கக் கூடாது. அது எமது கடமையாகும். பல்கலைக்கழகம் மீண்டும் விரைந்து திறக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழகத்தின் சில பிரிவுகள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளன. சம்பவம் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன், விசாரரணைகள் நிறைவடைந்ததும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதுபோன்ற விடயங்களை தவிர்த்துக் கொள்வதில் நாம் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும். ஏனைய பல்கலைக்கழகங்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இதில் எதையும் நான் குறிப்பிட்டு கூற விரும்பவில்லை. எனினும். அந்த சம்பவங்கள் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின்கடமையாகும்என இரா.சமபந்தன் குறிப்பிட்டார். (செ-11)

## சமல் ராஜ...

சமல் ராஜபக்சவின் இடத்திற்கு அமைச்சர் மஹிந்த அமரவீர நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிரணிக்கு ஆதரவாக சமல் ராஜபக்ஷ செயற்பட்டு வரும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கூட்டு எதிரணியால் நடத்தப்பட்ட பல பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் சமல் ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்தார்.

இதனிடையில், அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கத்தவர்கள் சிலரை நீக்கிவிட்டு, புதியவர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தேசித்துள்ளதாக கூறபபடுகின்றது. (செ-11)

## பாடசாலை...



இவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகின்றது.

மிதிவெடி அவ்விடத்தில் காணப்படுவதாக பருத்தித்துறைப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் விஷேட அதிரடிப் படையினருடன் சென்று மிதிவெடியை மீட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-5,60)

## வவு.நகை கொள்ளை...

இதேவேளை, சந்தேகநபரான தம்பதிகள் வவுனியா பகுதியிலுள்ள வீடொன்றில் மூன்று சந்தர்ப்பங்களில் கொள்ளையிட்டுள்ளதாகவும், அந்த நகைகளின் பெறுமதி ஐந்து இலட்சத்துக்கும் அதிகம் எனவும் கூறப்படுகின்றது.

மேலும், இவர்களால் கொள்ளையிடப்பட்டதாக ஆபரணங்கள் பல அடகு வைக்கப்பட்டும் பணம் பெறப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் வவுனியா - சிதம்பரபுரம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய தம்பதியினர் என இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)

## யானைக்கால்...

யானைக்கால் நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்ட நாடாக இலங்கையை உலக சுகாதார நிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ளது.

நேற்று வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற உலக சுகாதார நிறுவனத்தின் ஆசிய வலய கண்காணிப்பகத்தினால் இதற்கான அதிகாரப்பூர்வ சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்த சான்றிதழை உலக சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்காசிய பிராந்திய பணிப்பாளரான டாக்டர் பூணம் கெத்திபால் சிங், சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனரத்னவிடம் வழங்கினார்.

இந்த பிரகடனத்தின்படி, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் யானைக்கால் நோயை முற்றாக ஒழித்த நாடுகள் வரிசையில் இரண்டாவது நாடாக இலங்கை இருப்பதாக சுகாதார அமைச்சகம் கூறுகின்றது.

இந்த வரிசையில் ஏற்கெனவே மாலைதீவு முதலாவது இடத்தை பெற்றுள்ளது.

2020ஆம் ஆண்டுக்குள் தனது உறுப்பு நாடுகளில் யானைக்கால் நோயை முற்றாக ஒழிக்க உலக சுகாதார நிறுவனத்தால் வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் யானைக்கால் நோயை ஒரு வீதத்திற்கும் குறைவாக பேணுவதற்கு இலங்கை முன்னெடுத்த செயற்பாடுகளில் காணப்பட்ட முன்னேற்றங்கள் காரணமாகவே இந்த சான்றிதழை பெறமுடிந்துள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கை 0.03 வீதம என்ற பதிவாகியுள்ளதாகவும், இதன் காரணமாகவே இந்த சான்றிதழ் கிடைத்துள்ள தாகவும் சுகாதார அமைச்சகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையில், ஏற்கெனவே மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் யானைக்கால் நோய் பரவும் மாகாணங்களாக அடையாளம் காணப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)


**அரச உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கான கணக்காய்வாளர் பரீட்சைக்கான சிங்கள, ஆங்கில பரீட்சைக்கான வகுப்புக்கள்.**

மேற்படிவகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் வடமராட்சி மாணவர்களின் நலன்கருதி எமது நிறுவனத்தில் பிரபல்யமான ஆசிரியர் குழாமினால் நடாத்தப்படுகின்றன.

**இடம்:** NSB, வங்கியின் மேல்மாடி, கொடிகாமம வீதி, நெல்லியடி.

**தொடர்பு:** 0778760992, 0773443962


## சிங்கள மயமா...

சபையிடம் இருக்கும் சொற்ப அதிகாரங்களையும் பறித்து வருகின்றது எனவும் சாடியுள்ளார். வடக்கு மாகாண மீள்குடியேற்றம் தொடர்பில் மத்திய அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ள செயலணி தொடர்பில் நேற்று நடைபெற்ற மாகாண சபை அமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

05.07.2016ஆம் திகதிய மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவைக் கூட்டத்தில் ரிஷாட பதியுதீன், ஃபயிசர் முஸ்தாபா, டி.எம். சுவாமிநாதன் ஆகிய அமைச்சர்களைக் கொண்ட ஒரு செயலணி நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அதில் மத்திய அரசாங்க அலுவலர்கள் ஆறு பேரும் வடமாகாண பிரதம செயலாளரும் வடமேல்மாகாண பிரதம செயலாளரும் அங்கம் வகிக்க வேண்டும் என்றும் முடிவு எடுத்துள்ளதாகக் கூறினார். மேலும் மீள்குடியேற்றம் பற்றிய நிகழ்ச்சி நிரலில் பாரம்பரிய சிங்கள கிராமங்களும் உள்ளடக்க வேண்டும் என்றும் திருகோணமலை மாவட்டமும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

செயலணி அந்தந்த மாவட்டச் செயலர்களை உள்ளேற்க அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவித்தார். மேலும் செயலணி எடுக்கும் தீர்மானம் காலத்திற்குக் காலம அமைச்சர் வாரியக் கருத்தொருமிப்புக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதை எனக்கு எடுத்துக் காட்டி இச் செயலணியில் வடமாகாண அரசியல் அலகு விடுபட்டுள்ளதாகக் கூறினார்.

மேலும் முன்னைய ஆளுநர் பள்ளிக்கார இருந்த போது மாவட்ட ரீதியாக செயலணி இருக்க வேண்டும் என்றும் சகல அரசியல் கட்சிகளும் அதில் அங்கம் வகிக்க வேண்டும் என்றும் கூறியிருந்ததை எனது கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது பாரம்பரிய காணிகளில் அல்லது வீடுகளில் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்ற கருத்தை முன்னைய ஆளுநர் ஜனாதிபதிக்கான தனது கடிதத்தில் வலியுறுத்தியிருந்ததையும் எனது கவனத்திற்குக் கொண்டு வந்தார். பிரதம செயலாளரால் தரப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் இம்மன்றின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றின் பிரதிகளை சபையின் முன் சமர்ப்பிக்கின்றேன். எங்கள் மத்தியில் எவ்வாறான அரசியல் ரீதியான அல்லது வேறு காரணங்களுக்கான வேற்றுமைகள் இருப்பினும் வடமாகாணத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எமது சபையை நிராகரித்து அல்லது ஓரங்கட்டி மத்தியானது தனக்குத் தகுந்தவாறு காரியங்களை எடுத்துச் செல்வதை நாம் எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

வடமாகாண இடம்பெயர்ந்த மக்கள் மட்டுமல்ல இந்தியாவில் இருந்து வருபவர்களையும் அவர்களின் பாரம்பரிய இடங்களில் குடியமர்த்தாது தான்தோன்றித்தனமாக மத்திக்கு உகந்த முறையில் அவர்களைக் குடியமர்த்தக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இந்தக் காரியத்தால் உருவாகியுள்ளது. பெயருக்கு வடமாகாணசபை பிரதம செயலாளரை உள்ளடக்கி மத்தியே மேற்படி காரியங்களைக் கொண்டு செல்ல உத்தேசித்துள்ளது. இது வடமாகாண மக்களின் கருத்துக்களை உதாசீனம் செய்வதற்கு ஒப்பாகும். எம்மிடம் கேட்காமல் எம்மக்களின் மீள்குடியேற்றம் நடைபெறுவது பொது மக்களுக்குப் பல பின்விளைவுகளைக் கொண்டு வரக்கூடியது.

இன்று சர்வதேச மட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் சம்பந்தமாகப் பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. முக்கியமாக பின்ஹெய்ரோ கோட்பாடுகளின் படி வெவ்வேறு காரணங்களினால் இடம் பெயர்ந்த மக்கள் தமது முன்னைய பாரம்பரிய இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது பற்றி சில நாட்களுக்கு முன்னர் என்னைச் சந்தித்த IOM (சர்வதேச இடம்பெயர்வுகளுக்கான நிறுவனம்) சர்வதேச நிபுணத்துவப் பிரதிநிதியுடனும் நான் பேசியிருந்தேன். மீள்குடியமர்வுகள் எம்முடன் இணைந்து சர்வதேச கொள்கைகளுக்கு அமைவாக நடைபெற வேண்டும் என்ற என் கருத்துக்களை Igor Cvetkovski என்ற நிபுணர் ஏற்றுக் கொண்டு அவற்றை உறுதிப்படுத்துவதற்காகவே இலங்கை வந்துள்ளதாக அறிவித்தார்

இந்தத் தருணத்தில் இவ்வாறான மத்திய அரசாங்கத்தின் உதாசீனமும் தான்தோன்றித்தனமும் கண்டனத்திற்கு உரியது. ஒரு பக்கம் சர்வதேசம் பாதிக்கப்பட்ட மக்களின் நலனை வலியுறுத்துகிறது. மறுபக்கத்தில் மத்தியின் அதிகாரத்தை நிலைநாட்டுவதே குறிக்கோளாக இருந்து வருகின்றது. செயலணியில் யார் யார் இடம்பெற வேண்டும் என்பதை விட மத்திய அரசாங்கம் செயலணியை உருவாக்க முன்னர் எம்முடன் பேசியிருக்க வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டம் வந்த பின் எமக்குக் குறித்தொதுக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக அல்லது உடன்பட்ட விடயங்களில் மத்தியானது மாகாணத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற கோட்பாட்டை உதாசீனப்படுத்தியே நடந்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)


"வெற்றி நிச்சயம்"

இறுதி நேரத்தில் வந்துவிட்டது

கொழும்பு எக்ஸ்பிரஸ் வெளியீடு



தரம் - 05

2016

21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு

முற்றிலும் எதிர்பார்க்கக்கூடிய மாதிரி

வினாத்தாள்களும் விடைகளும்

கிடைக்கும் புத்தகசாலைகள்

250/=

- பூபாலசிங்கம் - யாழ்
- லக்சுமி - யாழ்
- யாழ் புத்தகசாலை - யாழ்
- துர்க்கா - சுன்னாகம்
- மொடேன் - நெல்லியடி
- அறிவுநதி - கனகபுர வீதி கிளிநொச்சி
- பொதிகை - தனங்கிளப்பு சாவகச்சேரி
- அன்னை - யாழ்
- சாரங்கா - யாழ் இந்து மைதானம் அருகில்
- சித்திவினாயகர் - சுன்னாகம்
- அருள்நாயகி - கொடிகாமம்
- வர்ணா - கிளிநொச்சி சந்தை

தொடர்புகளுக்கு

077 844 8763 / 077 593 7166


## மக்கள் போராட்ட...

ணத்தின் மீள்குடியேற்றத்திற்கான செயலணி தொடர்பிலான விவாதத்தின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால், கடந்த யூலை மாதம் நடைபெற்ற மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவைக கூட்டத்தில் ரிஷாட் பதியுதீன், ஃபயிசர் முஸ்தபா, டி.எம். சுவாமிநாதன் ஆகிய அமைச்சர்க ளைக் கொண்ட ஒரு செயலணிவடக்குமாகாண மீள்குடி யேற்றத்திற்காக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும்,

அதில் மத்திய அரசாங்க அலுவலர்கள் ஆறு பேரும் வடமாகாண பிரதம செயலாளரும் வடமேல்மாகாண பிரதம செயலாளரும்அங்கம் வகிக்க வேண்டும் என்றும் முடிவு எடுத்துள்ளமை தொடர்பிலும், மேலும் மீள்குடியேற்றம் பற்றிய நிகழ்ச்சி நிரலில் பாரம்பரிய சிங்கள கிராமங்களும் உள்ளடக்க வேண்டும் என்றும் திருகோணமலை மாவட்டமும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் கூறி,

இதனை உடனடியாக நிறுத்தாவிட்டால் பாரிய பின்னடைவுகளை வடக்கு மாகாண சபையும் மக்களும் எதிர்நோக்க வேண்டி இருக்கும் எனவும், குறித்த செயலணி மாகாண சபையின் ஆலோசனையில் நியமிக்கப்பட வேண்டும் எனவும், கூறி அதற்கான சான்றுகளையும் அவையில் சமர்ப்பித்தார். இந்த விடயத்தின் மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் உரையாற்றும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் தெரிவிக்கையில், அதிகாரப்பகிர்வு என்று கூறிக்கொண்டு வடக்கு மாகாண சபையை தந்துவிட்டு, இப்போது அதிகாரங்களை பறித்து கொள்கின்றது. நல்லிணக்கம் என கூறிக் கொண்டு தமிழ் மக்களுடைய வாழ்விடங்களை சிங்கள மயமாக்கலுக்கு உட்படுத்தி வருகின்றது.

எமது மக்களுடைய மீள்குடியேற்றத்தை நாங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். அவர்கள் தீர்மானிக்க வேண்டியதில்லை. ஆகவே இந்த செயலணிவடக்குமாகாண சபையின் ஆலோசனையோடு எமது முதலமைச்சரினையும் உள்வாங்கி உருவாக்கப்பட வேண்டும். வடக்கு அமைச்சரவைக்கு மாறான முடிவை வடக்கு மாகாணம் தொடர்பில் மத்திய அரசு எடுக்குமாயின் அதனை நம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

தமிழ் மக்களுடைய காணிகள் இன்றும் இராணுவ

04ஆம் பக்கம் பார்க்க....


பல்கலைக்கழகம் செல்ல முன்னரே வேலைவாய்ப்பு

(வேலை செய்து கொண்டே பட்டக்கல்வியினை பூர்த்தி செய்யலாம்)

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களுக்கு

வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வி

O/L உடன் Business & Hotel Management UK Certified

CERTIFICATE ➔ DIPLOMA ➔ DEGREE

With FREE >>> English Course

2016 A/L மாணவர்கள் JULY 30 ற்குள் பதிவினை மேற்கொண்டு 50% கட்டணக் கழிவினை வெல்லுங்கள்!

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி

(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch

அனுமதிகளுக்கு: 077 3616 798

SIKARAM ACADEMY

Business - Hospitality - English

SCHOOL of HOSPITALITY

www.sikaram.lk

Sikaram Academy

021 222 0011

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)



**A/L வரலாறு-2016**

**மாபெரும் கருத்தரங்கு**

இடம்: DMI யாழ்ப்பாணம்

காலம்:23.07.2016 (சனிக்கிழமை)

24.07.2016 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்:காலை 8 தொடக்கம் மாலை 3 மணிவரை

**ஆசிரியர்கள்:**-M.பத்மன் M.A

S.சுஜிகரன் B.A, S.தாஸ் B.A

(அ-5257)



**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தண்ணீர் விற்பனை நிறுவனத்திற்கு வாகனத்தில் சென்று தண்ணீர் போத்தல்களை ஏற்றி இறக்குபவர்கள் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

0769865238

(5406)



**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் காங்கேசன்துறை பிரதான வீதியில் கடைத்தொகுதியுடன் கூடிய 12 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:-0769690597

(5272)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.